Annual Subscription Rs. 6 Vol. 7 No 51 24th January 1937 Price 2 As

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சென்னை விமானச் சங்கத்திற்கு வந்துள்ள புதிய ஆகாய விமானத்திற்கு சென்னை கவர்னர் மனைவி லேடி மார்ஜோரி எர்ஸ்கின் "மார்ஜோரி" என்று பெயரிட்டார்.



சென்னைக்கு விஜயம் செய்துள்ள தென்னாப்பிரிக்கப் பிரமுகர்கள். நேட்டால் ஆதம்ஸ் காலேஜ் அதிபர் டாக்டர் இ. எச் ப்ரூக்ஸ், மிஸ்டர் வி டி ஜாபூ, ரெவரண்ட் ஜே. ஜே. ஆர். ஜோலோப்.

"உயில்"

(டி. வி. ராமமூர்த்தி)

வாழ்க்கை என்னும் பெருங்கடலில் நீந்திநீந்தி கை அலுத்துப் போனவர்களோ கால் ஓய்ந்து போனவர்களோ 'கண்மூடி மௌனியாகி' துறவி வாழ்க்கை நடத்துவதில் பிரேமை கொண்டிருந்தால் அதைப் பற்றி எவருக்கும் கவலையில்லை. அதில் ஏதோ அர்த்தமும் இருக்கிறது என்றுகூட நம்பலாம். ஆனால் வாழ்க்கையின் சுகபோகங்கள் இன்னின்னவை என்றுகூட பட்டுத் தெரியாத ராஜாராம் துறவி வாழ்க்கையில் மோகங்கொண்டது எல்லோருக்கும் வியப்பாயிருந்தது. ஒவ்வொருவரும் தத்தம மனப்போக்கின்படி அதற்கு ஏதேதோ காரணம் கற்பிக்கலாயினர். ஆனால் உண்மை எவருக்கும் புலப்படவில்லை.

வழக்கம்போல ராஜாராம ஒரு நந்தவனத்தில் ஏதோ சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான். அங்கு காண்பதற்கு இனிய காட்சிகளும் அழகான 'குரோடன்ஸ்' செடி கொடிகளும் காண்பவர் மனதைக்கவரும்வண்ணம் தோற்றமளித்தன. ஆனால் ராஜாராமுக்கு இவை ஒன்றும் பெருமகிழ்ச்சி அளிக்கவில்லை. இவைகளைக் கண்டு ஓய்வைத் தேடி வந்த இவன் மனம்கூட இயற்கைக்கு மீறிய கடல் அலைகளைப்போல ஒன்றன்பின் ஒன்றாய் வெவ்வேறு எண்ணங்களை ஆராய்ந்தது. புதுமையான காட்சி ஒன்றினைக் காண்பதென்றால் அது மனதிற்கு ரம்மியமாய் இருக்கும். ஆனால் நல்ல காற்று வாங்க வேண்டும் என்ற ஒரே கருத்துடன் ஒரேவிதமான காட்சியைத் தினம் பார்ப்பதென்றால் உண்மையில் அது மனதிற்கு வெறுப்பை அளித்தது.

ஒரு எம். டி. பட்டம்பெற்ற டாக்டரின் யோசனையை மீறி நடக்கலாம் என்றால் அதுவும் இயலவில்லை.- இதுமாதிரி டாக்டரின் உத்திரவுகளுக்குக் கீழ்ப் படிந்தே கொஞ்சம் கொஞ்சமாய் இறப்பதைவிட ஒரேயடியாய் இறந்தால் அது எவ்வளவோ மேல் என்றுகூட அவன் எண்ணினான். அவனுக்கு வயது முப்பதுக்கும் ஓரிரண்டு குறைச்சலாகவே இருக்கும். ஆனால் அவனை இப்பொழுது பார்ப்பவர்கள் நாற்பது அல்லது நாற்பத்தி ஐந்தாவது மதிப்பார்கள். தான் என்ன நிலையை அடையப் போகிறோம் என்பதை அறியாமலே அவன வாழ்நாட்கள் ஒவ்வொன்றாய்க் கழிந்து வந்தன. இம்மாதிரி சிந்தையுடன் பதினைந்து நிமிஷ நேரம் கழிந்தது.

யாரோ வரும்காலடிச்சப்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தான். இவன் சாதாரணமாய் எவரும் வாராத தனித்த இடத்தில்தான் உட்கார்ந்திருந்தான். அங்கும் இளம் வயதுடைய யௌவன மடந்தை ஒருத்தி அதி வேகமாய் விரைந்து வருவதைக் கண்டான். அவள் வந்த அவசரத்தில் ராஜாராமைக் கூடக் கவனிக்கவில்லை. ஆனால் கிட்ட நெருங்கியதும் திரும்பிப்பார்த்தான். அவனது களங்கமற்ற ஹ்ருதய வானத்தில் அவள் உருவம் ஒரு மின்னலைப்போல் பளிச்சென்று தோன்றி மறைந்தது. தான் இப்பொழுது இருக்கும் நிலையில் அவளிடம் போய்ப் பேச ராஜாராம் துணிவு கொள்ளவில்லை.

"அவள் அழகிய வதனம்! களங்கமற்ற கரிய கண்கள்! அவளை மணப்பவன் ஒரு அதிர்ஷ்டசாலியே" என்று எண்ணினான். ஐந்து நிமிஷம் கழித்து அதே பாதையில் இருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் வந்தனர். இப்பொழுது அப்பெண்ணோடு கூட ஒரு கட்டமைந்த அழகிய வாலிபனும் வந்துகொண்டிருந்தான். அவன் அவளுக்கேற்ற காதலன்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்படி நினைக்க இவன மனம் இடம் தரவில்லை. காரணம் பொறாமையே என்பதையும் இவன் அறியாத அவ்வளவு முட்டாளல்ல?

"பங்கஜம்! உண்மையில் அது மாதிரி நடக்கும்படி நாம் விட்டு விடுவதா? முடியாது! நம் விஷயம்......" என்று அவன் ஏதோ கூறிக்கொண்டு வந்தான்.

பங்கஜம்! ஆம் அவள் முகம் தாமரை மலரை ஒத்து அவ்வளவு அழகாய்த்தானிருந்தது! என்ன பொருத்தமான பெயர்! எதை அவர்கள் நடக்கும்படி விட விரும்பவில்லை. என்னவென்று ராஜாராம் அறியவிரும்பினான். ஆனால் அன்னியரிடம் அதுவும் இளம் காதலரிடம் எப்படிப் பேச்சுகொடுப்பது! சற்று தயங்கினான். மனம்இடம் கொடுக்கவில்லை. பிறகு சிரமத்துடன் எழுந்து வீட்டை அடைந்தான். இரவு முழுவதும் அவனைத் தூக்கம் அடையவில்லை ஏதோ சிந்தனை. பாவம்! ஏக்கம் இருக்கும்வரை தூக்கம்எப்படி வரும்?

மறுநாள் வழக்கம்போல் அவன் நந்தவனத்தை அடைந்தான். குயிலின் குரலைக் கண்டு மகிழ்ச்சி அடையாதவர் யார்? ஆனால் எதிரிலிருந்த குயிலையும் நோக்கி வெறுப்பினால் கல்லை எறிந்தான். அதுவும் கூவிக்கொண்டே பறந்துவிட்டது! இப்பொழுது அவன் கோபம் டாக்டரின்மேல் தாவிற்று. முதலில் ஜலதோஷத்திற்கு மருந்து கேட்கப் போய் அது இப்பொழுது எவ்வளவு மோசமாய்ப் போய்விட்டது; 'தலைவலிபோய்: திருகுவலி வந்தது' என்ற பழமொழியும் இவனால் தான் வந்தது போலும்! இன்றோ நாளையோ இவனை மரணம் எதிர் நோக்குவது அவனுக்கு நன்றாய்த் தெரியும். இவனுக்கு நெருங்கிய உறவினரோ சிநேகிதரோ கிடையாது. அப்படியே இரண்டொரு சிநேகிதர்கள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் இவன் மரணத்தால் அவர்கள் அதிகமாய் பாதிக்கப்பட மாட்டார்கள். பெண்டு பிள்ளைகள்! அவரவர்களுக்கு வேண்டிய விசாரத்தைக் கடவுள் கொடுக்கத் தவறவில்லை! பாரபட்சமற்ற புண்ணியாத்மா!

இவன் கையில் கொஞ்சம் ரொக்கம் இருந்தது. அவன் தன் ஞாபகார்த்தமாகப் பணத்தை என்னவிதமாகப் பயன்படுத்தலாம் என்று யோசனை செய்தான். ஒன்றும் புலப்படவில்லை. தான் வழக்கமாகப் பொழுது போக்கும் வாசகசாலைக்குப் புஸ்தகங்கள் வாங்க தன் பணத்தைக் கொடுப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் இவனுக்குத் தோன்றவில்லை. நேற்று அந்தப்பெண்ணை அங்குகண்ட நேரம் மாலை ஐந்து மணி இருக்கும் தன் கைக் கடிகாரத்தை நோக்கினான்: ஐந்தடித்து ஐந்து நிமிஷம்! நிமிர்ந்து நோக்கினான். பாதையின் ஒரு ஓரத்தில் புதுச்சேரி சில்க் உடையில் ஒய்யாரமாகச் செல்லும் ரமணியைக் கண்டான். என்ன வசீகரமான முகம்! அவளுக்குத்தான் கவலை என்பதே இல்லையா?

இப்படியே யோசனை செய்து கொண்டிருக்கும்பொழுதே அரைமணி நேரமாய் விட்டது. யாரோ இருவர் ரகசியமாகப் பேசுவதுபோலிருந்தது. ராஜாராம் உற்றுக் கவனித்தான். புஷ்பச் செடிகளின் மத்தியில் இருந்த பெஞ்சு ஒன்றின்மேல் காதலர் இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்:

"உன் தகப்பனார் இப்படி எவ்வளவு காலம போக்குவார் பார்க்கலாம" என்றான் ஆடவன். அவள் உடனே சடக்கென்று "ஐயோ? என் தகப்பனாரை நீங்கள் அறியாது பேசுகின்றீர்களே! அவர் இஷ்டம்......" என்று ஏதோ கூறவந்தவள் மேலே பேச முடியாமல் துக்கம் நெஞ்சை அடைத்தது.

"ஆனால் நாம் ஒருவரை ஒருவர் இப்படிமனதாரக் காதலிப்பதை அறிந்தால் ஒருவேளை அவர் சரி என்று சொல்லக் கூடும்"

"எல்லாம் அவருக்குத் தெரியும். ஆனால் அவர் கண்டிப்பானவர் என்பதும் தான் உங்களுக்குத தெரியுமே" என்று குயிலை ஒத்த குரலில்—ஆனால் சோகமும் துக்கமும் கலந்த குரலில்—அவள் கூறினாள். ராஜாராமிற்குக் கொஞ்சம்கூட மனதிற்குப் பிடிக்கவில்லை. காதலர் இருவர் மனம் விட்டுப் பேசுவதை அவன் கேட்க விரும்பவில்லை. இவன் இருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை. இப்பொழுது எழுந்து சென்றால் அவர்கள் பார்த்துவிடுவார்கள். தான் இருப்பதை அவர்களுக்கு ஜாடையாய் அறிவிக்க மெதுவாய் இருமலாமா என்று நினைத்தான். ஆனால் இதுவரை தான் மௌனமாய் இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்டதை அவர்கள் அறிந்துகொண்டால் என்ன அவமானம்! மேலும் தொடர்ந்து அவர்கள் பேசு

வதைக் கேட்கவும் அவன் விரும்பவில்லை. இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தான்.

இதுவரை பேசாமல் இருந்த அவள் "என் தகப்பனருக்கு பணம்பேரிலேயே திருஷ்டி! நம் காதலைத் தடை செய்ய அவருக்கு விருப்பம் இல்லாமல் போயினும் தங்கள் எளிய நிலைமையை நோக்கி என்னை தங்களுக்கு மணம் செய்து கொடுக்க மறுக்கிறார். இந்த உண்மை தங்களுக்குத்தெரியாதது அல்ல. இதற்கு என்ன செய்வது?" என்று கவலையோடு வினவினாள்.

"இவ்வளவுதானே! நான் ரங்கூனுக்கோ பினாங்குக்கோ சென்று பணம் சம்பாதித்து வருகிறேன். ஐந்து அல்லது பத்து வருஷம் மனம் பொறுப்போம். வேறு வழியில்லை" என்று அவன் படபடத்துக் கூறினான்.

அவள் அழகிய முகம் திடீரென மாறுதலடைந்தது. இதுவரை கவலையுடன் கூடிய போதிலும் ஒளி வீசிய அவள் முகத்தில இப்பொழுது பயமும் சோகமும் குடிகொண்டது.

என்ன சொன்னீர்கள்! வெளிநாடா? ஐந்து அல்லது பத்து வருஷம் மனம் தாளுவது! அது நடக்கக்கூடிய காரியமா? வேண்டாம், ஐயோ! அதுமட்டும் செய்ய வேண்டாம்" என்றாள்.

இன்னும் அவர்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். ராஜாராமுக்கு மனம் தாளவில்லை. பாழும் பணம் அவர்கள் இன்பத்திற்கு ஓரே தடையாயிருந்தது! அடபாழும் பணமே! நீ செய்யும் கூத்துதான் என்ன? உன்னால் தாங்க முடியாத கஷ்டங்களை அநுபவிப்பவர்களையாவது நீ அறிவாயா? அப்பொழுதுதான் ராஜாராமுக்கும் திடீரென ஒரு எண்ணம் தோன்றியது.

அவர்கள் பணமில்லாமல் அவஸ்தைப் படுகின்றார்கள். இவனிடம் அளவிற்கு மீறிய பணம் தேவையில்லாமல் இருந்தது!

வாசகசாலைக்குப் புஸ்தகங்கள்! யாரோ எப்பொழுதோ எழுதிய புஸ்தகங்களினால் யாருக்கு என்ன பயன்? காதல், வாலிபம், இன்பம், எல்லையற்ற மகிழ்ச்சி இவைகளைவிட அது மேலானதா? நாமோ இன்றோ நாளையோ சாகப்போவது நிச்சயம். அதற்குள் இவர்கள் சந்தோஷமாகமணம் செய்துகொள்வதைப் பார்த்துவிட்டாவது போனால் நமக்கும் ஒரு மனச்சாந்தியாயிருக்கும் என்ற எண்ணம் இவனைப் பலமாய் பிடித்துக்கொண்டது, "ஆ! அவள் யாரோ எவளோ என்பதை அறியாது அவளுக்கு உதவ நினைப்பது எப்படி நடக்கும்?" என்று யாரோ இவனைக் குத்திக்கேட்பதுபோல அவனுக்குத் தோன்றியது.

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு போய்ப்பார்த்தான். என்ன அதிர்ஷ்டம்! குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தது என்று சொல்வார்களே அதைப்போலிருந்தது. கீழே விழுந்திருந்த ஒரு காகிதத் துண்டு காலில் இருந்த செருப்பில் மாட்டிக்கொண்டது. அதை எடுத்துப் பார்த்தான். ஒரு கவரின் கிழிந்துபோன துண்டு. அதில் எழுதப்பட்டிருந்த பெயர் என்ன என்பதைக் கவனித்தான்.

பங்கஜம் c/o
S. புவனேஸ்வ,
மாம்பல.

என்று இருந்தது!

இனிமேல் நடக்கவேண்டிய வேலை அவன் கண் முன் தோன்றியது. வக்கீலைக் கண்டு அவர்கள் பேரில் தன் பணத்தை எழுத முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான். நாளை நாளை என்பீராகில் நமனுடைய முறைநாள் ஆவதும் அறியீர் நம்முடைய முறைநாள் ஆவதும் அறியீர் என்பது அவன சிந்தாந்தம்.

உடனே நினைத்த காரியத்தைச்செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று புறப்பட்டான். செய்ய வேண்டியதைப் பற்றி எண்ணிக் கொண்டே அவன் நெடுந்தூரம் வந்துவிட்டான். எதிரில் "ஈஸ்வரன் அண்ட் சங்கரன் ஹைகோர்ட் வக்கீல்கள்" என்ற பலகையைக் கண்டதும் இவன் கால்கள் மேலே போக மறுத்தன.

"ஈஸ்வரன் அண்ட் சங்கரன்" என்பவர்கள் சென்னையிலேயே மிகவும் கியாதி பெற்ற வக்கீல்கள். அதனால் யோசனை செய்யாமல் உள்ளே நுழைந்து 'பிரைவேட்' என்று குறித்த ஆபீஸ் அறையை அடைந்தான். நடுத்தர உயரமுள்ள ஒரு மனிதர் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம் என்றாலும் அவரது கம்பீரமான முகம் அவர் உண்மையில் பெரிய அறிவாளி என்பதைக் காட்டிற்று.

"மிஸ்டர் ஈஸ்வரன் என்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்தான் ராஜாராம். "ஆமாம். ஆனால் தாங்கள் யாரோ தெரியவில்லையே" என்று அவர் கூறியதும் ராஜாராம் "என்பெயர் ராஜாராம். உயில் சம்பந்தமாய் தங்களிடம் வந்தேன்" என்றான்.

உடனே வக்கீல் "சரி, அப்படியானால் உள்ளே வாருங்கள்" என்று கூறி அவனுக்கு ஓர் ஆசனமளித்து தானும் உட்கார்ந்தார். அப்பொழுதுதான் ராஜாராமுக்கு உணர்வு திரும்பியது. ஊர்பெயர் தெரியாத ஒரு பெண்ணின் நிமித்தம் தன் பொருள் பூராவையும் எழுதி வைப்பது என்றால் வக்கீல் என்ன நினைப்பார்? அடி முட்டாள் என்று நினைப்பதில் சந்தேகமா? ஆனால் வந்தது வந்தாய்விட்டது. காரியமோ ஆக

உன்னுடைய தோல் வியாதிகளையும் ரணங்களையும் ஆற்றுவதெப்படி?

வழியிற் போரவர்கள் பார்ப்பதினால் தாழ்மைப் படுவதேன்? உன்னுடைய முகம், தோல் வெடிப்பினாலாவது, ரணத்தினாலாவது, சினப்பினாலாவது உருவழிந்திருந்தால் குடிகூரா (Cuticura) உபசாரணை செய்தால் உன்னுடைய தோல் சீக்கிரமாய்ச் சுத்தமாகும். முதல் பூசும்போதே புண்ணை ஆரம்பிக்கும். சொறியும், நமைச்சலும், எரிப்பும் உடனே தணியும். பருவுகள் உலர ஆரம்பிக்கும், கரப்பானும் வாடிப்போகும். கண்ணாடியில்பார்த்தால் ஒவ்வொருதினமும் தேற்றமாகிறது தெளிவாகத் தெரியும். கொஞ்ச நாளைக்குள் உருவழிப்பெல்லாம் போய் நோயின் அடையாளம் முழுதலும் மறைந்து போம்.

இந்த முறைகளைப் படித்து உபயோகிக்கவேண்டும். நோயிருக்கும் பாகத்தைக் குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வெந்நீர் வார்த்துக்கழுவி, மெதுவாய் உலரத் துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசாரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். இது தவறாத மருந்து. புண்ணாற்றி, நோய் தீர்த்து, புண்ணாற்றும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்து அங்கிருக்கும் கருமிப் புழுக்களைக் கொன்று, நோய் வைத்திருக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலைக்கும் புண்களை ஆற்றி தோலுக்குச் சுகமான வழியை உண்டு பண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும்.

Cuticura
OINTMENT AND SOAP
குடிகூரா
தைலமும் சோப்புக்கட்டியும் எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW.

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய சீல்களும் இருக்கிறதாகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)		ரூ. 2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)		,, 2—0—0
3.	கதைக்கொத்து		,, 0—8—0
4.	பகவத் கீதை		,, 0—8—0
5.	கட்டுரைகள் பகுதி	1 தத்துவம்	,, 0—10—0
	,, ,,	2 மாதர்	,, 0—8—0
	,, ,,	3 கலைகள்	,, 0—8—0
	,, ,,	4 சமூகம்	,, 0—12—0

6. Bharathi and his works
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

வேண்டும். கொஞ்சம் யோசித்தான், வக்கிலும் அவரப்படுத்தினார். வேறு ஏதோ அவருக்கு ஜோலி இருக்கலாம்.

"சரி! தாங்கள் வந்த காரியத்தை இனிமேல் சொல்லலாம்" என்று வக்கில் ராஜாராமிடம் சொல்லவும், அவன் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் தவித்தான். ஆனாலும் இனியும் காலம் தாழ்த்துவது சரியல்ல எனக்கருதி "நான் ஒரு உயில் எழுத விரும்புகின்றேன். உண்மை என்னவென்றால் நான் முன்பின் அறியாத ஆனால் பண நிமித்தம் வெகுவாய் கஷ்டப்படும் ஒரு பெண்ணுக்காக என் பொருளை எல்லாம் எழுதிவைத்துவிட்டுப் போக விரும்புகின்றேன்" என்றான்.

"ஊம் சரி" என்று மேலே பேச அவனைவிட்டு விட்டு வக்கில் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார்.

தன்னை வக்கீல் கேவலமாய் நினைக்கிறார் என்று அறிந்துகொண்ட ராஜாராம் அவரை நோக்கி "தாங்கள் நினைப்பது சரியல்ல. அந்த பெண் ஒருவனை காதலிக்கிறாள். வயது சென்ற தகப்பனோ ஒரு கருமியாயிருக்கின்றான். தன் ஒரே மகளை ஏழைக்குக் கலியாணம் செய்து கொடுக்க மறுக்கிறான். அதனால் அவள் பாவம் மிகவும் வருத்தப்படுகிறாள்" என்று கூறினான்.

வக்கில் உடனே "சரி. நீங்கள் சொல்லுவதுபோல் அவன் ஏழையாயிருந்தாலும் என் சம்பாத்திய புருஷனாய் இருக்கக்கூடாது?" என்று கேட்டார்.

ராஜாராம் "அவன் எங்கேயாவது கடல் கடந்து போய் சம்பாதித்து வருகிறதாகத்தான் சொல்கிறான். ஆனால் அந்தப் பெண் அவனை விட்டுப்பிரிய விரும்பவில்லை" என்று பதில்சொன்னான்.

அதைக் கேட்ட வக்கீல் சிரித்துக்கொண்டே "சரிதான் ஐயா! உம்முடைய உயில் பிரகாரம் உம் ஆஸ்தி முழுவதும் அவனைச்சேருவதாயிருந்தாலும் அதற்காக அவன் இன்னும் எத்தனையோ வருஷங்கள்வரை பொருத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதையாவது நீர் யோசித்திருக்கிறீரா? பெண்ணின் தகப்பன்தான் வயது சென்றவன் என்கிறீரே! அவர் அதற்குள் இறந்துவிட மாட்டாரா? பிறகு காதலர் இருவரும் மணம் செய்துகொள்வதில் என்ன விதமான தடையிருக்கப் போகிறது?" என்றார்.

ராஜாராம் தன்னைப்பற்றி அவர் பூராவும் சரியாய் அறிந்துகொள்ளவில்லை என்ற நோக்கத்துடன் "ஸார் என் தேகஸ்திதி தங்களுக்குத்தெரியாது. நான் ஒரு நோயாளி! இன்றோ நாளையோ சாகக்கிடக்கிறேன். இன்னும் ஜாஸ்தியாய் வைத்துக்கொண்டாலும் ஒரு மாதத்திற்குள் அவள் என்பணத்தை அடைவதில் யாதொரு ஆக்ஷேபணையும் இருக்காது என்பது உறுதி" என்று கூறினான்.

இதைக்கேட்ட வக்கில் "ஐயா! சற்றுப்பொறும். அவசரப்பட்டு கூறுகிறீர்கள். எங்கள் குடும்ப டாக்டரை தருவிக்கிறேன். பிறகு பேசிக்கொள்ளலாம் என்று கூறிக்கொண்டே டெலிபோனில் டாக்டரைக் கூப்பிட்டு சொல்லி விட்டு தன்னிடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார். ராஜாராம் திக்பிரமை அடைந்தவன்போல் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு ஆச்சர்யமாயிருந்தது "உயில் எழுதவேண்டும் என்று சொன்னால் இந்த மனுஷ்யன் டாக்டரைத் தருவித்து உடம்பைப் பரிசோதிக்கிறேன் என்கிறாரே! சரி இருந்தாலும் அந்த டாக்டர்தான் என்ன சொல்லுகிறார் பார்க்கலாம்!" என்று யோசித்துக்கொண்டே வக்கீலைப் பார்த்து "ஸார், அந்தப் பெண் தங்கமான பெண். அவள் காதலனும் அவளிடத்தில் மிகவும் பற்றுதல் உடையவன்போல்தான் காணப்படுகின்றான். அநியாயமாய் அவன் ஏழை என்ற ஒரே காரணத்தால் தகப்பனால் அவள் அவமதிப்படுகிறாள்" என்று கூறி வருத்தப்பட்டான்.

வக்கில் "பெண்ணின் தகப்பன் என்கிறீரே, அவர் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"எஸ். புவனேஸ்வரன்"

"புவனேஸ்வரனா? அவருடைய வாசஸ்தலம்?"

"மாம்பலம்"

"பெண்ணின் பெயர் என்னமோ."

"பெண்ணின் பெயர் பங்கஜம்".

"பங்கஜம்! புவனேஸ்வரன் மகள்! இருப்பது மாம்பலம்!" என்று கூறி வக்கீல் திடுக்கிட்டார். திருப்பித் திருப்பி அவர் அப் பெயர்களைக் கூறுவதைக் கேட்டு ராஜாராம் "ஆம்! என்ன ஆச்சர்யமடைகிறீர்? அதில் என்ன அதிசயம்?" என்று கேட்டான். வக்கிலும் தன்னை சமாளித்துக்கொண்டு 'ஒன்றுமில்லை! எனக்கு அவர்களை ஒரு வேளை தெரிந்திருக்கலாமோ என்று யோசித்தேன். ஞாபகத்திற்கு வரவில்லை! சரி; அந்த விலாசம் உமக்கு எப்படித் தெரியும்? அவர்கள் கூறினார்களோ?" என்று கேட்டார்.

"இல்லை; இந்தக் கிழிந்த காகிதத்திலிருந்து தெரிந்துகொண்டேன் என்று கூறிக்கொண்டே, கிழிந்துபோன அந்த துண்டுக் கவரை அவரிடம் கொடுத்தான். வக்கிலும் அதைப்பார்த்துவிட்டு "அந்த புவனேஸ்வரன் என்கிறவர் என்ன ஆஸ்திவானா" என்று ராஜாராமைக் கேட்டார்.

"அப்படித்தானிருக்க வேண்டும். அவரே ஏழையாயிருந்தால் ஏன் அவர் ஏழையின் சம்பந்தமே கூடாது என்று ஒரேயடியாக மறுத்துக்கூறப்போகிறார்? அதுவும் அவள் அவனை மனப்பூர்வமாய் நேசிக்கிறாள் என்பதை அறிந்த பிறகு?"

"அப்படியானால் அவள் காதலன் என்கிறீரே அவன் இவள் ஆஸ்திகளை அடைகிறதற்காக இவளிடம் ஆசை வார்த்தைகள் பேசவில்லை என்று உமக்கு நிச்சயமாய்த் தெரியுமா?"

ராஜாராம் திடுக்கிட்டான். இதுவரை இந்த யோசனை அவனுக்குத் தோன்றவில்லை. இது உண்மையாய் இருந்தால் அந்தப் பெண்ணின் கதி என்ன?

"அப்படியும் இருக்கலாம். ஆனால் அவன் அப்பேர்ப்பட்டவன் என்று எனக்குத்தோன்றவில்லை" என்றான் ராஜாராம்.

"[illegible] எல்லாம் [illegible] ஏன் அப்படி இருக்கக்கூடாது" என்று வக்கில் சொல்லிக்கொண்டே இருக்கையில் டாக்டரும் வந்து சேர்ந்தார். "ஹல்லோ டாக்டர், இவர் இன்றோ நாளையோ சாகப் போகிறாராம்! என்றைக்கு என்று நீர் நிச்சயமாய்ப் பார்த்துச்சொல்லும்!" என்று வக்கில் அவரிடம் சொல்லிக் கொண்டே மற்ற விஷயங்களையும் ஆதியோடந்தமாய்க் கூறினார். டாக்டரும் ராஜாராமைப் பரிசோதித்து விட்டு

"இவரா சாகப்போகிறவர்? எந்த மடையன் சொன்னான்? கேழ்வரகில் நெய் ஒழுகுகின்றது என்றால் கேட்பவருக்கு மதியில்லையா? உடம்பு ஏதோ அசதி போல்தோன்றுகின்றது. இவருக்குமனோ வியாதி தவிர வேறு வியாதியில்லை. இந்தாரும், இந்த மாத்திரைகளை வேளைக்கொன்றாகச் சாப்பிடும்" என்று கூறிக்கொண்டே ஒரு பொட்டணத்தில் நாலைந்து மாத்திரைகளை வைத்துக் கட்டிக் கொடுத்தார்.

ராஜாராமுக்குஇதைக்கேட்டதும் ஏதோ ஆகாயத்தில் பறக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்பட்டதே ஒழிய சாதாரண உலக நிகழ்ச்சிகளை அனுபவிக்கிறோம் என்று தோன்றவில்லை.

பிறகு வக்கில் ராஜாராமைப்பார்த்து, "மிஸ்டர் ராஜாராம்! நீங்கள் இன்று போய் நாளை மாலை 6 மணிக்கு வாருங்கள். பிறகு உயில் எழுதிக்கொள்ளலாம்" என்று கூறி அவனை அனுப்பிவிட்டார். ராஜாராம் வீட்டிற்கு வந்தவன் டாக்டர் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டான். மறுநாள்காலையில் எழுந்ததும் தன் தேகத்தில் ஏதோ புத்துணர்ச்சி பெற்ற புதிய சக்தி ஒன்று ஓடுவதைப்போல் உணர்ந்தான். தன் வாலிபம் திரும்புவதைப் போல் ஒரு உணர்ச்சி அடைந்தான். வக்கிலிடம் சொல்லிவிட்டு வந்தபடி சரியாக மாலை ஆறு மணிக்கு அவர் வீட்டை அடைந்தான். வக்கீல் இவனைக் கண்டதும் வரவேற்று உபசரித்தார். அவருடைய மகள் இருவருக்கும் காபி பலகாரங்கள் கொண்டு

(12-ம் பக்கம் பார்க்க)

நமது தொடர் கதை.

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை)

முன் கதைச் சுருக்கம்

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த **நந்தகோபமுதலி யாரின்** குமாரி **ராதாவிற்கு அமரேசன்** செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார். நந்தகோபரும் அவரது மனைவி **அநந்தகல்யாணி** அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் **நச்சுமுதலியார்** தமது அந்தரங்க நண்பன் **பிச்சு அய்யர்** இருவரும் ஏக போகமாகவிருந்துவந்தனர். **தண்டபாணி** தன் சிற்றப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவரசனுக்கும் அமரேசனுக்கும் பகை ஏற்பட்டதன் காரணமாகவும் நச்சு முதலியின் துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை நிறுத்திவிட்டபடியாலும் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினான்.

ராதாவுக்கும் தண்டபாணிக்கும் மணமகளின் சம்மதமின்றி விவாகம் நடைபெறுகிறது. பூர்ண கர்ப்பிணியாயிருந்த அநந்தகல்யாணி பூந்துறையில் தன் பிறந்தகத்துக்குச் செல்லுகிறாள். அங்கு அவள் ஒரு ஆண் மகவைப் பெற்று உயிர்துறந்தாள். ஆராத்துயரத்திலாழ்ந்த நந்தகோபரை நச்சுமுதலியார் தேற்றி பாற்கடலுக்கு அழைத்துவந்து தன் குமாரி காளத்தியை விவாகம் செய்து வைத்துத் தானும் தம்பதிகளுடன் மகேந்திரம செல்லுகிறார்.

பாற்கடல் தாசி பஞ்சாமிர்தம் நச்சுமுதலிக்கும் தண்டபாணிக்கும் வேண்டியவள். ஈரோடு கருணாநிதி சாஸ்திரிகளுக்குத் திருட்டுப் போன சில சொத்துக்கள் சம்பந்தமாக மகேந்திரத்தில் நச்சுமுதலி கைது செய்யப்படுகிறார். பிறகு பாற்கடலில் வழக்கு நடந்து அவருக்கு மூன்றுவருஷ சிறைவாஸ தண்டனை விதிக்கப்படுகிறது. நச்சு முதலியின் தூன்புறுத்தலினால் அவனை வெறுத்த பஞ்சாமிர்தம் இப்பொழுது பஹிரங்கமாய் தண்டபாணியுடன் வாழத் தலைப்படுகிறாள். ராதா ஒரு பெண் துறவிபோல் வாழ்ந்து வந்தாள். இதற்கிடையில் அவள் சோபனமானாள். ஆனால் அது அவளுக்கு அமங்கலமாகவேயிருந்தது. ராதா பூந்துறைக்கு வந்த தன் தகப்பனாரிடம் தான் இன்னும் ஒரு வருஷமாவது தனித்திருக்க அனுமதி பெற்றுக்கொண்டாள்.

13. புலிக்காடு

சிறைச்சாலையடைந்த நச்சு முதலி மூன்று வருஷத்தையும் மூன்று யுகமாய்க் கழித்து முடிவில் மீண்டு வருவதற்கு இரண்டொரு மாதங்களிருக்கும்பொழுதே பாற்கடற் பிரஜைகளனைவரும் பழைய சனியன் திரும்பி வரப் போகிறதேயென்று கவலை கொண்டார்கள். அவர் கொடுமைகளால் முன் நெடுநாள் வருந்திய விரோதிகள் இப்பொழுது தண்டபாணியை வந்தடைந்து அவனுக்குப் போதனை செய்தார்கள். தாசி பஞ்சாமிர்தமும், பிறருடைய க்ஷேமத்தைக் கருதாவிடினும், தானாவது தொந்தரவின்றி வாழ வேண்டுமென்ற கவலையுடன், தண்டபாணிக்கு நச்சு முதலி மீது மிகுந்த வெறுப்பும் கொடிய பகையுமுண்டாகும்படி சமர்த்தாயும் நளினமாயும் பேசி, அவனுக்குப் பற்பல ஆசைகளைக் காட்டி மயக்கி முறுக்கேற்றிவிட்டாள். இத்தனை அன்பும் ஆசையும் கலந்த காதலியின் போதனையைக் கேட்ட தண்டபாணி "என் சின்னம்மா, நான் உன் மீது வைத்த மெய்யான பாசத்தினால், மகாரூபவதியாகிய என் சொந்த யௌவன மனைவி ராதாவையே வெறுத்து விட்டேனே? அன்று பூந்துறையிலிருந்து வந்த சோபனக் கடிதத்தைக் கண்டு மிக வருந்தி வாடியபொழுது, உன் ஆயுள் வரையும் என் மனைவி முகத்தில் விழிப்பதில்லையென்று உனக்கு சத்தியம் செய்து கொடுத்தேனே! அப்படிப்பட்ட நான் இந்தக் கிழவன் நச்சு முதலியின் தாக்ஷண்யத்தைக் கருதுவேனா?" என்று தைரியம் கூறினான். அனைவரும் எதிர்பார்த்திருந்தபடியே நச்சு முதலியும் சிறையினின்று மீண்டு ஒரு நாளிரவிற் பாற்கடல் வந்து சேர்ந்தார். பொழுதுவிடியுமுன், பண்ணையாரைக் கண்டு பேட்டி செய்வதற்காகப் பிச்சுவையன் முதலிய ஆப்த நண்பர்கள் பண்ணை வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது ஒருவரையொருவர் க்ஷேமலாபம் விசாரிக்கையில்,

பிச்சு:— பண்ணையார்வாள், தங்கள் பூஜை முதலியவைகளெல்லாம ஜெயிலில் எப்படி நடந்தது?

நச்சு:—ஜெயிலுக்குப் போனாலும், அங்கேயும் பெரிய மனிதன், சின்ன மனிதன் என்ற வித்தியாஸம் இருக்கவே செய்கிறது. அதிலும், நான் முன்னொரு தரம் பழகியவனாகையால் என் விஷயத்தில் ஜெயிலர்கள் ரொம்ப தயவு. நான் போன சமயம் பாதாளக்கவுண்டன் உள்ளே தானிருந்தான். அவன்தான் என் ஸ்நாநம் பூஜை முதலியவைகளுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்தான். தண்டனைப்பட்டேன் என்ற வார்த்தைக் குறையையன்றி வேறு குறையில்லை.

பிச்சு:—நல்லது. தடையென்ன! "ராமன் போனவிடம் அயோத்தி" தங்களுக்கும் "சென்றவிடமெல்லாம் சிறப்பு". வேறே என்னகுறை?

நச்சு:—இந்தக் குறையும் சின்னப்பயல் தண்டபாணியாலேற்பட்டது. நான் தலையெடுத்து நாற்பது வருஷத்திற்குள் எத்தனையோ களவு சொத்துக்களை துஷ்டர்கள் என் பாதத்தில் வைத்து அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். என் கையினால் வாங்கிய அத்தனையையும் கணக்குப்பார்த்தால் எத்தனையோ லக்ஷமிருக்கும். அப்பொழுதெல்லாம் என்பேரில் கேஸ் வந்ததா! தவிரவும் உலகத்தில் எவன்தான் யோக்கியன்? யோக்யதையைக் கவனித்தால் கீர்த்தியேது?

பிச்சு:—தாங்கள் போனது முதல் தண்டபாணி முதலியாருக்குப் பஞ்சாமிர்தம் வீட்டில்தான் ஜாகைபோலிருக்கிறது.

நச்சு:—அவன்தான் சின்னப் பயல். தெரியாத்தனமாய் வந்தாலும், அந்தமுண்டை பஞ்சாமிர்தத்திற்குப் புத்தி வேண்டாமா? பெரிய வீட்டுப் பையனை வீணாய்க் கெடுத்துவிடப்படாதென்ற பெருந்தன்மை வேண்டாமா? அவள் ஜாதிக் குணத்தைக் காட்டிவிட்டாள். மகன் என்றமுறையையு மறந்துவிட்டாள். ஆனால் இவள் தாய் பலாச்சுளையின் மாதிரி வேறே அவள் சாகும் வரை என்னைத் தவிரப் பிறர் முகம் பார்த்ததில்லை. என் சொந்த மனைவியின் கற்பைப் பற்றி நான் சந்தேகப்பட்டாலும் பலாச்சுளையின் கற்பைப் பற்றி எனக்கு அவ்வளவு நிச்சயமுண்டு. அவள் சாகும் பொழுது இந்த அற்ப முண்டையை என் கையிற் பிடித்துக் கொடுத்து "பிராணநாதா, என்னைக் காப்பாற்றியதுபோலவே என் மகளையும் காப்பாற்றவேண்டும்" என்று சொல்லிவிட்டு இறந்தாள். அந்த விசுவாசத்தை நினைத்து, இந்தப் பஞ்சாமிர்தத்தை இவ்வளவு முன்னிலைக்குக் கொணர்ந்தேன். அதையெல்லாம் மறந்து எனக்கு விரோதமாய்த்தான் சாக்ஷி சொன்னதுங்காணமல் சின்னப்பயல் தண்டபாணியையும் ஏவிவிட்டாள். நல்லது, இனி அவள் இந்தவூரில் குடியிருக்கிற சமர்த்தை அறிகிறேன் (என்று நெஞ்சைத் தட்டிக்கொண்டிருக்கும் பொழுது, இடையே வந்த தண்டபாணியைக்கண்டு) 'அடே, உன்னை இவ்வளவு தூரம் வளர்த்து, வாலிபமாக்கிவிட்டபடியாலல்லவா, விடிந்து இந் நேரம்வரை என்னை வந்து பார்க்க உனக்கு சாவகாசப்படவில்லை? நல்லது, பத்திரம்!

தண்ட:—பத்திரமென்ன பத்திரம்? அடமானப்பத்திரமா? நீங்கள் என்ன செய்வீர்கள்?

நச்சு:—அடே, பிச்சைக்காரப்பயலே, என்ன சொன்னாய்? உனக்கு அவ்வளவு வாய் மதமா? அந்த முண்டை போதனையோ? இனி அவள் வீட்டிற்குப்போனால் உன்காலை முறிப்பேன்.

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

வெல்வெட் சோபாவின் மீது பஞ்சாமிர்தம் சகிதராய் உல்லாசமாய்ச் சாய்ந்திருந்த தண்டபாணி முதலியாரைத் தன்னை ரக்ஷிக்கும்படி பிச்சுவையன் வேண்டினன்.

தண்ட:—தாசிவீடு உமக்குத்தான் சொந்தமா? நீர் என் காலை முறிப்பதும் நான் உம்முடைய காலை முறிப்பதும் அங்கே வந்து பார்த்தால் தெரியும்; ஒரு கை பார்க்கிறேன்—என்று இவ்வாறு இருவரும் வாய்ச் சண்டை செய்து கை கலந்துகொள்ளுமுன் இடையிலுள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள். இவ்வாறாக நச்சுமுதலி பாற்கடல் வந்த மறுதினமே அப்பனுக்கும் மகனுக்கும் கக்ஷி முளைத்துவிட்டது. முளைக்கவே இருவருக்கும் பொதுவாய் அக்தார் பாத்தியமுள்ள சத்திரம் முதலிய தருமச் சொத்துக்களைப் பரிபாலனம் செய்ய வேண்டிய விஷயமாய் ஒரு பெரிய தாவா உண்டாயிற்று. எல்லாச் சொத்துகளுக்கும் தானே அக்தார் என்பது நச்சுமுதலியின் கக்ஷி. "முதல் வாரீஸ் நான். எனக்குத்தான் அக்தார் பாத்தியம்" என்பது தண்டபாணி கக்ஷி. கக்ஷி பலக்கவே, சிவில் வியாஜ்யங்கள் கிளம்பின. அதில், நச்சு முதலி சிறைத் தண்டனையடைந்த குற்றவாளியென்ற காரணத்தைக் கருதி, தண்டபாணிதான் அக்தார் என்று கோர்ட்டார் தீர்ப்புச் செய்தனர். இதுவரையும் செல்லும் செலவுக்கெல்லாம் இறை கொடுத்துக் கொண்டுவந்த தருமச் சொத்துக்கள் தன்னை விட்டு நீங்கவே, நச்சுமுதலி பாடு அன்னவஸ்திரத்திற்கே பயக்கமாய்விட்டது. தண்டபாணியின் பாடு யோகமாய்விட்டது.

இனி, இரண்டாவது போராட்டமொன்று விளைந்தது. அதாவது பவானந்த முதலியார் காலஞ் சென்றதுமுதல், வழக்கமாய் நச்சு முதலியாருக்குக் கொடுக்கப்பட்டு வந்த முதல் விபூதி தாம்பூலம் ஆகிய முதல் மரியாதையை முதல் வாரீஸ்தாராகிய தண்டபாணி தனக்கே செய்யவேண்டுமென்று தாவாச் செய்யத் தொடங்கினன். இதுவரையில் நச்சு முதலிக்குப் பயந்து அவரைப் பகிரங்கமாய் எதிர்க்க முடியாதிருந்த அந்தரங்க விரோதிகள் அவரை மடக்கி அவமானம் செய்ய இதுவே தருணமென்று கருதி தண்டபாணிக்கு முதுகு தட்டிக்கொடுத்து விசைப் பேற்றியதுமன்றி, அவன் தாவாவின்படி அவனுக்கே முதல் மரியாதை செய்வதென்று தீர்மானித்தார்கள். ஆகவே தண்டபாணி போகும் ஆலயங்களுக்கும் விசேஷ வீடுகளுக்கும் நச்சு முதலியார் தான் போவதில்லையென்று விலகினர்.

இதற்கிடையில், கல்யாணப்பந்தலில் கல்லெறிதல், தீக்கொளுத்தல், முதலிய இழிந்த செடல்களில் சுத்த வீரர்களான குடிக்காரப் போக்கிரிப் பையன்களும் கூட என்ன கால வித்தியாஸத்தினலோ, பாப்பர் நச்சு முதலி கக்ஷியை விட்டுப் பிரிந்து அக்தார் தண்டபாணி முதலியார் கக்ஷியில் சேர்ந்துவிட்டார்கள். இவ்வாறாக, நச்சு முதலிக்குப் பிச்சுவையன் முதலிய சில்லரையன்றி ஏவின வார்த்தை கேட்பதற்கும் ஆளில்லையென்றாய் விட்டது. நச்சு முதலியைக் கண்டவுடன் மேல் வேஷ்டியெடுத்து அரையிற் கட்டும் பணிதர்களும் அவர்க்கு எழுந்து நின்று நமஸ்காரம் செய்யும் தாசிகளும் வழக்கமான மரியாதைகளை மெல்ல மெல்ல நிறுத்தத் தொடங்கினர்கள். நச்சு முதலி வீட்டைவிட்டு வெளியேறுவதே கௌரவக் குறைவென்ற நிலைமை வந்துவிட்டது. நச்சு முதலியென்ற பயங்கரமான பெயர் கீழே விழவும். தண்டபாணியின் பெயர்தான் கடைவீதிகளிலும் தாசி வீடுகளிலும் தொனித்தது. மாலை நேரங்களில் நச்சு முதலியும் பஞ்சாமிர்தமும் ஏறிச்சென்ற குதிரை வண்டியில் இப்பொழுது தண்டபாணியும் பஞ்சாமிர்தமும் நிர்ப்பயமாய் வீற்றிருந்து பவனிபோனர்கள். இவ்வாறு நச்சுமுதலி, சிறையினின்று மீண்டு இரண்டு வருஷத்திற்குள் பற்பிடுங்கப்பட்ட பாம்புபோல், வெளியில் நடமாட்டமின்றி, செலவுக்குத் திண்டாடி, வீட்டிற்குள் கிடந்த கிடையிலே தனித்து வருந்துவாராயினர். இதற்குள், சத்திரம் விசாரிப்பு வேலையிலிருந்து தண்டபாணியால் நீக்கப்பட்ட பிச்சுவையன் ஒருவனே நச்சு முதலியின் வருத்தத்தை ஆற்றுவான்; தேற்றுவான்; ஆதரிப்பான்; யுக்திபுத்திகள் எடுத்துக் கூறுவான்; ரகஸ்யம் பேசுவான்; சின்னப்பயல் தண்டபாணியை மடக்கும் வகை தேடுவான்; சதியாலோசனை செய்வான். ஒரு நாள் இரவில் இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே நச்சுமுதலி "அடே என் நண்பா, என் மந்திரீ, ஏ பிச்சு, நீயே எனக்கு உயிர்த்தோழன்; உன் புத்தியே புத்தி; விஜயனுக்கு கிருஷ்ணன் வாய்த்தாற்போல் நீ எனக்கு வாய்த்தாய்; நீ கிருஷ்ணனென்பதும் நான் விஜயனென்பதும் உலகறியும்படி கீர்த்திபெற அடிக்கவேண்டும்; போய்விட்டு வா" என்று விடைகொடுத்தனுப்பிவிட்டார்.

இதன்பின் சுமார் ஒருவாரகாலமாய், என்ன காரணத்தினலோ பிச்சுவையன் நச்சு முதலி வீட்டிற்குப் போவதைத் திடீரென்று நிறுத்திவிட்டான். ஒரு நாள் அவன், தான் நெடுநாள் விலகியிருந்த பஞ்சாமிர்தத்தின் வீட்டையடைந்து, மூன்றுவது மெத்தையின் முன் வராந்தாவில் வெல்வெட் சோபாவின்மீது பஞ்சாமிர்தம் சகிதராய் உல்லாசமாய்ச் சாய்ந்து, தாம்பூ

(35-ம் பக்கம் பார்க்க)

அசல் புஞ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, ஸைனபஜார், மதராஸ்.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்
லிவர்க்யூர்
குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.
அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

திருவாங்கூர் மஹாராஜா

ஸ்ரீ மார்த்தாண்ட வர்மா

(கே. எஸ். ஆர்.)

(1815—1860)

“ஏற்கெனவே காலஞ் சென்ற திருவாங்கூர் மஹாராஜாவைப் பற்றிப் பிரஸ்தாபம் ஏற்பட்டிருப்பதனால், மஹாராஜா மார்த்தாண்ட வர்மா திருவாங்கூரில் 13 வருஷகாலம் (1847-1860) ஆட்சி புரிந்தார் என்று குறிப்பிடுவது பொருத்தமற்றதாக ஆகாது. அடிமை நிர்ப்பந்தத்தை அறவே அழிப்பதற்கான சட்டம், வித்யாபிவிருத்திக்கு வழங்கப்பட்ட விசேஷ வசதிகள், பிரஜைகளின் நன்மைக்கான பல நல் முயற்சிகள், கடைசியாக ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ராஜகுமாரிகளுக்குக் கல்வி கற்பித்து அதன் மூலம் பெண் கல்வி அபிவிருத்திக்காக அவர் அளித்த உத்ஸாஹம் ஆகியவை அவரது பெயர் எக்காலமும் மறந்துவிடாமலிருக்கும்படிச் செய்வன. அவருடன் நெருங்கிப் பழகும் பாக்யம் பெற்றவர்கள் அவரது அருமையான குணத்தை சதா சிலாகிப்பார்கள்.” இவ்வாறு திருவாங்கூர் ரெஸிடெண்டாக விருந்த மிஸ்டர் எப். என். மால்ட்பி தாம் பிரசுரித்த “திருவாங்கூர் தஸ்தாவேஜுகள்” என்ற அரிய புத்தகத்தின் முகவுரையில் எழுதிவைத்தார். மிஸ்டர் மால்ட்பியும் பரந்த நோக்கம் கொண்டு இத்தேச மக்களின் க்ஷேமாபிவிருத்தியில் ஆர்வமும் அபிமானமும் கொண்டு வாழ்ந்து வந்தவர்; ஆதலால் அவர் மஹாராஜா மார்த்தாண்ட வர்மாவைப் பற்றி வரைந்த வார்த்தைகள் உண்மையான மதிப்பிற்கு உரியனவாவன.

மஹாராஜா மார்த்தாண்ட வர்மா 1815-ம் ஆண்டில் பிறந்தார். இவர் தமது சகோதரரும் மிக்க கீர்த்திவாய்ந்தவருமான ஸ்ரீ ஸ்வாதி திருநாளுக்குப் பிறகு பட்ட உரிமை ஏற்றுக்கொண்டவர். இவர் ராணி லக்ஷ்மீபாயின் குமாரராவார். இவரது மூத்த சகோதரர் பிறந்த பின்புதான் திருவாங்கூர் பிரஜைகளுக்கு விசேஷ சந்தோஷம் கிட்டியது. ஏனெனில் அது பரியந்தம் பட்டவார்சு இல்லாமல் போய்விடக்கூடும் என்ற பயம் அவர்களுக்கு இருந்ததுண்டு. இவரும் இவரது பெரிய சகோதரரும் திவான் சுப்பராயரிடம் ஆங்கிலம் படித்தனர். இவருக்கு ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, மாராத்தி, மலையாளம், தமிழ் ஆகிய பாஷைகளில் பட்டத்திற்கு வரும் முன்னரேயே விசேஷ ஞானம் கிடைத்து விட்டது. தமது மூத்த சகோதரரைப் போல் சிறந்த குணவானாக விராவிட்டாலும், இவர் சமூக வாழ்வில் பிரதான புருஷராகப் பழகி வந்தார். ரெஸிடென்சியில் சர்ஜனாகவிருந்த டாக்டர் பிரௌன் இவருடன் நெருங்கிப் பழகி, இவரது ஆங்கிலப்பத உச்சாரணங்களைச் சரிபடுத்தினர்; தவிர விஞ்ஞான சாஸ்திரம், கீதக சாஸ்திரம் ஆகிய பகுதிகளையும் இவருக்குப் போதித்தார். விஞ்ஞான சாஸ்திரத்தில் இவருக்கு இளைய ராஜாவாக இருக்கும் போதே ஏற்பட்ட அபிமானமும் உத்ஸாஹமும் நாளடைவில் அதிகமாகவளர்ந்துவரலாயிற்று. சர்ஜன் டாக்டர் பிரௌன் இந்தியாவை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்பும் இவர் அப்பகுதிகளை ஊக்கத்துடன் அப்யஸித்து வந்தனர். வியாபார ஏஜண்டாகவிருந்த மிஸ்டர் கால்டிகாட் என்பாரும் இவ்விஷயத்தில் இவருக்கு உதவி புரிந்து வந்தார். அவரிடம் இவர் ரஸாயன சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டார். வைத்திய சாஸ்திரத்தில் இவர் பெரிதும் சிரத்தை கொண்டார். இவர் ஒரு சிறிய வைத்தியசாலையை தமமிடம் அமைத்துக்கொண்டு அதில் அநேகம் புதிய ஔஷதங்களையும் நிவாரணிகளையும் வரவழைத்து வைத்துக்கொண்டிருந்தார். தம்மை அண்டிவருபவர்களுக்கு ஒருவித வித்யாசமும் காட்டாமல் இவர் தாராளமாக மருந்து கொடுப்பது வழக்கம். ஆகவே இவர் வெகு சீக்கிரத்தில் ஒரு சிறந்த வைத்திய நிபுணராக விளங்கி, பலவிதமான பிணிகளையும் போக்கடித்துப் பிரக்யாதி பெற்றுக்கொண்டார். இவரது மூத்த சகோதரரான மஹாராஜா ஸ்வாதி திருநாள் ஒருசமயம் வயிற்றுக் கடுப்பினால் மிகவும் அவஸ்தைப் பட்டபோது இவரே இவருடைய வைத்தியராகவிருந்து அவரைப் பூரணமாக சொஸ்தப்படுத்தினர். தவிர ரண சிகிச்சைகள் புரிவதிலும் இவர் சமர்த்தராக விருந்தார். அநேகம் சந்தர்ப்பங்களில் இவர் சஸ்திரங்களை பயன்பட உபயோகித்ததுண்டு. அம்மைக்குத்தும் வித்தையும் இவர் கற்றுக்கொண்டு தமது அருகே இருப்பவர்களுக்கு தமது திறமையைக் காட்டியதுண்டு. சாதாரணமாகவே இவரிடம் காணப்பட்ட சிறந்த மனோபாவமும், பிறரிடம் விசுவாசமாக விருக்கும் மனப்பான்மையும், யாவரையும் சமமாகப் பாவிக்கும் ஸ்வபாவமும் இனிது நடந்துகொள்ளும் விதமும் இவருடன் பழகிய பலராலும் மிகுந்த திருப்தியுடன் பாராட்டப் பட்டவையாவன. அரசராகவும், எஜமானனாகவும், தோழனாகவும் இவர் அனைவரையும் தம்மிடம் ஆகர்ஷித்துவந்தார். இவரது வாழ்க்கையில் இவர் இளையராஜாவாக இருந்த காலம் மிகச் சிலாக்கியமானது.

“இளைய ராஜாவாக அதாவது பட்டவாரசாக மார்த்தாண்டவர்மா இருந்தபோது இவர் பொதுமக்களின் உள்ளங்களைக் கவர்ந்ததுடன், அநேகம் ஐரோப்பியர்களின் நட்பையும் சம்பாதித்துக்கொண்டார். அவருடைய தோற்றம் வசீகரமானதாக இல்லை. ஆனால் அருகே வந்த பின் அவரது சுழுகுக்கண்களும், நன்கு விகசித்துப் பிரகாசிக்கும் வதனமும் அவரது அரசுரிமையைக்காட்டின. அவர் ஒரு புத்திசாலி. பாஷையிலும் சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றவர் என்று ரெவரெண்டு அப்ஸ் என்பார் எழுதினர். இவர் தமது சகோதரர் போல் இராமல் ஆங்கிலேயர்களுடன் அதிகமாக உறவாடி வந்தார். ஒருசமயம் சென்னை கவர்னரான ஹாரிஸ் பிரபு இவரைப்பார்க்க வந்தபோது இவர் அவரை வரவேற்று அவர் வந்த கப்பலைப்பார்வையிடச்சென்றார். இவர் அக்கப்பலின் கட்டிடம் வேலை முதலியவற்றைக் கவனிக்கச் சென்றது எங்கும் விஸ்மயத்தை விளைவித்தது. தவிரவும் ஹாரிஸ் பிரபுவுடன் மிகவும் தாராளமாக, இவர் அதிககாலம் வேடிக்கையாக சம்பாஷித்தார். ஹாரிஸ்பிரபுவும் இவருடன் தாம சம்பாஷித்ததை மிக்கப் பெருமையுடன் கருதி வந்தார். இவர் பரமபக்தர். இவரது தெய்வபக்தியைப் பற்றி சில கிறிஸ்துவப் பாதிரிகள் தவறான விதமாக எழுதியிருக்கிறபடியால் நாம் அதை அசட்டை செய்யவேண்டும்.

தமது சகோதரரின் மரணத்திற்குச் சரியாக இரண்டு மாத காலத்திற்குப் பின்பு 1847-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 26-ம் தேதியன்று இவர் திருவாங்கூர் மன்னராக பட்டத்தில் அமர்த்தப்பட்டார். இவர் அரசுரிமை ஸ்வீகரித்துக்கொண்ட சமயத்தில் ராஜ்யவருமானம் தத்தளிப்பு ஸ்திதியில் இருந்து வந்தது. திவான் பேஷ்காராக விருந்த ஸ்ரீநிவாஸராயர் ராஜ்ய நிர்வாஹத்தில் துர்ப்பலராக விருந்தது மல்லாமல் ரெஸிடெண்டான ஜெனரல் கல்லன் என்பவருடன் அதிருப்திகரமாக நடந்து கொண்டுவந்தார். மஹாராஜாவும் பின்பு தாம் சென்னை கவர்னர் ட்வீடேல் பிரபுவிற்கு எழுதிய கடிதத்தில் தமது சமஸ்தானத்தின் ஸ்திதி தமக்கு மிகுந்த கவலையைக்கொண்டுவருவதாக எழுதினர். மஹாராஜாவும் ரெஸிடெண்டு ஜெனரல் கல்லனும் மிகவும் அத்யந்த சிநேகிதர்கள் என்று இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம். ஜெனரல் கல்லனைப்பற்றிப் பேசும்போது மஹாராஜா அவரை “அம்மவான் அல்லது மாமா என அழைப்பது வழக்கம். இவரது சகோதரர் மரிக்கும்போது அந்த “வெள்ளை”யரிடம் இவர் சண்டையிடக்கூடாதென்று சொல்லி காலமானார். அவரது விருப்பத்திற்கிணங்கி இவர் கல்லனின் பிரியத்திற்குப் பாத்திரரான கிருஷ்ணராயரை திவானாக நியமித்தார். புதிய திவான் உடனே சமஸ்தானத்தைப் பற்றிய விவரங்களை விஸ்தாரமாகத் தயாரித்து அரசரிடம் சமர்ப்பித்தார். திவானுக்கு மஹாராஜாவும் ரெஸிடெண்டும் விசேஷ ஆதரவு அளிக்கவே, முதல் வருஷ நிர்வாகத்தின் பயனாக, சமஸ்தான ஸ்திதி மிக்க சீர்ப்பட்ட நிலைக்குவந்தது. மஹாராஜா அநேகம் விஷயங்களில் சிக்கனத்தை அனுசரித்தார். பிரதானமாக அவர் தமது அரண்மனை சொந்தச்செலவுகளிலும் சிக்கனமான மார்க்கத்தையே பின்பற்றினர்.

1848-ம் வருஷம் பிப்ரவரி மாதம் ரெஸிடெண்டிற்குத்

தாம் எழுதிய கடிதத்தில் மஹாராஜா தமது முறைகளைக் குறிப்பிட்டிருந்தார். இதைப்பற்றி சென்னை கவர்ன்மெண்டார் எழுதியதாவது: "சபையுடன் கூடிய கவர்னர் பிரபு மஹாராஜா தமது சொந்த விஷயத்தில் பின்பற்றியிருக்கும் சிக்கனத்தை மிக்க சிலாகிப்பதுடன் அதற்கு சிரேஷ்டமான பலன் கிடைப்பது நிச்சயம் எனவும் நம்புகிறார். நிர்வாகத்தின் சிறப்பை அதிகப்படுத்துவதற்கு திவான் தொடரும் முயற்சிகளும் கவனிக்கப்பட்டுள்ளன". உடனே மஹாராஜா கிருஷ்ணராயரை திவான் பதவியில் காயமாக்கினார். இதே சமயம் அவர் சர்க்காருக்குக் கொடுக்கப்படவேண்டியவையும் இதுவரை வசூலிக்கப்படாதவையுமான வரி கிஸ்திகளை வஜா செய்துவிட்டதாக ஒரு உத்திரவைப் பிறப்பித்தார். இந்த உத்திரவு அச்சமயத்தில் ஏழை ரயத்துக்களுக்கு அம்ருதத்தை வர்ஷிப்பதுபோல் இருந்தது.

வார்சுகளான தமது மருமகன்களுடைய வித்யாப்யாஸத்தைக் கருதி மஹாராஜா மார்த்தாண்ட வர்மா, பிரஸிடென்ஸி காலேஜ் புரொபிஷியெண்ட்களுள் முதல்வரான (ராஜா ஸர்) டி. மாதவ ராயரை அரசகுமாரர்களின் போதகாசிரியராக 1849-ல் நியமித்துக்கொண்டார்.

பல வருஷங்களாகவே அடிமைகளின் பரிதாபமான ஸ்திதி போக்கப்பட வேண்டுமென்று அநேகர் பிரயாசைப் பட்டு வந்ததுண்டு. 1849-ல் பிரிட்டிஷ் ரெஸிடெண்டும் மஹாராஜாவிற்கு இதைப்பற்றிப் பிரஸ்தாபித்து எழுதியனுப்பினர். இறுதியாக 1853ம் வருஷம் செப்டர்மாதத்தில் மஹாராஜா ஒரு முக்கியமான உத்திரவைப் பிறப்பித்தார். அதாவது கவர்ன்மெண்டு அடிமைகளுக்கு இனிமேல் பிறக்கப்போகும் குழந்தைகளுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது என்பதாகும். தவிர இதர அடிமைகளின் நிலையைப் பாதுகாப்பதற்குரிய மார்க்கங்களும் நிதர்சிக்கப்பட்டன. இது ரெஸிடெண்டினாலும் சென்னை கவர்ன்மெண்டாராலும் மிகக் கொண்டாடப் பட்டது. 1855-ம் வருஷம் ஜூன்மாதம் 24-ம் தேதியன்று மஹாராஜா தமது ராஜ்யத்தில் அடிமை என்பதே இனிமேல் கூடாது என்று உத்திரவிட்டுவிட்டார். இதைக்காட்டிலும் மானிட கோஷ்டிக்கு ஒருவர் செய்யக்கூடிய சேவை வேறு யாது இருக்கின்றது. இது ஒன்றே இமமஹாராஜாவின் அழியாப் பெருமைக்குப் போதுமான அத்தாக்ஷியாகும்!

1852-ம் வருஷத்தில் லண்டன்மாநகரில் ஒரு விசேஷப் பொருட்காட்சி நடத்தப்பட்டது. அப்போது சென்னை கவர்ன்மெண்டார் மஹாராஜாவும் பொருட் காட்சிக்குச் சாமான்கள் அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். இவரும் அதற்கிசைந்து அழகிய வேலைப்பாடமைந்த சிங்காதனத்தை அனுப்பிவைத்தார். தந்த வேலை மிகச் செய்யப்பட்ட அந்த சிங்காதனம் மேனாட்டு நிபுணர்களால் மிகப் பாராட்டப்பட்டது. "ஸயண்டிபிக் அமெரிக்கன்" என்ற பத்திரிகையில் அதைப்பற்றிக் கொண்டாடும் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது.

இதே வருஷம் திருநெல்வேலி, திருவாங்கூர் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. ஜனரல் கல்லன் விதித்தவை ஒப்புக்

(33-ம் பக்கம் பார்க்க.)

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பேனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

நஞ்சன்கூடு பல்பொடி
டப்பி) I. D. L. №61. மெடிகேடட் (அணா 4

ஜிஞ்சிப்
அஜீர்ண பித்த சமனி

வெடன்ஸால்
வீர்யவிருத்திக்கும் சுகநித்திரைக்கும்

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்துலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும்: கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி



விலை குறைவான போலி நகைகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நெருப்பிற்கும், திராவகத்திற்கும் உத்திரவாதமான நகை எது?

அதுதான் தியாகராஜ தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அதிக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அதிக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலைக் காரர்களைக் கொண்டு நகைகளை தயார் செய்து இருக்கிறோம். ஒரு தரம் வாங்கி பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும். எமது நகைகள் கண்களைக்கவரும் அழகும் வேலைப்பாடும் உள்ளவை. பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக செலவின்றி எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலைகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்லாக் இனம்.

கல்மாலை 1 பெட்டை ரூ. 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77, சைனபஜார் ரோட், மதராஸ்.

விநோதச் சொத்து

18719

சர்க்கார் இலாகா ஒன்றில் சில வேலைகள் காலியிருந்தன. அவற்றிற்குப் பலர் விண்ணப்பம் செய்துகொண்டனர். விண்ணப்பம் செய்துகொண்டவர்களைப் பரீக்ஷை செய்த ஒருவர் பதில் சொல்ல முடியாத சில கேள்விகளைக் கேட்டார். அவற்றிற்குப் பதில் சொல்ல முடியாது போனவர்களைப் பார்த்து பரீக்ஷாதிகாரி, "இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் உனக்கு மூளையிருக்கிறதென்பதைக் காட்டிக்கொண்டிருக்கிறாய்" என்று சொல்லி வந்தார். ஆனால் கடைசியில் ஒருவன் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கவே அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. கேள்வியும் பதிலும் வருமாறு:—

"ஒரு கயிறு எவ்வளவு நீளமிருக்கிறது?"

"கயிற்றின் மத்தியிலிருந்து நுனிக்கு எவ்வளவு நீளமிருக்கிறதோ அதைப்போல் இரண்டு பங்கு."

* * * * * * * *

"தொண தொண வென்று பேசிக்கொண்டிருக்கிறவர்களை நீ எப்படி வெளியே அனுப்புவது வழக்கம்"

"அதென்ன பிரமாதம். அவ்விதம் தெரிந்தால் இங்கிருந்தே ஒரு மணியை அடிப்பேன். என் வேலைக்காரன் வந்து என்னை டெலிபோனில் யாரோ கூப்பிடுவதாகச் சொல்லுவான். பிறகு வந்தவர் போய்விடுவார்."

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே வேலைக்காரன் உள்ளே வந்து, "உங்களை யாரோ டெலிபோனில் கூப்பிடுகிறார்கள்" என்று தன் எஜமானனிடம் சொன்னான்.

* * * * * * * *

வட இந்தியப் பிரமுகர் ஒருவர் சென்னைக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். சென்னைவாஸி ஒருவரும் அவர் இருந்த வண்டியில் பிரயாணம் செய்தார். இருவரும் பேசிக்கொண்டுவந்தனர்.

வட இந்தியப் பிரமுகர்:—"நான் சென்னைக்கு விஜயம் செய்து 10 வருஷங்களுக்கு மேலாகிறது. ஆனால் நான் இந்த உலகில் பாராத பட்டணம் கிடையாது" என்று வாயளப்பாகச் சொல்லிக்கொண்டு வந்தார்.

சென்னை வாஸிக்குக் கோபம் வந்துவிட்டது. ஆயினும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "ஏன், சென்னையில் ஒரு நதி இருக்கிறதே உங்களுக்குத் தெரியாதா!" என்றார்.

"தெரியாதே, அதன் பெயர்?"

"கூவம்"

"கேள்விப்பட்டிருக்கிறேன். மிகவும் புனிதமானதல்லவா"

அவர் சென்னைக்கே விஜயம் செய்தவரில்லை என்று தெரிந்துகொண்ட சென்னைவாஸி, "ஆமாம். ரொம்பப்புனிதமானது. அதில் ஸ்நானம் செய்யாது வேறு என்ன வேண்டியிருக்கிறது" என்றார்.

* * * * * * * *

எலிகளைக் கொல்லும் புதிய சாமான் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாயும், அதில் தின்பண்டங்கள் வைக்கவேண்டியதில்லை என்றும், ஒரு ரூபாய் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படுமென்றும் ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

உடனே ஒருவர் ஒரு ரூபாய் அனுப்பினார். இரண்டு நாள் கழித்து அவருக்கு ஒரு பார்ஸல் வரவே அதைத் திறந்து பார்த்தார். இரண்டு இரும்புத் துண்டுகள் இருந்தன. அத்துடன் ஒரு துண்டுக் கடிதமும் இருந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—ஒரு துண்டைக் கீழே வைத்து எலியை அதன்மேல் வைத்து மற்றொரு துண்டால் அடித்தால் எலி செத்துப் போகும்.

* * * * * * * *

மோட்டார் ஓட்டும் சட்டத்தின்படி அநுமதிக்கப் பட்டதற்கு மேலாக வெகுவேகமாகச் சென்றதால் போலீஸ்காரன் ஒருவர்மீது குற்றஞ் சாட்டினான். மோட்டார் ஓட்டுபவர் சாக்குப் போக்குச் சொன்னார்.



"எனக்கு மிக அவசரமான காரியமிருந்தது."

'அதெல்லாம் எனக்குத் தெரியாது.'

"நான் எப்பொழுதுமே வேகமாகச் செல்வதில்லை. இன்று என் வக்கீலை அவசரமாகப் பார்க்கவேண்டியிருந்தது."

"ஆகையால் அவசரக் காரியத்துடன் நான் குற்றஞ் சாட்டியிருப்பதையும் தெரிவித்துக் கொள்ளலாம்."

* * * * * * * *

கண்ணாடியே பார்த்திராத நீலகிரி மலைச் சாதியைச் சேர்ந்த ஒருவன் ஒரு உடைந்த கண்ணாடியை மலைப்பாதைக்கருகில் கண்டெடுத்தான். அதைப்பார்த்தவுடனே, "ஆகா, என் தகப்பனார்" என்றான். அவன் அந்தக் கண்ணாடியை தன் குடிசைக்கு எடுத்துச் சென்று பத்திரமாக வைத்துக் காப்பாற்றினான். அடிக்கடி ஒருவருக்கும் தெரியாமல் அதை எடுத்துப் பார்ப்பதும், "ஆகா என் தகப்பனார்" என்று முணுமுணுப்பதுமாக விருந்தான்.

அவனுடைய மனைவி ஏதோ ரகஸியமாகப் பார்ப்பதும் முணுமுணுப்பதுமாக விருப்பதைப் பார்த்து கணவனில்லாத சமயத்தில் கண்ணாடியை எடுத்துப் பார்த்துவிட்டுப் பின் வருமாறு கோபமாகக் கூறினாள்:—இந்தக் கோரப்பெண்ணைக் கண்டல்லவா என் கணவன் இப்படி யிருக்கிறான்.

* * * * * * * *

சோவியத் ருஷ்யாவில் சிறுவர்களாலேயே ஒரு ரெயில்வே நடத்தப்படுகிறது. இது திவ்லிஸ்ஸில் இருக்கிறது. சோவியத் சிறுவர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காகவே இவ்விதம் செய்யப்படுகிறது. ரெயில்வேயின் நீளம் ஒரு மைல்.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ஏமனி நெரநம்மு கொந்துமு ஸ்ரீ க்ருஷ்ண-எந்துகிந்தவாது (ஏ)

சரணங்கள்

1. ஜலகம்ாடுவேள வலுவல தாசி மம்-மலயிம்பகலேதா (ஏ)
2. முதிதுல்ரம்மனி திலகமுலிடிவேள-மோவிநொக்கலேதா (ஏ)
3. முனு நீவு வென்னயாரகிம்சி தருணுல-மோமுன பூயலேதா (ஏ)
4. வதினெகாரி சந்தமுவச்சி பாவட-வதலிஞ்சிபோலேதா (ஏ)
5. தொரிகிதிவனி சாடிஜெப்ப போதே தல்லி-யுரமுன னுண்டலேதா (ஏ)
6. காமிம்சி யஜ்ஞபத்னுலு வேடகவேணு-காந மொனர்பபலேதா (ஏ)
7. ஆநாடு பொங்கலி நீகிடி கொந்நர்ள்ளு-வான னுண்டலேதா (ஏ)
8. தானு த்யாகராஜவிநுதுனி பலுகுலு-தப்பிபோதனலேதா (ஏ)

II

ஸ்ரீ க்ருஷ்ண	—ஸ்ரீக்ருஷ்ண மூர்த்தியே!
ஏமனி நெரநம்மு கொந்துமு	—என்னவென்று நாங்கள் ஸ்திரமாக நம்பிக்கொள்வது?
எநதுகு இந்த வாது	—ஏன் எங்களிடம் இவ்வளவு வாதம்?
1. ஜலகமாடுவேள	—ஜலக்ரீடை செய்யும்போது
வலுவலதாசி	—சேலைகளை யொளித்து வைத்துவிட்டு
மம்மு அலயிம்பக லேதா	—எங்களை அலையும்படிச் செய்யவில்லையா?
2. முதிதுல ரம்மனி	—பெண்களைக் கூப்பிட்டு
திலகமு லிடிவேள்	—நெற்றியில் பொட்டிடும் வேளையில்
மோவி நொக்க லேதா	—அவர்களை முத்தமிட்டுவிடவில்லையா?
3. முனு	—முன்பு ஒரு சமயம்
நீவு வெண்ண ஆரகிம்சி	—வெண்ணெயை யுண்டுவிட்டு
தருணுல மோமுன பூயலேதா	—பெண்களுடைய முகத்தில் பூசிவிடவில்லையா?
4. வதினெகாரி சநதமு வவச்சி	—மதினிபோல அருகில் வந்து
பாவட வதலிபசி போலேதா	—எங்கள் ஆடைகளைப் பிடித்திழுத்துவிட்டுப் போகவில்லையா?
5. தொரிகிதிவு அநி சாடி ஜெப்பபோதே	—அகப்பட்டாயென்று உன்மீது கோள் சொல்ல போன அதே சமயத்தில்,
தல்லியுரமுன னுண்டலேதா	—உன் தாயினிடம் சென்று அவள் உடலைக் கட்டிக்கொண்டு விளங்கவில்லையா?
6. காமிம்சி	—மிகவும் ஆசைப்பட்டு
யஞ்ஞபத்னுலு வேடக	—யஜ்ஞ பத்னிகள் வேண்டிக்கொள்ள
வேணுகானமு ஒனர்ப்பலேதா	—வேணுகானம் செய்யவில்லையா?
7. ஆநாடு பொங்கலி	—அக்காலத்தில் இந்திரனைக் குறித்து இட்டு வந்த பொங்கலை
நீகு இடுகொன்னுள்ளு	—உனக்கு இட, (இந்திரன் கோபித்து மழை பெய்விப்பதை நிறுத்திவிட), சில நாட்கள் வரை
வான னுண்டலேதா	—உன் அருளால் மழை பெய்யாதிருந்ததல்லவா?
8. தானு த்யாகராஜவினுதுனி பலுகுலு	—இத்தரணியில த்யாகராஜனால் கொண்டாடப்பட்ட உன்னுடைய வார்த்தைகள்
தப்பிபோதனலேதா	—தப்பாது என்று வாக்களிக்கவில்லையா?

III

இக்கீர்த்தனமும் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளுடைய ஸௌகா சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவைப் பார்த்துக் கோபிகா ஸ்த்ரீகள், அவருடைய விசித்ரமான லீலைகளை எடுத்துக்காட்டி, அப்படிப்பட்டவரை எப்படி நம்புவது என்று கேட்கும் விதமாக இக்கீர்த்தனம் அமைந்துள்ளது. வ்யாஜ நிந்தை.

(12-ம்பக்கம் பார்க்க.)

Broadcast

பிராட்காஸ்ட்டு

ரிகார்டு

புதிய வெளியீடு!

இதுவரையில் கிராமபோன் ரிகார்டில் தோன்ருது
சங்கீத மேடைகளில் மட்டும் நீங்கள் கேட்டுக் களித்திருக்கும்
இரு கர்ணுடக சங்கீத வித்வான்கள்
இவ்வெளியீட்டில் வந்திருக்கின்ருர்கள்.

வித்வான்
மன்ஞர்குடி ராஜகோபால பிள்ளை

G. R. 2415
எதுல ப்ரோதுவோ
பாகம் 1 & 2 —சக்ரவாகம்

வித்வான்
மஞ்சக்குடி ராமச்சந்திர பாகவதர்
தியாக ப்ரஹ்மத்தின் சிஷ்ய பரம்பரையை சார்ந்தவர்

B. 2413
எந்த நிநே வர்நிந்து—முகாரி
ராமச்சந்திர நீதய—சுரட்டி

குன்னகுடி
வெங்கடராமய்யர்
B. 2412
முந்ஞாவண
பாகம் 1 & 2 —தோடி

கிருஷ்ணமூர்த்திராவ்
பங்களூர்
B. 2411
கோபிய பாக்ய—பியாக்
ஸம்ஸார—பாகேஸ்வரி

ஹோஸல
கிருஷ்ணதாஸ்
B. 2414
திருப்பதி வெங்கடேச்வர
ஸ்துதி

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லூ தெரு, கல்கத்தா.

16, ராமபார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S & S. S.க்கு ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:—

தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினங்—சிங்கப்பூர்.

"உயில்"

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து வைத்தாள். அவளைக் கண்டதும் ராஜாராம் ஏதோ ஒரு மின்சார சக்தியால் தாக்குண்டவன் போல உணர்ந்தான். திடுக்கிட்டு நிதானமாய் கவனித்தான் சந்தேகமில்லை அதே பெண் தான்!

வக்கில் சிரித்துக்கொண்டே "ராஜாராம் யோசிக்காதீர்கள். அந்த அயோக்கிய ராஸ்கல் இவளிடம் ஆசை வார்த்தைகள் கூறி மயக்கி என் பொருளை கவர நினைக்கிறான். ஆனால் எல்லா விஷயங்களிலும் பட்டுத் தேறின நானு ஏமாறுகிறவன்! எனக்கு அவன் குணம் நன்றாய்த் தெரியும். ஆனால் என் மகளுக்கு என்ன சொன்னாலும் அது தெரியவில்லை; அவனை முற்றிலும் நம்புகிறாள். உம்முடைய பாக்கியம் ஏற்படவே அவளை என் ஆபீஸுக்கு இன்று தருவிக்கிறேன" என்றார். ராஜாராம் தன்னை மெதுவாக சமாளித்துக்கொண்டு மெதுவாக தன் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டான்.

அவன் மனம் என்ன எண்ணங்களை ஆராய்வது என்று வரையறையில்லாமல் ஏதேதோ சிந்தித்தது இவன் மனதில் நடக்கும் போராட்டங்களை எல்லாம் அறிந்துகொண்ட வக்கீல் "ராஜாராம், நீ என்ன எண்ணுகின்றாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ வீணாகக் கவலைப்படாதே? கண்ணாடியில் உன் முகத்தை நீயே பார்! நேற்றைக்கு இன்று உன் முகம் எவ்வளவு தெளிவாயிருக்கிறது என்பதைக் கவனி! இன்னும் சேர்ந்தாற் போல நாலைந்து நாட்களுக்கு சரியான வைத்தியரிடம் நீ மருந்து சாப்பிட்டால் நீ முற்றிலும் குணமடைவதில் சந்தேகமில்லை! என்னமோ என்னமோ என்று அனாவசியமாய் நீ பயப்படாதே! உனக்கு என் மகளிடம் அன்புண்டு என்று எனக்குத் தெரியும் உனக்கும் இஷ்டமிருந்தால் எனக்கு ஆக்ஷேபணை இல்லை" என்று கூறி முடித்தார்.

ராஜாராம் இன்னதுதான் நடக்கிறது என்று அறியாமல கள்ளுண்ட நரி போல் மெய்மறந்து உடல் பூரித்தான். பங்கஜமும் இவனை இப்பொழுது பார்க்கவும் "என்ன அது! அன்றைக்கு நான் அங்கு பார்த்த அவரா இவர்! அன்றைக்கு எப்படி முகத்தில் களையின்றி சோபையிழந்து குன்றியிருந்தார்? இன்றைக்கு இப்படி புத்திளமை பெற்றவர் போல் காணப்படுகிறார்!" என்று வாய்விட்டுக் கூறி ஆச்சர்யமடைந்தாள். பிறகு அவர்களுக்குக் கலியாணம் நடைபெற்றது என்று நான் கூற வேண்டிய அவசியமில்லை. எப்படி நான் கதைக்கு எழுதாத ஒன்றாகிய உயிலை தலையங்கமாக்கியிருக்கிறேனோ அதேபடி நீங்கள் நான் சொல்லாத ஒன்றாகிய திருமணத்தை கண்குளிரக் கண்டு மகிழுங்கள்.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா

ஜலகமாடுவேள...லேதா:—இங்குக் குறிப்பிடப்படும் கோபிகா வஸ்த்ராபஹரணமாகும்.

முனு...பூயலேதா:—ஸ்ரீக்ருஷ்ணன் கோபிகைகளுடைய வீடுகளில் ஒன்றில் புகுந்து வெண்ணெயைத் திருடியுண்ட காலத்தில், அவரை அவ்வீட்டுக்காரியின் மருமகள் பார்த்துக்கொண்டே வந்துவிட, அவள் மீதே வெண்ணெயுண்டதாகப் பழியேற்படும்படி சட்டென்று அவள் முகத்தில் வெண்ணெயைப் பூசிவிட்டுத் தப்பித்துக்கொண்டார். இம்மாதிரி அநேக சமயங்களில் அவர் செய்தார்.

வதினேகாரி...லேதா:—ஸாதாரணமாக ஒருவனுடைய மனைவியும், அவனுடைய தங்கையும் ஒருவரையொருவர் விளையாட்டாகப் பரிஹஸித்துக்கொள்ளும் உரிமையுடையவர்கள். அதேபோல, க்ருஷ்ணபரமாத்மா ஒரு பெண்ணின் நாத்தியிடம் அப் பெண்ணின் வேஷத்தோடு சென்று, அவளுடைய வஸ்திரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டு அலையவைத்தார் என்பதாக ஒரு விருத்தாந்தம் உண்டு.

காமிஞ்சி...ஓனர்ப்பலேதா:—காட்டில் தம்மோடு மாடு மேய்க்க வந்து பசிதாஹங்களால் வருந்திய கோபகுமாரர்களுக்கு உணவு முதலியவை கொடுக்க ரிஷிகள் மறுத்துவிட்டபோது, ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா அந்த ரிஷிகளின் பத்னிகளுடைய பிரார்த்தனைக் கிணங்கி வேணுகானம் செய்து அவர்களால் திருப்தியோடு ஸமர்ப்பிக்கப்பட்ட போஜனாதிகளைச் சிறுவர்களுக்குக் கொடுத்து, ரிஷிபத்னிகளுக்குத் திவ்ய தரிசனம் அளித்தாரென்றும், அதன்பின் ரிஷிகள் நடந்ததையறிந்து பரமாத்மாவின் ஸேவை தமக்குக் கிடைக்காமற் போனதற்காகத் துக்கஸாகரத்தில் ஆழ்ந்தனரென்றும் விருத்தாந்தம்.

ஆநாடு...வானனுண்டலேதா:—ஒரு ஸமயம், ஆயர்சேரியில் வழக்கம்போல் இந்திரனைக் குறித்து இடப்பட்ட பொங்கலைத் தமக்குச் சமர்ப்பித்து விடும்படி ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா கூற, கோபர்கள் அவ்வாறே செய்தனர். அதனால் இந்திரன் கோபமுற்றுத் தனது ஆக்ஞைக் குட்பட்ட ஸப்த மேகங்களையும் அபாரமாக வர்ஷிக்கும்படி செய்தான். புயலின் கொடுமையையும், மழையையும், குளிரையுந் தாங்கமுடியாமல் வருந்த, பகவான் அருகிலிருந்த கோவர்த்தன கிரியைப் பெயர்த்தெடுத்து, அதனைத் தம் சுண்டு விரலால் தாங்கி நின்று, கோபர்களையும் கோக்களையும் அதன் கீழ்த் தங்கச் செய்து துன்பத்தைப் போக்கினர். பின்பு இந்திரன் அடியோடு மழையில்லாமல் செய்துவிட, பகவானுடைய அருளால் மழை பொழிந்தது என்பது இங்கு அறியவேண்டிய புராணக் கதை.

ஸௌராஷ்டிரம். த்ரிச்ரத்ரிபுடசாபு.

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 15-வது மாயாமாளவகௌளத்திற் பிறந்தது. எனினும் இது ஸம்பூர்ண ராகமே. இது பாஷாங்க ராகமாகும்—அதாவது, இதன் ஜனக ராகத்திற்குரிய ஸ்வரங்களேயன்றி, அந்ய கர்த்தாக்களின் ஸ்வரங்களும் உசிதம்போல் வரக்கூடிய ராகமாகும். இவ்வாறு வரும் அந்ய ஸ்வரங்கள் சதுச்ருதி தைவதமும் கைசிகி நிஷாதமுமாம். இவை சில இடங்களில் இராகச்சாயையை வெளிப்படுத்தும் ஸ்வரங்களாக உள்ளமையால், சிலர் இதன் ஜனகராகத்தை நிர்ணயிக்குமிடத்து, சக்ரவாக மேளத்தையும், ஸூர்ய காந்த மேளத்தையும் கர்த்தாக்களாகக் கூறி மயங்குகின்றனர். எனினும் மாயாமாளவ கௌளத்தின் ஸ்வரங்களே இந்த ராகத்தில் க்ரஹாம்சந்யாஸ ஸ்வரங்களாக விளங்குகிறபடியால் இதன் கர்த்தா ராகம் அஃதேயாகும் என்று அறிஞர் துணிபு. சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதப் பிரயோகங்கள் இந்த ராகத்தில் பூர்வகர்களால்கூடக் கையாளப்பட்டன வென்பது பின் வரும் சதுர்தண்டிப் பிரகாசிகா ச்லோகத்தால் தெளிவாகும்:—"ஸௌராஷ்ட்ர ராகஸ் ஸம்பூர்ண: ஸக்ரஹ: ஸார்வகாலிக: பஞ்ச ச்ருதி தைவதஸ்து க்வசித்ஸ்தானே ப்ரயுஜ்யதே (ஸ்ரீ வங்கடமகி). இவர் குறிப்பிடும் பஞ்சச்ருதிதைவத மென்பது ஸாதாரணமாகச் சதுச்ருதிதைவத மென்று வழங்கப்படுவதேயாகும். ஆரோஹணத்தில் 'ஸரிகமபமதாநிஸா'—என்றும் அவரோகணத்தில் 'ஸ்தாபமகமரிஸ' என்றும், பிறவாறும் பிரயோகங்கள் வழக்கத்தில் காணப்படுகின்றன.

மூர்ச்சனா ப்ரஸ்தாரங்களில் 16-வது மேளத்திற்குரிய சதுச்ருதி தைவத கைசிகி நிஷாதங்களே அதிகமாகப் பிரயோகிக்கப்படுகிறது. எனினும் காகலீ நிஷாதமே ராகச் சாயைக் காட்ட வல்லது. ஸ்நிஸ்-நிஸ்ரி-ஸ்ரிக்ரிஸ்நி-ஸ்நிஸ்தாப-முதலிய பிரயோகங்களைக் கவனிக்கவும். தநீதப-பதநீதப-மநிதபதப-முதலிய பிரயோகங்களில் நிஷாதத்தோடு திரும்பும்போது கைசிகி நிஷாதமே பேசும். அவரோஹணத்தில் சதுச்ருதி தைவதம் தீர்க்கமாக ஒலித்து ராகச் சாயைப் புலப்படுத்தும். ஆனால் பதப-மதப-கமபதமகரி-முதலியவற்றிற்போல் தைவதத்தோடு திரும்பும் பிரயோகங்களில் சுத்த தைவதமே பேசும். இதன் லக்ஷணம் கீத கீர்த்தனாதிகளின் ஆராய்ச்சியாலும், அனுபவத்தாலுமே விளங்கும்

காலஞ்சென்ற பிரபல ஸங்கீத வித்வானும் ஸங்கீத கிரந்தகாரருமான கெ. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தமது "கான பாஸ்கரம்" என்ற (தெலுங்கு) ஸங்கீத கிரந்தத்தில் இதை 17-வது மேளஜன்யமென்று கூறினாராயினும், த்யாகராஜ ஸ்வாமி கீர்த்தனங்களைத் தொகுத்து வெளியிட்ட கிரந்தத்திலும், 1927-ல் இயற்றிய "ஸங்கீத சிந்தாமணி" என்ற நூலிலும் 15-வது மேள ஜன்யமென்றே ஒப்புக்கொண்டிருக்கிறார். நரஸிம்ஹ பாகவதர் கருத்தும் 15-வது ஜன்ய மென்பதேயாம்.

பல்லவி

; * தாரீ	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்நிதா ;	நீதாபா ;	; பாமா	தா ; பா ;	பா , மா	ரிமாரீ ;
; * வ	ம ; ணி ;	நெ ர ;	நம் மு ;	; கொந	து ; மு ;	ஸ்ரீ ;	க்ரு ஷ்ணு ;
; * ஸ்ாநீ	ஸா ; ரீ ;	ஸாரீ ;	பாமாகா ;	ரீ ; ;	ஸா ; ;	; ; ;	; ; ; ;
; * என்	து ; கிந் ;	த ;	வா ;	து ; ;	; ; ;	; ; ;	; ; ; ;

(சரணங்களையெல்லாம் பல்லவியைப்போலவே பாடவேண்டும்.)

கண்ணோட்டம்

டாக்கா சர்வகலாசாலை உபஅத்யக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் ஆர். ஸி. மஜூம்தார்.

சென்னை போலீஸ் ஸர்ஜன் மேஜர் டி. வி. ராஜரத்னத்தின் குமாரர் டி. ஆர். லோகரஞ்சன். டேராடூன் ராணுவக்கலாசாலை மாணவனாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் புதிய ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஸி. எச். கிட்னி.

கெய்ர்கார் சமஸ்தானாதிபதியின் சகோதரர் ராஜ்குமார் விக்ரம் பகதூர் சிங். இங்கிலாந்து ஹெண்டன் போலீஸ் கலாசாலையில் பயிற்சிபெறுவதற்கு லண்டனிலுள்ள இந்தியா ஹை கமிஷனர் இவரைத் தேர்ந்தெடுத் [illegible] திருக்கிறார்.

சாரணச்சிறுவர் இயக்கத்தின் டெபுடி பிரதம கமிஷனராக ராஜப்பிரதிநிதி (இந்தியாவின் பிரதம சாரணர்) யால் நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் எச். டபிள்யூ. ஹாக்.

பம்பாயின் புதிய ஜெர்மன் ஸ்தானீகர் கௌன்ட் வி. போயன் ஹாப்.

பஞ்சாப் மாகாண சட்டசபை ரிபோர்ட்டர் சர்தார் நரீந்தர்ஸிங். இவர் சமீபத்தில் நிமிஷமொன்றுக்கு 88 வார்த்தைகள் வீதம் டைப் செய்து பரிசு பெற்றார்.

சென்னை மாகாண ஐரோப்பியர் சங்கத்தின் தலைவராக இரண்டாவது வருஷமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் டபிள்யூ. கே. எம். லாங்லி.

பிரமுகர்கள்

ஸஸ்ஸக்ஸிலுள்ள (இங்கிலாந்து) கிராலி என்னும் ஊரில் மிஸ்டர் சார்லஸ் தாமஸ் ஓவர்டன் என்ற 83 வயதுள்ளவர் வசித்து வருகிறார். இவர் தேனீக்கள் விஷயங்களில் நிபுணரென்று கூறப்படுகிறது, அவர் தேனீக் கூண்டுகளுடன் காணப்படுகிறார்.

தேன் ஈ வளர்ப்பு

(எஸ். கோபால கிருஷ்ணன்.)

ஆராய்ச்சி முன்னேற்றமடைந்ததும், அநேக புதிய விஷயங்களைக்கண்டுபிடிப்பதும் சுலபமாகத் தோன்றுகிறது. முன்னோர்களின் நினைவிலில்லாத காரியங்களை ஸாதிப்பது இப்போது ஸாத்யமாகிறது. புதியன புகுவதால் ஸௌகரியம் ஏதாவது இருந்தால் பழையனவை விடுவது முறையேயாகும். இந்த உண்மையை அனுஸரித்தே தேனீ பாதுகாப்பு பழைய முறையில் பல மாறுதல்கள் செய்வது அனுகூலமாயும் பலனைத் தரக்கூடியதாயும் தோன்றும்.

தேன் ஈக்களை ஆடுமாடுகளைப் போலவே ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கலாம். ஆடுமாடுகளை வாங்குவதற்கோ பாதுகாப்பதற்கோ வேண்டிய முதல் நம் இதற்கு வேண்டியதில்லை. தேன் ஈக்கள் வேண்டுவது ஒன்றே; அதாவது வசிப்பதற்குத் தகுதியான வீடு. தாங்கள் மெழுகினால் கட்டும் கூடுகள் அதிக உஷ்ணத்தினால் உருகி பாழ் அடையாமலும், தங்கள் ஸந்ததிகள் அழியாமலும் பாதுகாக்க ஒரு சிறு அடக்கமான பெட்டிபோலுள்ள வீடே வேண்டியது. இயற்கையாகவே அவைகளுக்கு ஈசுவரனால் அளிக்கப்பட்ட வீடுகள் மரப்பொந்துகளே. ஆனால் மரப்பொந்துகளைப்போல் அபாயமற்றவைகளாயும், ஸௌகரியங்களுள்ளவைகளாயுமுள்ள வீடுகள் எதாயிருந்தாலும் தேன் ஈக்கள் வசிப்பதற்கு இணங்கும். நாம் அவைகளுக்கு பெட்டிபோலுள்ள வீடு அமைத்துக்கொடுத்தால் மட்டும் போதாது. அவைகளது விரோதிகளான பல்லி, எறும்பு, தவளை, மெழுகுப் பூச்சி முதலியவைகளிடமிருந்து அவைகளைப் பாதுகாப்பது நமது கடமை. இல்லாவிடில் அவைகளுக்கு விரோதிகளிடமிருந்து தொந்தரவு அதிகம் ஏற்படும்; தங்களது காரியத்தைச் சரிவரச் செய்ய முடியாது.

தேன் ஈக்களுக்கு நாம் உணவு ஒன்றும் அளிக்க வேண்டிய அவசியமில்லை. இவைகளுக்கு அவசியமாயுள்ளவை தேன் சொரியும் மரங்களும் செடிகளுமே. உதாரணமாக ஒன்று அல்லது இரண்டு மைல் தூரத்திற்குள் மா, வேம்பு, புளி, தென்னை, புங்கம், இவைபோலுள்ள மரங்களில் ஏதாவது இருந்தால் போதுமானது. ஈக்கள் அலைந்து திரிந்து மேற்கூறிய மரங்களிலிருக்கும் தேன் சொரியும் புஷ்பங்களிலிருந்து தங்கள் பைகளில் தேனை நிரப்பிக்கொண்டு வந்து அறைகளில் சேகரித்து வைக்கும். இம்மாதிரி சோம்பலின்றி சூரிய உதயத்திற்கு முன்னமேயே புறப்பட்டு சூரிய அஸ்தமனம் வரை, தேனையும் சிறு தேன் புழுக்களுக்கு வேண்டிய மகரந்தத் தூளையும் சேமிக்கின்றன. அவை சேகரிக்கும் தேனில் அவை ஆகாரத்திற்குப் போக நமக்கும் பங்கு கிடைக்கிறது.

தேனீக்கள் வசிப்பதற்குத் தகுதியான பெட்டி.

இப்படி வீடுகளில் வளர்ப்பதற்கும், சுத்தத் தேனை எடுக்கவும் நமக்கு இடங்கொடுப்பது அடுக்குத்தேன் ஈ ஒன்றே. இதன் கூட்டம் மரப்பொந்துகளிலும், இருட்டான இடங்களிலும் ஸாதாரணமாக அடுக்கடுக்காகக் காணப்படும். இவைகளை நாம் நமது வீட்டின் பின்புறம் வெளிச்சத்தில் தனிமையில் ஒரே அடையில் கட்டித் தொங்கும் தேன் ஈக்களென்று எண்ணுவது தவறு.

தேன் ஈக்கள் இயற்கையாகவே அடையின்மேல் பாகத்தைவிட்டு இரண்டு அல்லது மூன்று அங்குலங்கள் தள்ளியே புழுக்களை வைக்கும். இதைத் தழுவி, நாம் இவைகளுக்கு அமைத்துக் கொடுக்கும் பெட்டி வீடுகளில் தனித்தனியாக இரண்டு அடுக்குகள் ஒன்றன்மேல் ஒன்று வைக்கும்படி அமைப்பது அவசியமாகிறது. அப்படி வைக்கப்பட்ட கீழ் அடுக்கிலும் மேலடுக்கிலும் சட்டங்கள் பொருத்தி வைக்க வேண்டும். அந்த சட்டங்களில் இயற்கையான தேனடைகளையும் அவைகளுடன் ஈக்களையும் அவைகளது மரப்பொந்துகளிலிருந்து நம் கூண்டிற்குள் மாற்றிவிட வேண்டும். ஈக்கள் முதலில் கீழ் சட்டங்களை நிரப்பிய பிறகேதான், நாம் மேல் அடுக்கை வைக்க வேண்டும். மேல் அடுக்கும் நிரப்பப்பட்ட பிறகு அதனுள் பொருந்தி வைத்திருக்கும் தேனடைகளுடன் கூடிய சட்டங்களை தேன் எடுக்கும் இயந்திரத்தில் வைத்துச் சுற்றினால் தேனடை உடையாமல் தேன் மட்டும் பாத்திரத்தினுட்புறத்தில் சிதறி விழுகிறது. தேனை எடுத்த பிறகு மேல அடுக்கைச் சட்டங்களுடன் கூண்டின்

(16-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான இடம்.

மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

வெண் குஷ்டம்
பெருவியாதி
எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.
விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Panchpota- Bengal, India

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

''என்ன ராஜு! இன்று ரொம்பக் குஷியாய் இருக்கிறாய்''

யார் சொன்னது?

"காசி"

சங்கரியும் ராஜுவும் காலேஜ் நண்பர்கள்; தூரபந்துக்கள் கூட. சங்கரிக்கு இன்னும் கலியாணமாகவில்லை; ராஜுவும் பிரம்மசாரிதான். ஆகவே இவ்விருவரிடையே காதல் தோன்றியிருந்தது என்று நீங்களே ஊகித்துக்கொண்டிருப்பீர்கள்.

ஒரு நாள் ராஜுவும் சங்கரியும் தனித்துப் பேசிக்கொண்டிருந்தபோது ராஜு மேல்நாட்டுக் காதலர்கள் தோரணையில் தன் காதலை வெளியிட்டான்

"கண்ணே! நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ என்னை விவாகஞ் செய்துகொள்வாயா?" என்று கேட்டான்.

"பின் நான் யாரைக் கலியாணஞ் செய்துகொள்ளப்போவதாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்'' என்று திருப்பிக் கேட்டாள்

இந்தப் பதிலைக் கேட்டு ராஜு ஆனந்த சாகரத்திலாழ்ந்து தன் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ள முயற்சித்த சமயம் சங்கரியின் தாயாரும் தகப்பனாரும் வந்துவிட்டார்கள். ராஜு அவர்களிடம் தான் சங்கரியை மணக்க விரும்புவதைத் தெரிவித்துவிட்டு, "ஆனால் இதைப் பற்றி நீங்கள் யாரிடமும் சொல்லக்கூடாது?" என்று கேட்டுக்கொண்டான்.

"ஏன்?" என்று சங்கரியின் தாயார் கேட்டாள்.

"நான் கட்டாயம் என் தோழிகளிடம் சொல்லத்தான் போகிறேன். எந்தப் பெண்ணாவது தனக்குப் புருஷன் நிச்சயமான பிறகு கூட வாயை மூடிக்கொண்டிருப்பாளா? நீங்கள் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களென்று தோன்றுகிறது'' என்று செல்லிச் சங்கரி கோபித்துக் கொண்டாள்.

"இன்னும் நாலைந்து மாதம் கழித்துத் தெரிந்தால் பாதகமில்லை. அதற்குள் சமாசாரம் வெளிவந்தால் என்பாடு கஷ்டமாய் முடியும்" என்றான் ராஜு.

"நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ மர்மம் இருக்கிறதுபோல் தோன்றுகிறது" என்று சங்கரியின் தந்தை சொன்னார்.

"ஒரு மர்மமும் இல்லை. என் மாமா சங்கதிதான் உங்களுக்குத் தெரியுமே. அவர் நான் இப்பொழுது கலியாணஞ் செய்துகொள்வதை விரும்பவில்லை. தவிர உங்கள் குடும்பமும் அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இப்பொழுது அவர் எனக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவிசெய்து வருகிறார். அநேகமாக அவர் சொத்தெல்லாம் எனக்குத்தான் வந்து சேரும். நான் அவரிடத்தில் விரோதமாக நடந்தால் ஆஸ்தியை எந்தக் கோவிலுக்காவது எழுதிவைத்துவிடுவார்'' என்று ராஜு கூறினான்

இந்த விவரங்களைக் கேட்டதும் சங்கரியும் அவள் பெற்றோரும் கல்யாண விஷயத்தைப்பற்றி வெளியே பிரஸ்தாபிக்காதிருக்கச் சம்மதித்தனர்.

அன்று ராஜு தன் மாமனுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் "என்ன ராஜு இன்று ரொம்பக் குஷியாயிருக்கிறாய்?" என்று கேட்டார்.

தன் மாமனுக்கு எங்கே சங்கரி விஷயம் தெரிந்துவிட்டதோ என்று ராஜு பயந்து "ஒன்றுமில்லையே, எப்பொழுதும் போல்தானிருக்கிறேன்" என்று பதிலளித்தான்.

"ராஜு! நீ அந்தப் பெண் சங்கரியோடு பழகுவது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நான் என் சிநேகிதர் சுந்தரத்தின் பெண்ணை உனக்குக் கலியாணஞ் செய்து வைக்கலாமென்றிருக்கிறேன்'' என்றார் மாமா.

"சரிதான்" என்று ராஜு தலையையாட்டினான்.

அன்றுமாலை ராஜு கடைத்தெருப்பக்கம் சென்றபோது முனிஸிபல் மேஸ்திரி மகாதேவனைச் சந்தித்தான்.

"ராஜு ரொம்ப சந்தோஷம். விஷயம் கேள்விப்பட்டேன்" என்றான் மகாதேவன்.

"என்ன விஷயம்?"

"என்னவா? நீயும் சங்கரியும்..."

மகாதேவன் மேலே சொல்லிமுடிக்கும் வரை ராஜுவுக்குப் பொறுக்கவில்லை. காதைப் பொத்திக்கொண்டு வேகமாக நடந்து சென்றான்.

அவன் மனதிலெழுந்த கோபத்துக்கு அளவில்லை. சங்கரியிடமும் அவள் பெற்றோரிடமும் எவ்வளவோ சொல்லியிருந்தும் அவர்கள் தன் வேண்டுகோளை மதியாது தனது விவாகத்தைப்பற்றி வெளியில் பிரஸ்தாபம் செய்துவிட்டார்களென்று எண்ணி வருந்தினான். அவன் சங்கரியிடம் போய்ச் சண்டை போட வேண்டும் என்று எண்ணிக்கொண்டே சென்றபோது யாரோ கையைப் பிடித்துக் குலுக்கியதை உணர்ந்து நின்றான். டாக்டர் ராமசேஷன் எதிரில் நின்றார்.

"அதிஷ்டக்காரனப்பா நீ" என்றார் டாக்டர்.

"யாரு!" என்றான் ராஜு.

"நீதான் சங்கரியும் அதிர்ஷ்டக்காரிதான்."

"என்ன அதிர்ஷ்டம்! நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே."

டாக்டர் ராஜுவைக்கடைக்கண்ணால் பார்த்துச் சிரித்துக்கொண்டே "சங்கரியும் நீயும்..." என்று ஆரம்பித்தார்.

ராஜு முழுவதையும் கேட்க விரும்பாமல் வேகமாகத் தன் வழியே சென்றான்.

"இந்தப் பெண் பிள்ளைகள் காரியமே இப்படித்தான். நான் இந்தக் கலியாண விஷயத்தைக் கொஞ்ச நாள்வரைக்கும் யாரிடமும் சொல்ல வேண்டாமென்று எவ்வளவு தூரம் படித்துப் படித்துச் சொன்னேன். நான் சொல்லிவந்து ஆறு மணி நேரத்துக்குள்ளாகத் தம்பட்டம் அடித்துவிட்டார்களே முனிஸிபாலிடி குப்பை வண்டி மேஸ்திரிக்குக் கூடத் தெரிந்துபோய்விட்டதே. என் மாமா காதில் விழாமலா இருக்கும்?" என்று பலவாறு எண்ணிக்கொண்டே சங்கரியின் வீட்டையடைந்தான்

சங்கரியும் அவள் பெற்றோரும் முன் ஹாலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ராஜு உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக "நல்ல காரியஞ் செய்தீர்கள். நான் கலியாணத்தைப்பற்றி வெளியில் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொண்டதற்குப் பலன் இது பேஷ்! உங்கள் முகத்தில் விழிப்பதற்குக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று மூச்சு விடாமல் சொல்லிவிட்டு அவர்கள் பதிற்சொல்வதற்குள் வெளியே வந்துவிட்டான்.

சங்கரியும் அவள் பெற்றோர்களும் அவன் சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போய்விட்டனர் சங்கரியின் தந்தை ராஜுவைக் கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தார். ஆனால் அவன் திரும்பிப் பாராமல் போய்விட்டான்.

ராஜுவுக்கும் இன்னது செய்வதென்று தெரியவில்லை. தன் கலியாண சமாசாரம் மாமா காதில் விழுந்திருந்தால் அவர் வீட்டில் எப்படி நுழைவது" என்று யோசித்தவண்ணம் ஒரு சந்துப் பக்கம் திரும்பியபோது எதிரில்வந்துகொண்டிருந்த தன்சிநேகிதன் பாஸ்கரனுடன் முட்டிக்கொண்டான்.

பாஸ்கரன் தலையைத் தடவிக் கொண்டே "என்ன ராஜு! சந்தோஷத்தில் ஒன்றும் தெரியவில்லைபோலிருக்கிறது. நீயும் சங்கரியும்' என்று ஆரம்பித்தான்.

மறுபடியும் இந்தப் பல்லவியைக் கேட்க சகிக்காமல் என்ன நானும் சங்கரியும்''? என்று அதட்டினாற்போல் கேட்டான்.

"என்னப்பா? நீயும் சங்கரியும் சேர்ந்தாற்போல் தங்கநாதஸ்வாமி கோவில் திருப்பணி கைங்கர்ய லாட்டரிச் சீட்டு வாங்கியிருந்தீர்களே. அதில் உங்களுக்கு முதற் பரிசு ஐயாயிரம் ரூபாய் வந்திருக்கிறதே" என்றான்.

ராஜுவுக்கு விஷயம் இப்பொழுதுதான் புரிந்தது. இப்பொழுது சங்கரி வீட்டுக்குப் போய் எப்படி மன்னிப்புக் கேட்பது என்பதைப்பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறான்.

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெளுகலாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் லிவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கி தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே லிவலேன் எண்ணெயை உபயோகியுங்கள் அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ 3 ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி (மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 1F) பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:— ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 200, சைனாபஜார் ரோடு,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:— தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, ஜி டி மதராஸ்

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:— பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகப் பிரசித்தி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானலும் பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள்: பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co, (34) Panchpota, Bengal.

6 அணா அனுப்பினல் 24 அங்குல தசாவதார கலர் மாலை அனுப்பப்படும்.

யூனிவர்ஸல் ஏஜன்ஸி

P B No 28 சென்னை

உங்கள் குழந்தைக்கு

டோங்கரேயின் பாலாம்ருதமும்

கோங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலாம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.
2. கீழ்த்த தோஷ்தாவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.
3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.
4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள் :

ஏ. பி. பரேக், 268, சைனாபஜார் ரோட்.

மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே பெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஔஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமமற்றதாக்கி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சுத்த பர்த்ததை உண்டாக்கி, காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்கியத்தை அளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர் பத்தியமில்லை. விலை ரூ 5. பாக்கிங் & தபால் செலவு வேறு.

வேலன்ஸ் மெடிகல் ஹால், காரணீஸ்வரர் கோயில் தெரு, மயிலாப்பூர், மதராஸ்

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள் (செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஆச்சரியமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co, அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ், 187, சைனா பஜார் ரோட், ஜி டி மதராஸ்

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட் ரோட், மதராஸ்

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி, செக்ரிடரி

மூன்றும் ஆன்டு மாதிரிப்பிரதி இனும் கலியுகம் ஆபீஸ் சென்னை

குமாரசஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்

குழந்தைகளின் ஈரல்-குலை-ஜுரக்கட்டி வியாதிகளுக்கு நிகரற்ற குணமுடையது

வைத்தியர், அண்ணாமலை முதலியார் வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



டில்லியில் கட்டப்பட்டுள்ள ஹிந்து மகாசபையின் புதிய கட்டிடம். இதை பாய் பரமானந்த் சமீபத்தில் திறந்து வைத்தார்.

ஆங்கிலப் பெண் கவிகள்

——:[o]:——

(கி. ராமனுதன்)

ஒரு நாட்டின் அறிவு செல்வம் கல்வி நாகரீகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாம். பண்டைக் காலந்தொட்டே இங்கிலாந்தில் "திமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்குமஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும்" மிகுந்த நல்லிசை மெல்லியலார் பலர் பல்கியிருந்தனர். ஆங்கில இலக்கியம் வளர்த்த பண்டிதைகள் புலவரை இங்கிலாந்து ஆண் புலவர்களோடு அணிந்திருந்தது "உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேர்ந்தவர்களாய். நாற்றிசை நாடுகளுக்கும் சென்று" புதுமைக் கலைகள் பல கொணர்ந்து கலைமகட்குப் பாமாலை சூட்டிய புலவர் பெருந்தகைகள் பலர். அவர்கள் பெண்மையுலகுக்கே தனிப் பெருமையளித்தார்கள். ஆதலின் அவர்கள் வாழ்க்கையின் சிறப்பினையறிதல் இன்றியமையாததாகும்

ஜோவானா பெயிலீ

இந்நங்கை கி. பி. 1762-ம் வருஷம் செப்டெம்பர் 11-ம் தேதி பிறந்தவள். 1784-ல் லண்டனுக்கு வந்தாள். அவளது முக்கியமான நூல்கள், "உணர்ச்சிகளின் நாடகம்" "குடும்பக் கதைகள்," மற்றும் பல பாடல்கள். இம்மாது 1851 பிப்ரவரி 23-ம் தேதி உயிர் நீத்தாள்.

இவளது பாடல்களில் உயரிய நீதியின் சுவபாவம் தூக்கி நிற்கிறது. உலகானுபவத்திலிருக்கும் சாதாரண விஷயங்களைக் குறித்தே அதிகமாகப் பாடியுள்ளாள். 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கியத்துள் புகுத்தப்பட்ட சில நவீன ஜர்மன் கற்பனைகள் இவளது கவிதைகளிலும் ஆங்காங்கே தலை காட்டுகின்றன. மனவிதானத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை மிக்க அழகாகச் சித்தரித்துள்ளாள். அவளது நாட்டுப் பாடல்கள் தென்றலின் புதுமையும் மலர்ச்சியும் கொண்டு விளங்குகின்றன. கிராமவாழ்க்கையின் இன்பத்தைப் பற்றியும், இளஞ் சிறுவர் சிறுமியர் விளையாட்டுகளைப் பற்றியும் காதலர் பிணக்குகளைப் பற்றியும் செம்படவர்கள், குடியானவர்கள் முதலியோரின வாழ்க்கை நிலை பற்றியும் செம்பாக்மான சொற்களில் பாடியிருக்கிறாள்.

காதலைப்பற்றிக் கூறும் போது "சிறு குழவிகளின் அன்புக்குரல் போன்று சவுக்கைத் தோப்பினூடே செல்லுகின்றது" என வர்ணிக்கிறார். "பொங்கும் திரை பற்றிக் கவலையில்லை. கேவ்வையான் பசங்கள் கிட்டிவிட்டன. சிறு சுள்ளிகளால் நெருப்பு மூட்டிக் கஞ்சியுடன் காத்திருக்கும் பெண் மக்கள் நமக்காகக் காத்திருப்பார்கள்" என ஒரு செம்படவன் தன் தோழர்களைத் துரிதப்படுத்துவதாகப் பாடியுள்ளார்; "காதல் ஒரு சிறு அருவி. கொடிகளிடையே பதுங்கி அவற்றை அரித்துச் செல்வதுபோல இதயத்துள்ளே பதுங்கி அரித்துக்கொண்டிருக்கிறது" ஆதலின் "காதல் தெய்வத்திடமகு முடி சாய்" எனக் கூறுகிறார். ஒரு மணப்பெண்ணின் உற்சாகத்தை வர்ணிக்கும்பொழுது "அப்படியும் இப்படியும் திரும்புவாள், புன்னகை கொள்வாள், பின்னர் வெட்கத்தால் குனிவாள், கன்னங்கள் சிவக்கும், மேழே நோக்குவாள், ரவிக்கையுடனும், புடவைக் கொசுவத்துடனும் விஷமம் செய்வாள்" என வேடிக்கையாகச் சொல்லுகிறாள்.

பெலீசியா ஹேமன்ஸ்

ஆங்கில இலக்கிய உலகில் ஒரு நக்ஷத்திரம்போல் திகழ்ந்தவள் ஹெமன்ஸ். அவளது பெருமையை பைரன், வேர்ட்ஸ்வர்த் போன்ற பெரும் புலவர்களெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவள் 1793-ம் வருஷம் செப்டெம்பர் 2[illegible]-ம் தேதி லிவர்பூலில் பிறந்தாள். அவளது பிரசித்திபெற்ற நூல்கள் "கதைகளும் சரித்திரக் காக்ஷிகளும்" "காதை வாழ்வு" "மாதர்களின் தஸ்தாவேஜ்" முதலியன. 1803-ம் வருஷம் டப்ளினில் உயிர் துறந்தாள்.

இவளது பாடலில் பெண்மைத் தன்மை மலிந்திருக்கின்றது. அவைகளிலுள்ள நீர்மையில் ஆர்வமும் திடுக்கிடும் செயல்களும்; பிரத்தியக்ஷமாகக் காணக்கூடிய பிரதிபிம்பங்களும் ஒப்பற்ற உயர்வையளிக்கின்றன. அவளது சிரிய விவேகம் மதப்பற்றினாலேயே ஏற்பட்டதாகும். அவள் "ஒரு பரிசுத்தமான ஆத்மா" எனக் கூறியுள்ளார் வேர்ட்ஸ்வொர்த். இயற்கையின்பமும் மக்களின் அன்பும் கலந்த இவ்வுலக வாழ்க்கையை அதிசூக்ஷமமான வருங்காலத்தின் ஒரு ஆரம்பமாகவே கருதினாள். "இயற்கையிலோ, கலைகளிலோ, அன்பிலோ ஆதாவிலோ ஆத்மா நிச்சலனமான சாந்தியடைய முடியாது. உலகத்துக்கு இதயம் இல்லை, வீண் கனவுகாணாதே, உனக்கு உண்மைச் சாந்தி மறுஉலகில்தான்". இவையே அவளது உறுதியான மொழிகள். உலகம் அநித்தியம் என்பதுதான் அவளது பாடல்களின் உன்னத ஸ்வரம். கவலையுற்றபோதினும், ஆறுதல் கொண்டபோதும், நிலையாமை என்னும் தந்தியின் ஒலிதான் எச்சரிக்கையாம். "நவீனகிரீஸ்" என்னும் பாடலில் அழகின் ஆர்வமாகிய தீ ஜ்வாலை விட்டு எரிகிறது. "கசபியான்கா, குழந்தையின் சோகம்" முதலிய பாடல்கள் மனத்தை உருக்குகின்றன.

ஒரு போர்வீரனை "உனது கேடயத்தில் ரத்தம் உலர்ந்திருக்கிறது, முடி புழுதியடைந்திருக்கிறது, கொடிய யுத்தகளத்தினின்றும் திரும்பிய உன் முகம் கோபத்தினாலும் வியாகூலத்தினாலும் துடிக்கும் புருவங்களையுடையதாய் இருளடைந்திருக்கிறது" என வர்ணிக்கிறாள். யுத்தத்திற்குச் சென்றுள்ள தன் புத்திரனைப்பற்றி வினவும் தாய் "ஒரு புருவின் இறகு செருகப்பட்ட முடியணிந்த என் மகனைக் கண்டாயோ? அவன் யுத்தத்தில் எந்தப்

பகுதியிலுள்ளான்'' என மாபு விம்மக் கேட்கின்றாளாம். கசபியான்காவைப்பற்றி ஒரு பெருமை பொருந்திய வீரனின் இருதயமுடையவள், புயலையும் கடலையும் ஒருங்கே ஆள்பவன் போல நின்றான்'' என வர்ணிக்கிறாள். எத்துணை கம்பீரமான மொழிகள்.

பிரௌனிங்

இந்த மங்கை 1809-ம் வருஷத்தில் பிறந்தாள். இளம் வயதில் மிக்க ஆனந்த வாழ்க்கை நடத்தினாள். சின்னாட்களுக்குப் பிறகு தன் தம்பி இறந்த துக்கத்தாலும், ரத்த நாளங்கள் வெடித்ததாலும் நோய்வாய்ப்பட்டாள். பின்னர் 1846-ல் ராபர்ட் பிரௌனிங்கை மணந்தாள். தனிமை வாழ்க்கையையே விரும்பினாள். ஊக்கமும் உழைப்பும கொண்டு பல பாடல்களை இயற்றினாள். 1861-ல் இறந்தாள்.

சிறிது காலத்திற்கு பைரன் ஷெல்லி இவர்களைப் பின்பற்றக் கவிகள் யாத்து வந்தாள். பின்னர் 'தெய்வீகப் புதல்வன்' டென்னிசனைப் பின்பற்றினாள். அவளது கம்பீரமான சிந்தனை வெள்ளம் கவிகளுக்குச் சூக்ஷ்மமான ஒரு நேர்த்தியளித்துள்ளது. வர்ணனைகள் மலிந்திருக்கும் அவளது நடையில் ஒரு கருணையும் கலப்பற்ற அனுதாபமும் தாண்டவமாடுகிறது. இத்தாலியில் ஒற்றுமைக்காக ஏற்பட்ட இயக்கம் அவளுக்குப் புத்துயிர் கொடுத்தது.

காதலனை யிழந்து மீளாத் துயரில் அழுந்தியிருக்கும் ஒரு நங்கை, "எனது வாழ்க்கை மலர் பிடுங்கப் பட்டுக் கசக்கப்பட்டது. வருத்தும் மனத்தே உளைகின்றமையின் பாடலுக்குப் பதில் அழுகை வருகிறது'' எனக் கூறுகிறாள். "மது அதன் திராக்ஷையின் ருசியையே தெரிவிக்கும். அதுபோல் வாழ்க்கை இன்பம், துன்பம் இரு நிகழ்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது." உவமையின் அழகைக் கவனியுங்கள். காதலன் கூறுவது பாருங்கள்: "என் காதல் அடிதங்கள் யாவும் ஊமையாய்ச் சமைந்தன. மசி மறையலுற்றது. மனிதன் சத்தியத்துக்குப் போரிடும் உத்துடன் காதலுக்காகப் பாடுபடுகிறேன். எனது ஆத்மாவின் நீளம், அகலம், உயரம் விஸ்தீர்ணம் யாவும் காதல் தெய்வத்துடன் ஐக்கியமாகிவிட்டது. யுத்தத்தில் மக்கள் மடிவதை சதகோடி மின்னல் முன் சிறு தீபம்போல் மங்கி மடிகின்றனர்'' எனக் கூறுகிறாள்.

எமிலி பிராண்டி

"நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'' எனக் கூறிச் சுதந்திர முரசு கொட்டி ஆண்மையுடன் வாழ்ந்த பெண்கள் திலகம் எமிலி பிராண்டி. அவள் 1819-ம் வருஷம் கிளிப்டனில் பிறந்தாள். பெண்மையின் மிருதுத் தன்மையே அவளிடமில்லை. எத்தகைய கடின வேலையையும் முடிப்பாள். 1842-ல் நாடு கடத்தப்பட்டு பிரசல்சுக்குச் சென்றாள். தேகம் நிரம்பவும் பாதிக்கப் பட்டிருந்தது. ஆயினும் ஆண்மையுடனிருந்தாள். இறக்குந் தருவாயில்கூட படுக்கைக்குச் செல்லாது நின்றுகொண்டிருந்தாள். உலகப்பற்றே அற்ற புனித நங்கை. 1848-ல் க்ஷய ரோகத்தின் காரணத்தால் விண்ணேகினாள்.

அவளது கவிதைகள் உலக முழுதும் ஏற்றுக்கொள்ளத்தக்கன. சிறிய உணர்ச்சிகளை எளிய நடையில் கூறும் திறன் அவளுக்கேயுண்டு. கவிதைகளின் போக்கு விநோதமாயிருக்கும். ஆயினும் பொருத்தமுடையதா யிலங்கும், இறத்தல் போன்ற கோர விஷயங்களைச் சர்வ சாதாரணமாகக் கூறியுள்ளாள். கிழட்டு திகம்பரன் என்னும் பாடலில் உணர்ச்சி சிகரத்தை யடைந்துள்ளது.

அவளது நூதன்மான செய்தியைக் கவனியுங்கள். அமைதியும் இன்பமும் அளியா வாழ்க்கையில் கூறுகிறாள். "துன்பம் கட்டுக்கடங்காது தலைதூக்கி நிற்பது கண்கள் காணவும், செவிகள் கேட்கவும், நாடிகள் அடித்துக்கொள்ளவும், மூளை நினைக்கவும், ஆத்மா சடலத்தால் சூழப்பட்டும் சடலம் உலகபந்தத்தில் கட்டுண்டிருக்கும் போதுமதான்''. வீரம் ததும்பும் அவள் சொற்களில் "எனது ஆத்மா கோழையல்ல; உலகக் குழப்பத்தைக் கண்டஞ்சாது; தளரா நம்பிக்கை என்னைக் காக்கும் "உலகில் காணும் ஆயிரக் கணக்கான மதங்கள் வதங்கிக் கிடக்கும் கொடிகள்போல்தான்'' நித்தியமென்னும் பாறைகளின் மத்தியில் நங்கூரம் பாய்ச்சப்பட்டு நிற்கும் ஆத்மாவை சந்தேகங்களைக் கிளப்பி சலனமுறச் செய்கின்றன. அவளது ஆழ்ந்த சிந்தனையை நோக்குங்கள். "இயற்கை யழைத்துச் செல்லும் வழியின்றி வேறு பாதையில் போகேன். செல்வத்தை இழிவாகக் கருதுகிறேன். என் நெஞ்சத்தை உலுக்கும் சந்தர்ப்பத்தில் உண்மைப் பரம்பொருளிடம் மண்டியிட்டு மன்றாடுவேன்.'' உறுதியும் ஊக்கத்தையும் கவனியுங்கள் "எனக்கு இறப்பிலும் பிறப்பிலும் உலக பந்தத்தால் கவிழ்க்க முடியாத சிறந்த ஆத்மாவைக் கோருகிறேன்! 'எனப்பலவாறு பாடியுள்ளார்.

இங்ஙனம் இங்கிலாந்தில் கலைகள் தழைக்கத் தோன்றிப் புகழொடு விளங்கிய நல்லிசைப் புலமை மெல்லியலார் பலர். இவர்கள் வாழ்க்கை சரிதம் மிகவும் ருசிகரமாயிருப்பினும் விரிவஞ்சி விடுத்தனம். பெண்மைத் தெய்வம் வாழ்க! கலைமகள் புகழ் ஓங்குக

இருமல் ஜல தோஷம்

இவை மாயமாக மறைகின்றன.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளால் இருமல், ஜலதோஷம், ப்ளூ முதலியவற்றை நிச்சயமாக நிவர்த்தியுங்கள். ப்ளூரஸி, நியுமோனியா, மார்பு நோய் இவை வராது. பெப்ஸை வாயில் போட்டுச் சப்புகையில் மருந்து பூர்வமான கிருமிநாச ஆவி சிலேஷ்ம நேரே சுவாசாசயத்தை அடைகிறது; இதனால் தொண்டைக்குச் சமனம் ஏற்பட்டு, ரணம் ஆறுகிறது.

புட்டி 1-க்கு ரூ 1 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பேனி பார்க் டவுன் மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

என்ன அழகான கூந்தல் நீளம்.. மிருதுவு...... ஏனெனில் ஆரோக்கியமானது

வாசனைத் தேங்காய் யெண்ணெய்

தலைமயிர் பிசுக்குத் தட்டாமல் நல்ல பளபளப்புடன் பிரகாசிக்க வாசனைத் தேங்காய் யெண்ணெய்.

ஔஷத வாசனை கூந்தல் டானிக்

தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகுகுன்றி இருக்கிறதா? அப்படியானால் இந்த டாம்கோ ஹேர்டானிக்கை தடவி வாரிப் பாருங்கள்; ஓரிரு நாளில் அதில் உயிரும் ஒளியும் பிரகாசிக்கும்.

இதர டாம்கோ சரக்குகள்

ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிருதுக் கூந்தல் டானிக், ஸோப்ஸ் & கிளிஸரின்

TOMCO

டாம்கோ விற்பனை இலாகா 19-A வாணியர் தெரு, மதராஸ்.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.

(T H 410)

ESTD. 1893.

சவரன் மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல் வெள்ளி சாமான்களும் உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸீ சபில்தாஸ் & சன்ஸ்.

50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்

112, சைனாபஜார் ரோட்டு மதராஸ்.

ஆஸ்திரேலியாவில் படைப் பெருக்கத்திற்கு உபயோகிக்கப்படும் போஸ்டர்களில் ஒன்று

இராணி மங்கம்மாள்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் தாக்கினர். திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட தளவாய் குமரையா அனுப்பப்பட்டிருந்தான். அவுரங்கஜேப் இதையறிந்தும், மஹாராஷ்டிரர்களுக்கு விரோதமாக இருந்த சிக்கதேவராயர் விஷயத்தில் தலையிட விரும்பவில்லை. ஆயினும், அச்சமயத்தில் மஹாராஷ்டிரர்கள் மைசூரைத் தாக்கியதால், தளவாய் திருச்சிராப்பள்ளி முற்றுகையைக் கைவிட்டு நாட்டுக்குத் திரும்பி விட்டார்.

திருவடி ராஜ்யம்

திருவடி ராஜ்யம் என்று வழங்கப்படும் மலையாளப் பிரதேசம் வெகு காலமாக மதுரை நாயக்கர் ஆளுகையின் கீழ் இருந்து வந்தது மங்கம்மாள் பட்டத்துக்கு வந்தவுடன் அக்காலத்தில் திருவடி ராஜ்யத்தை யாண்டு வந்த ரவிவர்மன் தான் செலுத்த வேண்டிய திறைப்பணத்தைச் சரியாகச் செலுத்தவில்லை. அரசி வருஷா வருஷம் ஒரு படையை அனுப்பித்திறையை வசூல் செய்து வந்தாள். அக்காலத்தில் நாடுகளின் நிலைமையை நாம் கவனித்தால், ஒன்று புலப்படும். மலையாளத்தில் மந்திரிகளாக இருந்த 'எட்டு வீட்டில் பிள்ளைமார்' என்பவர் வசமே அரசாங்கம் இருந்தது. அவர்கள் அருவாய் மொழிக் கணவாயை நன்கு காத்திருந்தார்களானால், தமிழ் நாட்டவர்களை தங்கள் நாட்டுக்குள் புடவொட்டாமல் தடுத்திருக்கலாம். ஆனால் அவர்களுக்குள் குழப்பமும் கலகமும் ஏற்பட்டு ஒற்றுமை குலைந்து விட்டது. அரசன் ஒரு சூழ்ச்சி செய்தான். 1696-ம் வருஷம் திறைப் பணம் வசூல் செய்ய வழக்கப்போல் மதுரைச் சேனை வந்தவுடன் அரசன் எதிர்க்கவே இல்லை சேனை அவன் தலை நகரைக் கைக் கொண்டது தன் மந்திரிகளுக்கு எதிராகத் தனக்கு 'வடுகர்கள்' உதவி செய்தால் தான் கோட்டையையும் நாட்டின் ஒரு பகுதியையும் அவர்களுக்குக் கொடுத்து விடுவதாக அரசன் ஆசை வார்த்தை காட்டினன் அதன்படி மந்திரிகளிற் சிலர் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் மற்றவர்கள் ஓடிவிட்டார்கள் இனி மந்திரிகளாற் உபத்திரம் இல்லை யென்பதை உணர்ந்தவுடனே அரசன் திடீரெனத் திரும்பி மதுரைச் சேனையைத் தாக்கினன் இதை எதிர்பாராததால் அச் சேனை சண்டைக்குத் தயாராக இல்லை அதனால் அது சின்னபின்னமாக்கப்பட்டது. இதையறிந்த அரசி தளவாய் நரசப்பையா வசம் ஒரு பெரும் படையைக் கொடுத்து அனுப்பினள். தளவாய் திருவடி ராஜ்யத்தை வென்று பழைய பாக்கி எல்லாவற்றையும் வசூல் செய்ததுடன், வேறு பல பரிசுகளும் பெற்றுத் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பினர்

தஞ்சை விவகாரம்

மொகலாயா உதவியால், அரசி தஞ்சையிடமிருந்து சில பகுதிகளைப் பெற்றதை முன்னமே கூறியுள்ளோம். ஆனால் மொகலாயர்கள் திரும்பி செஞ்சிக்குச் சென்றதும், அக்காலத்தில் தஞ்சையை ஆண்டுவந்த ஷாஜி பாண்டிய நாட்டுக்குள் புகுந்து அந்த இடங்களைத் திரும்பவும் பிடித்துக் கொண்டான. இச் செய்கை மங்கம்மாளுக்குக் கோபத்தை யுண்டு பண்ணியது. ஆகவே அவள் தளவாய் நரசப்பையர் வசம் ஒரு படையைக் கொடுத்து 1700-ம் ஆண்டில் தஞ்சையைத் தாக்க உத்தரவிட்டாள் தளவாய் கொள்ளிடத்துக்கு வடக்கே வந்து தங்கிப் பிறகு சமயம் பார்த்து ரகசியமாக ஆற்றைக் கடந்து நாட்டுள் புகுந்து குடிகளைத் துன்புறுத்தினர் இது தஞ்சை சேனைக்கு கலக்கத்தைக் கொடுத்தது ஆயினும் ஆற்றைக் கடந்து வடக்கே சென்று தளவாய் பாடி இறங்கியுள்ள இடத்தை அழிக்க எண்ணங் கொண்டு தலை நகர்க் காவலையும் விட்டுக் கொள்ளிடத்தை யடைந்தது. ஆனல் ஆற்றைக் கடப்பதற்குத் தெரிந்து எடுத்த இடமும் காலமும் சரியாக இல்லை. கொள்ளிடத்தில் பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. அதனால் தஞ்சைச் சேனையின் பெரும் பகுதி ஆற்றிலே அடித்துக்கொண்டு போகப்பட்டது எஞ்சிய சிலரைத் தளவாய் நரசப்பையர் தாக்கி முறியடித்தார். அக்காலத்தில் தஞ்சையில் மந்திரியாக இருந்த பாலாஜி பண்டிதர் என்பவரை எல்லோரும் சந்தேகித்தார்கள். அவரும் இதையறிந்து தனியே அரசனிடம் சென்று ஒரு வாரத்திற்குள் சமாதானத்தை நிலை நிறுத்துவதாகவும் இல்லாவிட்டால் தாமே தூக்கு மரத்தில் மாட்டிக் கொள்வதாகவும் உறுதிமொழி கூறினர்

உடனே தம்முடைய ஆட்களைப் பல திசைகளிலும் அனுப்பி, வியாபாரிகளிடமிருக்கும் எல்லாப் பணத்தையும் பெற்றுவர ஏற்பாடு செய்தார் நான்கு தினங்களுக்குள் ஐந்து லக்ஷம் வராகன் சேர்ந்தது அதைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி அரசிக்கும், தளவாய் நரசப்பையரின் தகப்பனருக்கும் பல பரிசுகள் பெற்று அனுப்பி யுத்தத்தை ஒரு வாரத்திற்குள் சமாதானத்தைச் செய்து கொண்டார்.

இவ்வண்ணம் தஞ்சையும் மதுரையும் சிநேகமாய் பெற்றதை நிரூபிக்க சீக்கிரத்திலேயே ஒரு காரணம் ஏற்பட்டது மைசூர் அரசர் சிக்கதேவராயர் காவிரியாற்றின் குறுக்கே ஒரு அணைகட்டி அதன் ஜலம் முழுவதையும் மைசூருக்கே உபயோகப்படுத்திக் கொள்ள எண்ணினர். அவ்விதம் செய்தால, தஞ்சை மதுரை நாடுகள் பாழாகிவிடும். அந்த வருஷம் பருவக்காற்று முன்னதாகவே அடித்திருந்

மீண்டும் குடும்பத்தில் சந்தோஷம்!

போன வருஷம் இந்த அம்மாள் உடம்பு துரும்பாயிருந்தாள். அதனல் மனமும் உடைந்திருந்தாள். எத்தனையோ வைத்தியம், எவ்வளவோ டானிக்... ஒன்றும் சுகப்படவில்லை.

"அம்மா, நீங்கள் அலெம்பிக் 'ஹேமோத்ராக்ஸோ மால்ட்' மூன்று மாதம் விடாது சாப்பிட்டுப் பாருங்கள்" என்றார் ஒரு டாக்டர்.

என்ன ஆச்சரியம்! உடம்பில் மளமளவெனப் புதிய ரத்தம் ஊற ஆரம்பித்தது. பசி அதிகரித்தது. தளர்ந்த நரம்புகள் வலுவடைந்தன. இன்று இந்த அம்மாள் தன் வீட்டையும் குழந்தைகளையும் நன்கு கவனிக்கின்றாள். குடும்பத்தில் மீண்டும் சந்தோஷம்!

அலெம்பிக் கெமிகல்ஸ்,
பம்பாய் - பரோடா - மதராஸ்.



போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனப் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ம் ஆற்றில் தண்ணீர் வர
ல்லை. அதனல் தஞ்சையும்
துரையும் ஒன்று சேர்ந்து
மசூர்மேல் படையெடுத்துச்
சல்ல ஏற்பாடுகள் செய்தன.
யினும் அவர்கள் புதப்படுவ
ற்கு முன்பு அணைக்கட்டு
டைந்து தண்ணீர் வந்துவிட்
தால் அந்தப் படையெடுப்பு
ன்றுவிட்டது. அதுவே இப்
பாழுது உள்ள சிக்கதேவ
ாஜசாகரம் என்பதாகும்.

மறவர் நாட்டுத் தோல்லை

மறவர்நாட்டை ஆண்டு
ந்த சேதுபதிகள் முதலில்
துரை நாட்டுக்கு அடங்கின
ர்களாகவே இருந்தார்கள்.
யினும் மங்கம்மாள் அரசு
ற்பதற்குச் சற்று முன்பாக
றவர்நாட்டை ஆண்டுவந்த
ழவன் சேதுபதி மதுரையி
ின்றும் விலகித் தனியாசனுக
ுகிவிட்டான். அன்றி கி. பி.
698-ம் வருஷம் மதுரையை
ம் தாக்கிக் கைப்பற்றிக்
காண்டான். ஆனல் தளவாய்
ரசப்பையர் அதைத் திரும்ப
ும் பிடித்துக்கொண்டுவிட்
ார். சேதுபதியை அடக்கு
தற்காகத் தஞ்சை மன்னரு
டைய உதவியுடன் 1702-ம்
ஆண்டில் தளவாய் மறவர்நாட்
டைத் தாக்கினர். மறவர்
ாடோ காடு மலைகள் நிரம்
பது. சேதுபதியும், ஒரு வார
த்திற்குள் முப்பதினயிரம் நாற்
திணயிரம் ஆட்கள் கொண்ட
டையைத் திரட்டுவதற்கு
வண்டிய வசதிகள் கொண்ட
ன். மறவர்களும் மிக்க வீரம்
பாருந்தியவாகள். இப்படிப்
ட்ட நாட்டின் மேல் தண்டு
டுத்துச் சென்ற தள
ாய் உயிரை யிழந்தார்.
வர் சேனையும் தோற்றுத்
ிரும்பின. தஞ்சையும் மதுரை
ம் ஒன்று சேர்ந்துகொண்ட
தக் கிழவன் சேதுபதி விரும்
வில்லை. ஆகவே அவ்விருவர்க
ுக்கும் விரோதம் செய்துவிட
யற்சி செய்தான். அதனல்
வன் கி. பி. 1709-ம் ஆண்
ல் தஞ்சையைத் தாக்கி அற
தாங்கிக் கோட்டை முதலிய
டங்களைப்பிடித்துக் கொண்
ான்.

அந்திய காலம்

மங்கம்மாளுடைய அந்திய
ாலத்தைப்பற்றிக் கர்ணபரம்
ரைச் செய்தி ஒன்று வழங்கி
ருகின்றது. கடைசியில் இர
ண்டு மூன்று வருஷங்களாக
வள் தளவாய் அச்சையா
ன்பவனுடன் அபவாதத்துக்
டம் உண்டாகும்படி பழகி
ந்தாள் என்றும், அன்றி
யதுவந்த தன் பேரனுக்கு
அரசை ஒப்புவிக்க இசைய
வில்லையென்றும் அதனல் ஜன
்கள் இராணியைப் பிடித்துச்
சிறையிலிட்டுப் பட்டினிபோ
ட்டுக் கொன்றுவிட்டார்கள்
என்றும் கூறப்படுகிறது. அக்
காலத்தில் அரசிக்கு ஐம்பத்து
ந்து வயதுக்குக் குறைவில்லை.
அன்றி அச்செய்தி வாஸ்தவ
ாக இருந்தால், கிறிஸ்தவப்
பாதிரிகள் தங்கள் கடிதங்
களில் கட்டாயம் தெரி
வித்திருப்பார்கள். தவிர,
நாட்டு மக்கள் அரசி
யைப் பெரிதும் போற்றிவந்
தார்கள் என்பதை நாம் அறி
யோம். அவர்கள் அங்ஙனம்
செய்யத் துணிந்தும் இருக்க
மாட்டார்கள். ஆதலின் இச்
செய்தி நம்பத்தகுந்ததல்ல.
அரசி மங்கம்மாள் பதினெட்டு
வருஷங்கள் அரசு செலுத்தி
கி. பி. 1706-ம் ஆண்டு இறந்
ததும் அவளது பேரன்
விஜயரங்க சொக்கநாதன்
அரசை ஏற்றுக்கொண்டான்.

போதுஜன காரியங்கள்

மங்கம்மாள் அரசாண்ட
காலத்தில் நாடு சுபிட்சமாக
இருந்தது. அவள் பல சாலை
களை நிருமாணித்து இருபுறங்
களிலும், மரங்கள் வைத்து
வளர்த்தாள். அன்றி, யாத்திரீ
கர்களுக்கு உபயோகமாகப்
பல சத்திரங்கள், தண்ணீர்ப்
பந்தல்கள் அமைத்தாள். நீதி
பரிபாலனத்திலும் பணக்காரர்
கள் ஏழைகள் என்ற வித்தியா
சம் இல்லாமல் பார்த்து வந்
தாள். ஒரு சமயம் அரசி தன்
தம்பியையே தண்டித்ததாக
வும் கூறப்படுகின்றது. அவள்
காலத்தில் எல்லா மதத்தினர்
களும் எல்லா ஜாதியார்களும்
ஒருவர்க்கொருவர் விரோதப்
பான்மையின்றி கலந்து வாழ்
ந்துவந்தார்கள். அக்காலத்தில்
தஞ்சை மன்னனும், மறவர்
நாட்டுச் சேதுபதியும் கிறிஸ்த
வர்களை வெறுத்து வந்தார்
கள். கிறிஸ்தவர்களை நாட்டை
விட்டுத் துறத்தி விடும்படி
அவர்கள் மங்கம்மாளையும்
கேட்டுக்கொண்டார்கள்.
ஆனல் அரசி அவர்கள் பேச்
சைக் கேட்கவில்லை. ஸௌராஷ்
டிரர்கள் உபா கர்மம் செய்து
பூணூல் தரித்துக் கொள்ள
லாம் என்று அவ்வரசிதான்
கிர்ணயித்துப் பட்டயம்
கொடுத்தாள் என்று கூறப்படு
கின்றது.

மைசூரை ஆண்ட சிக்க
தேவராயரும், மங்கம்மாளும்
சற்றேறக்குறைய ஒரே சமயத்
தில் இறந்தார்கள் என்பதைக்
குறித்து ஒரு கதை கூறப்படு
வதுண்டு. சிக்க தேவராயர்
நிறையப் பணம் சேர்த்து
வைத்தும், குடிகளுக்கு நன்
மை செய்யாமல் இறந்த
தால் நரகத்துக்குப் போகும்
படி நேர்ந்ததாம. அச்சம
யத்தில் தவருக எமனுலகுக்
குக் கொணரப்பட்ட
ஒருவன் பூலோகத்துக்குத்
திரும்பப்போவதை யறிந்த
சிக்கதேவராயர் அவனைக்
கூப்பிட்டுத் தம்முடைய மக
ளைப் பார்த்துத் தம் நிலைமை
யையும், மதுரை மங்கம்மாளை
சுவர்க்கம் அழைத்துச்செல்ல
ஏற்பாடுகள் செய்யப்படுவதை
யும் தெரிவித்து அவளைப்
போலக் குடிகளுக்கு நன்மை
கள் செய்யும்படி தம்முடைய
மகனுக்குப் புத்திமதிகள்
கூறும்படி கேட்டுக்கொண்டா
ராம். மங்கம்மாளிடத்தில் குடி
களுக்கு எவ்வளவு விசுவாசம்
இருந்தது என்பதை இக்கதை
காட்டுகின்றது.

இங்ஙனமாகக் குடிகளுக்கு
நன்மை செய்வதிலேயே கண்
ணும் கருத்துமாயிருந்து நாட்
டை ஆண்ட அரசியை எப்படி
மறக்க முடியும்.

பளபளப்பான வெள்ளை சானிடரி அமைப்புகள்



இந்த பளபள்ப்பான வெள்ளை பேஸின்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுபவை; வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகளின் ரகத்திற்கு இவை இணையானவை.

இவற்றின் விலைகளும் சகாயம் தான்; இவைகள் உடையாதென்பதற்கு உத்தரவாதம்; ஜீவிய கால முழுமையும் உழைக்கும். இந்தியாவிலுள்ள எல்லா பிரபல சானிடரி எஞ்ஜினியர்களிடமும் சில்லரையாகக் கிடைக்கும்.

இத்தகைய சரக்குகளைப்பற்றிய பூரா விவரங்களடங்கிய இலவச புத்தகத்திற் கெழுதுக.

தி பாட்டரீஸ், ராணிகஞ்ச்

எம்-ஏ. பர்ன் & கம்பெனி லிமிடெட். 12, மிஸின்ரோ, கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள்:

பம்பாய் கம்பெனி லிமிடெட், தபாற் பெட்டி 109, மதராஸ்.

BNK 07

"குஜராத்சமாச்சார்" (தின பதிப்பு) "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்திலிருந்து பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, **Gujarat Samachar & Praja Bhandhu**
AHMEDABAD.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொள்ளப்பட்டு அனுசரிக்கப்பட்டன. 1852-ல் ராணி பார்வதிபாய் காலமாகிவிட்டார். தவிரவும் தேசத்தில் மழையின்மையால் துர்ப்பிக்ஷமானது ஏற்பட்டது. இவையெல்லாம் மஹாராஜாவை மிகத் துன்புறுத்தின. 1855-ல் திவானுக்கு நிர்வாக விஷயங்களில் உதவி புரிவதற்காக இரண்டு திவான் பேஷ்கார்கள் நியமிக்கப்பட்டனர். ஜில்லா அதிகாரமும் போலீஸ் நிர்வாகமும் இவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டன. இந்த சமயத்தில், திவான் கிருஷ்ணாராயரின் வழிகள் கிறிஸ்துவப் பாதிரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே ''மதராஸ் அதீநியம்'' என்ற பத்திரிகையில் திவானையும் ரெஸிடெண்டையும் கண்டித்து வியாசங்கள் பிரசுரிக்கப்பட்டன. இதைக்குறித்து சென்னை கவர்னர் ஹாரிஸ் பிரபு மஹாராஜாவிற்கு நீண்ட கடிதமொன்று எழுதினர். அதற்குப் பதில் எழுதுகையில் மஹாராஜா திறமையுடன் சமாதானங்கள் கூறினர். 1854-ல் சமஸ்தானத்தில் ஜனனமரணக் கணக்கு எடுக்கப்பட்டது. 1857-ல்சிப்பாய்க்கலகம் ஏற்பட்டபோது மஹாராஜா பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பக்கத்தில் இருந்து கலகத்தைப் பரவவிடாமல் தடுப்பதற்கான வழிகளைப் பின்பற்றினர்.

தவிரவும் மஹாராஜாவிற்கு கல்வித்துறையில் கணக்கிடவியலாத ஆர்வம் இருந்து வந்தது. திருவனந்தபுரம் இலவச பாடசாலையின் அபிவிருத்தியில் இவர் பிரதான நோக்கங் கொண்டு வந்தார். பள்ளிக்கூடப் பரீக்ஷைகளில் முதலாவதாகத் தேறுபவர்களுக்கு விசேஷ சன்மானங்களும் சர்க்கார் உத்தியோகங்களும் கொடுத்து இவர் வித்யாபிவிருத்தியை ஆதரித்து வந்தார். மிளகு விற்பனையைப் பற்றின முக்கிய விஷயமும் இவரது காலத்தில் தீர்த்து வைக்கப்பட்டது. இதற்கு முன்பு அந்த விற்பனை ஒருவரிடமே கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் சரக்கை வாங்குபவர்கள் அந்த விற்பனைக் காரரிடம் கஷ்டப்பட வேண்டி நேர்ந்தது. இத்தகைய ஸ்திதியை இவர் அகற்றி வைக்கஏற்பாடுகள் செய்தார். இவர் சமஸ்தானத்தின் அபிவிருத்தியை உத்தேசித்து இரண்டு அரச குமாரிகளை ஸ்வீகாரம் செய்துகொண்டார். 1858-ல் பிற்காலத்தில் மிகுந்த கீர்த்திவாய்ந்த (ராஜா ஸர்) டி. மாதவராயர் திவானாக நியமிக்கப்பட்டு, 1872 வரை அதிகாரம் வஹித்தார்.

1858-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் மஹாராஜா சென்னை கவர்னர் ஹாரிஸ் பிரபுவை அழைத்தார். அவருடைய விஜயத்திற்காக அநேகம் ஏற்பாடுகள் விமரிசையாகச் செய்யப்பட்டன. திவான் மாதவராயர் தாம் பதவியை ஸ்வீகரித்துக்கொண்ட காலத்திலிருந்தே சமஸ்தான நிர்வாகத்தைத் திறமையுடன் நடத்துவாராயினர்; அவர் எல்லா விக்கினங்களுடனும் ஜயத்துடன் போராடிவந்தார்.

1860-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 18-ம் தேதியன்று மஹாராஜா சில தினங்கள் தேக அசௌக்யமாக இருந்து காலமானார். அதற்கடுத்த தினம் அவரது ஜன்ம தினமாக இருந்தது. தமது மரண காலத்தில் இவருக்கு 45 வயதுதான். எனினும் திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பரிபாலித்துவந்த சிறந்த அரசர்களுள் இவருக்கும் முக்கிய ஸ்தானம் உண்டு. மஹாராஜா தமது வாழ்க்கையில் அநேகம் நல்ல வழிகளைப் பின்பற்றியவர். இவர் 'சிம்ஹத்வஜ சரித்திரம்' என்ற ஒரு நாடகத்தை எழுதினர். தமது ''விவியன்கிரே'' எனும் ஆங்கில நவீனத்தில் மேனாட்டுப் பொது வாழ்க்கையில் பிரதான ஸ்தானம் வஹித்து இங்கிலாந்து பிரதான மந்திரியாக இருந்த பெஞ்சமின் டிஸ்ரேலி தம்மையே கதாநாயகனாக அமைத்துக்கொண்டதுபோல் இவரும் இந்நாடகத்தில் அமைத்துக்கொண்டார். தினசரி பூஜாக்ரமங்களை நடத்துவதில் அவர் விசேஷ அக்கரைகொண்டிருந்தார். சாதாரணமாகவே எல்லோரிடமும் விசுவாசமாகவே இவர் இருந்துவந்தபோதிலும், இவர் நியாயத்தைச் சரியாக வழங்கும் விஷயத்தில் ஒரு சமயமும் தவறியது கிடையாது. தமக்கு வேண்டியவர்கள் என்று சிலருக்கு இவர் உயர்ந்த பதவிகளைக் கொடுத்துவிடும் ஸ்வபாவத்தையும் கொண்டதில்லை. யாராயிருந்தாலும் சரி, அவரவர் தகுதிக்கேற்ப இவரால் பஹுமானிக்கப்பட்டு வந்தனர். ஒருசமயம் வயது முதிர்ந்த அரண்மனை உத்யோகஸ்தர் ஒருவர் தமக்கு உயர்ந்த பதவியொன்றைக் கொடுக்கவேண்டும் என்று இம்மஹாராஜாவை வேண்டிக் கொண்டார்! இவர் அதற்கு அவர் தகுதியற்றவர் எனப் பதிலளித்தும் அவர் அடிக்கடி அவ்வாறு உபத்திரவம் செய்யலானர். உடனே இவர் அப்பதவிக்கு அவரை ஒரு மனு போடும்படி சொல்லி மனு வந்து சேர்ந்தவுடன் அதிலேயே அவர் தகுதியற்றவர் என எழுதி அனுப்பிவிட்டார். இவ்வுதாரணத்திலிருந்து இவரது நீதி நன்கு வெளியாகும். ஸ்ரீ உத்திரம் திருநாள் எனப்பிரசித்தி வாய்ந்தவர் இம்மஹாராஜா.

* * * *

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

நஞ்சன்கூடு சதவைத்யசாலை

ச்யாவனப்ராச

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதறாஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

உலகப் பிரசித்தி பெற்ற

ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத் தூளை

உபயோகியுங்கள்.



1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

சிறுவர் பகுதி



மெட்ராஸ் காலிங்!

"கிட்டு பேசுவது"

அண்ணன் தம்பிகளே! அக்கா தங்கைகளே! இனிமேல் நம் முதுகை நாம் ரொம்ப ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. கிறிஸ்ட்மஸ்ஸுக்காக நமக்கெல்லாம் லீவு விட்டது உங்களுக்குத் தெரியும். இந்த லீவு நாட்களில் கூட, "என்னடா விஷமம். புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கக் கூடாதா" என்கிறார்கள் வீட்டிலிருக்கிறவர்கள். லீவு நாள் தானே என்று சொன்னதற்கு அப்பா முதுகில் இரண்டு கொடுத்தார். சாயங்காலம், ராத்திரி இவர்கள் வெளியே போவதற்காக—பாட்டுக் கச்சேரி, ஸினிமா, நாடகம் எவ்வளவு வந்து விடுகின்றன. இந்தச் சமயத்தில் பகலெல்லாம் குறட்டை விடுகின்றனர் அடுத்தாத்து ராமுவுடன் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தால் கூட விஷமமாம்.

இவர்கள் தான் வெளியே போகிறார்களே. நம்மையுமாவது அழைத்துக் கொண்டு போகிறார்களா, அதுவுமில்லை வண்டியிலும் கூட்டத்திலும் யார் அழைத்துக் கொண்டு போவது என்கிறார் அப்பா. ஆயினும் நான் பார்க் வேடிக்கைக்குச் சென்றிருந்தேன். அது எப்படி என்று நினைக்கிறீர்கள் அல்லவா! இதை மெள்ள அம்மாவிடம் சொன்னேன். அம்மா அப்பாவைக் கேட்டாள். "முதலிலேயேதான் முடியாதென்று சொல்லி விட்டேனே' என்றார் அப்பா. இதனால் அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது. "உன்னால்தானே நான் வாய் இழக்க வேண்டியிருக்கிறது" என்று அம்மா முதுகில் இரண்டு கொடுத்தாள். பிறகுதான் அப்பாவுக்கு இரக்கம் வந்தது ஆகட்டும் போகலாமென்றார். ஆகையால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டையானால் நம் முதுகில் இரண்டு வாங்கிக் கொள்ள வேண்டும்போலிருக்கிறது.

மறுநாள் என்னையும் என் தங்கை தம்பியையும் பார்க் வேடிக்கைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே சென்றேன். கொஞ்ச தூரத்தில் பொம்மைகள், விளையாட்டு சாமான்கள் கடையொன்று இருந்தது. அதில் என்னைப் போல் பலர் நின்றுகொண்டிருந்தனர் நான் அங்கே ஓடினேன். அம்மாவும் அப்பாவும் என்னைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார்கள். "இதற்குத் தானே இதுகளை அழைச்சுண்டு வரக்கூடாது" என்று இரண்டு பேரும் என்னமோ? அப்பாவைப் பேய் கேட்டேன். முணு முணுத்துக் கொண்டே ஒரு பென்ஸிலைக் கொடுத்துவிட்டு, "டேய் ஜாக்கிரதை, மூனுப பென்ஸிலாகக் கொடுத்திருக்கிறேன் துலைத்தாயோ ழ துநத்

சேர்ந்து என் முதுகை நிமிர்த்தி விட்டார்கள். இவர்கள் மட்டும் இவர்களுக்கு வேண்டிய சாமான் கடைகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வரவில்லையா? நாம் அப்பொழுது அவசரப்பட்டால் கேட்கிறார்களா? ஆகையால் நமக்கு இஷ்டமான சாமானகளை அவசரமாகப் பார்க்கப போனால் இவர்களுக்கு என்ன வந்தது. அன்று வீடு வந்து சேருவதற்குள் பலசங்கடங்கள். தோலை உரித்துவிடுவேன்" என்றார். இந்த ஒரு மூப்ப பென்ஸிலுக்காகப் பயமுறுத்துகிறார். இந்த அப்பா மாஸத்துக்கு ஒரு பேனா துலைக்கிறார். அதற்கு மட்டும் கேள்வி இல்லை. இதுமாதிரி இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். ஆனால் பனி அதிகமாகவிருப்பதால் ஜலதோஷம் பிடித்துக்கொண்டிருக்கிறது தொண்டையும் கட்டிக் கொண்டிருக்கிறது. குட்நைட் எவ்வரிபாடி.

கடைசியாகத் திங்கட் கிழமை வந்தது. அப்பொழுதுதான் பள்ளிக்கூடத்தின் ஞாபகம்வந்தது. புஸ்தகம், நோட்டு எல்லாவற்றையும் தேடி எடுத்து வைத்துக்கொண்டேன். பென்ஸிலைத் தேடினேன். அது மட்டும் அகப்படவில்லை. அதற்குக் கால் தான் முளைத்துவிட்டதோ

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப் பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழவர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ 1-4 கேட்லாக இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு, ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லக் தரித்துக் கொண்டிருந்த தண்டபாணி முதலியாரைக் கண்டு, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தன்னிரண்டு கைகளையும் கூப்பி "எஜமான், என் அம்மணி! நான் தங்கள் இருவர்க்கும் அபயம்! என்னை ரக்ஷிக்க வேணும்; பிள்ளை குட்டிக்காரன்; பெரிய மனிதனென்று நம்பி மோசம் போனேன்; என் வயிறு எரிகிறதே!" என்று முறையிட்டுக் கொண்டு இருவர் பாதங்களிலும் தன் முன் குடுமி தோயும்படி தரையில் வீழ்ந்து குப்புறக் கிடந்தான். இதைக்கண்ட,

தண்டபாணி:—என்ன அய்யரே, எழுந்திரும்; சங்கதியைச் சொல்லும்.

பஞ்ச:—ஸ்வாமி, எழுந்திருங்கள்; சூத்திராள் காலில் வீழ்ந்தால் எங்களுக்குப் பாபமல்லவா?

பிச்சு:—எஜமான், நீங்கள் காப்பாற்றுவதாய்ச் சொன்னால் எழுந்திருப்பேன்.

தண்ட:—காப்பாற்றுகிறேன்; எழுந்திரும். என்ன சங்கதி?

பிச்சு:—எஜமான், உங்கள் முகத்தில் விழிக்க நாணமாயிருக்கிறது. அந்த மனிதனைச் சதமென்று நம்பி உங்களிருவர்க்கும் பொல்லாதவனானேன்.

பஞ்சா:—ஏது? நச்சுமுதலிக்கும் உமக்கும் அத்துக்கொண்டதோ? ரொம்பக் கசிந்தீர்களே?

பிச்சு:—என் பிழைப்பு கேலிப் பிழைப்பாய்விட்டது! பிராமணனுக்குப் பின் புத்தி தானே?

தண்ட:—அது சரிதான், ஓய் சங்கதியென்ன சொல்லும்?

பிச்சு:—என்னத்தைச் சொல்லட்டும்? என் ஆஸ்தியையெல்லாம் உங்கள் சித்தப்பாவிடம் அடைக்கலமென்று வைத்திருந்தேன்! உங்களைப் போல் எத்தனையோ புண்ணியவான்களிடம் கெஞ்சிக் கூத்தாடிப் பிச்சைவாங்கி, ஈக்குக் கொடாமல், எறும்புக்குக் கொடாமல், என் பிள்ளைக்கொளித்து, என் பெண்சாதிக்கொளித்து, மிச்சம் பிடித்த பொருளையெல்லாம்—ஐயோ! என் கும்பி கொதிக்கிறதே! என் பாவம் விடுமா!—எல்லாத்தையும் உங்கள் சித்தப்பா அமுக்கிக்கொண்டார்!

பஞ்சா:—என்ன பொருள்? எவ்வளவு? அவரிடம் எப்போ கொடுத்தீர்?

பிச்சு:—ரொக்கம் நூற்று முப்பது தங்கப் பவுன்; கொஞ்சம் நகையுமுண்டு. மொத்தம் மூவாயிர ரூபாயையும் அமுக்கிக்கொண்டுவிட்டார்.

பஞ்சா:—இவ்வளவும் அவரிடம் எப்போது கொடுத்தீர்?

பிச்சு:—கொடுத்து ஒரு வருஷம்கூட ஆகவில்லை; சென்ற வருஷம் எங்கள் தெருவில் தீப்பிடிக்க வில்லையா? என் வீடு கூரைவீடென்று பயந்து, இவரைப் பால்ய ஸ்நேகிதரென்று நம்பி, பெரிய மனிதனென்று மதித்து, நான் பாவி! என் புத்தியைக் கடன்கொடுத்து, நச்சு முதலியிடம் கொடுத்தேன்.

தண்ட:—இதை அவர் எங்கே வைத்திருந்தார்?

பிச்சு:—தங்கள் பூஜைமடத்து இரும்புப் பெட்டியில் வைத்திருந்தார். இப்போது அங்கேயில்லை. ஏதோ களவு போய்விட்டதென்றும், எஜமான், தாங்கள் திருடிக் கொண்டுவந்து முன் ஒட்டியாணம் கொடுத்ததுபோல், என்பொருளையும் இந்த அம்மணி பஞ்சாமிர்தத்திற்குக் கொடுத்துவிட்டதாயும் சொல்லி, என்னை மோசம் செய்ததும் காணாமல், தங்களையும் தாக்குறைவாய்ப் பேசுகிறார்.

தண்ட:—(கோபமாய் நிமிர்ந்து) அட பலே, அந்தக் கிழட்டு ராஸ்கல் அப்படியா சொன்னான்? மூன்று வருஷம் அடைபட்டிருந்தது ஞாபகமில்லையோ? சரி! ஓய் ஐயரே இப்போ நான் உமக்கு என்ன செய்யவேணும்?

பஞ்சா:—இனிமேல், எந்தக் காலத்திலும் அந்த நச்சுமுதலி முகத்தில் விழிப்பதில்லையென்று நீர் ஆணையிட்டால் தான் நாங்கள் உதவி செய்வோம். நீர் வலுத்த மனுஷன். உம்மை நாங்கள் லேசாய் நம்பமாட்டோம்.

பிச்சு:—இனி அவர் முகத்தில் விழிக்கவா! அம்மணீ! நல்லாய்ச் சொன்னீர்கள்! விழித்தால் நான் பிராமணனா! என் முன் குடுமிமேலாணை இனி நான் தங்களைவிட்டு அவர் கக்ஷியில் சேரவேமாட்டேன்.

தண்ட:—நான் என்ன செய்யவேணும்? சொல்லும். கிழவன் அந்தப்பவுன்களை எங்கே வைத்திருக்கிறான்?

பிச்சு:—எஜமான், தங்களை நம்பி வெளியிடுகிறேன். அக்கம் பக்கம் தெரிந்தால் காரியம் மோசமாய்விடும். இங்கே யாராவது வருவார்களோ? (என்று முன் கதவைத்தாளிட்டுவிட்டு) எஜமான், சென்ற வருஷத்தில் தலைவிகோட்டை அரு. மழ. வீர. நாட்டுக்கோட்டை செட்டி வீட்டில் லக்ஷரூபாய் சொத்து கொள்ளை போய்விட்டதல்லவா?

தண்ட:—ஆம் எனக்குத் தெரியும்; அதற்கென்ன?

பிச்சு:—அந்தக் கொள்ளைச் சொத்துக்களில் உங்கள் சித்தப்பா நச்சு முதலியாருக்கு ஒரு பங்குண்டு. இவர் முன்னமே தண்டனையடைந்த பயத்தால், நகைகள் வேண்டாமென்று ஆயிரத்துமுந்நூறு பவுன்களைமட்டும் எடுத்துக் கொண்டு மற்றச் சொத்துக்களைக் கொள்ளைக்காரருக்குக் கொடுத்து விட்டார். அதில் நானும் பண்ணை வீட்டு உழவன் பறையன் எமகாலனும் கொஞ்சம் வேலை செய்தபடியால், எனக்கு நூறு பவுனும் பறையனுக்கு அன்பது பவுனும் கொடுத்தார். நாங்கள் இருவரும் அதை வைக்க இடமில்லாமல் அவரிடமே கொடுத்து வைத்திருந்தோம். அத்துடன் என் கையிலிருந்த முப்பது பவுனையும் சேர்த்து வைத்திருக்கும்படி நம்பிக் கொடுத்தேன் ஐயோ! நான் எத்தனை பிரயாசைப்பட்டுத் தேடிய பொருள்—இப்போது, "மற்றது போனாலும், அந்த முப்பது பவுனையாவது கொடும்" என்று கெஞ்சினேன். அதுவும்கூட இல்லையென்கிறார் அந்தப் பாவி! என் வயிறு எரிகிறது போல் அவரும் எரிந்து போவார்! பிராமணன் பாவம் அவரை லேசில் விடுமோ!

தண்ட:—சரிதான் ஓய், அய்யரே, பெண் பிள்ளைமாதிரி ஏன் அழுகிறீர்? சும்மா இரும். இத்தனை பவுனும் இப்போதும் வைத்திருக்கிறாரா?

பிச்சு:—அத்தனையும் அப்படியே யிருக்கிறது. ஒன்றுகூட எடுக்கவில்லை. ஒரு இடத்தில் வைத்தபடியே யிருக்கிறது.

தண்ட:—நல்லது; இதை எங்கே வைத்திருக்கிறார்?

பிச்சு:—எஜமான், அதைச் சொல்லவா? தாங்களும் என்னைத் தெருவில் விட்டுவிடப்படாது. ரக்ஷித்தாலும் சரி, பக்ஷித்தாலும் சரி.

பஞ்ச:—சும்மா சொல்லும்; என் ஆசை நாயகர் இவர்கள் மேலாணைப்படி உமக்குத் துரோகம் செய்யவில்லை.

பிச்சு:—(அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு, ரகஸ்யமாய்) இத்தனையும் ஒரு பெட்டிக்குள் வைத்து, புலிக்காடு பாரெஸ்டில் ஒரு இடத்தில் புதைத்து வைத்திருக்கிறோம்.

தண்ட:— புதைத்திருக்கிற இடம் உமக்குத் தெரியுமோ?

பிச்சு:— அதுதானே இப்போ ஒரு ஸாரம். அந்த இடம் எனக்கும் தெரியாது; உங்கள் சித்தப்பாவுக்கும் தெரியாது. எமகாலனொருவனுக்குத் தான் தெரியும்.

தண்ட:—ஒருவேளை இதற்குள் அவனே, உங்களிருவரையுமறியாமல் எடுத்திருப்பானோ?

பிச்சு:—இல்லை. அதைத் தட்டிக்கொண்டு வந்துவிட வேணுமென்று நச்சு முதலியார் எம

ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

காலனைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறார். இந்தச் சூதை நானறிந்து எமகாலனைத் தாக் காட்டி வைத்திருக்கிறேன்.

தண்ட:—அப்படியானால், எமகாலனை நான் கூப்பிட்டுச் சொல்லட்டுமா? அவ்வளவையும் நாமே அமுக்கிக்கொண்டு கிழவன் நச்சு முதலியை மொங்கான் வைத்துவிடுவோம்.

பிச்சு:—அந்த யோசனையின் பேரில்தான், நான் எஜமானிடம் வந்தேன். எஜமான் வாய் திறந்தால், எமகாலன் வந்துவிடுவான். நாளையிரவே பவுன் பெட்டியை இந்த வீட்டிற்குள் கொண்டுவந்து விடலாம். ஆனால், ஏழைப் பிராமணன், என்னை மோசம் செய்துவிடப்படாது. என் பவுன் 130 ஞாபகமிருக்கட்டும். அதற்கு மேல் எஜமானும் அம்மணியும் தயவு செய்து கொடுத்ததை வாங்கிக் கொள்கிறேன்.

என்று விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான். பின்பு தண்டபாணியும் பொருளாசை கொண்ட பஞ்சாமிர்தமும் பவுன் பெட்டி முழுவதையும் தாங்களே வைத்துக் கொண்டு, பிச்சுவையனையும் பறையனையும் மோசம் செய்துவிட வேண்டுமென்றும் பவுன் வந்தவுடன் ஒரு சரியான பவுன் மாலை செய்யவேண்டுமென்றும் ரகஸ்யமாய் ஆலோசனை செய்துகொண்டு, பறையன் எமகாலனுக்கு ஒரு ஆளனுப்பிவிட்டுப் பஞ்சணையிற்படுத்துக் கொண்டார்கள். மறுநாட் பகல்முழுதும் வாராத எமகாலன் இரவு ஒன்பதுமணிக்கு மேல்வந்து தண்டபாணியைத் கண்டு, பிச்சுவையன் தெரிவித்த ரகஸ்யமெல்லாம் உண்மைதானென்றும், தன்னையும் காப்பாற்றுவதாய் சொன்னால் பவுன் பெட்டியையெடுத்துத் தருவதாயும் சொல்லவே, தண்டபாணியும் பஞ்சாமிர்தமும் அவ்வாறே பறையனுக்கு ஆணையிட்டுக் கொடுத்து, மறுநாள் இரவில், தண்டபாணி, எமகாலன், பிச்சுவையன் ஆகிய மூவரும் புறப்படுவதென்று தீர்மானித்துப் பறையனை அனுப்பிவிட்டார்கள்.

குறித்தபடியே, மறு நாளிரவு ஒன்பது மணிக்கு, தண்டபாணி தன் காதலியினிடம் விடை பெற்றுக்கொண்டு, பிச்சுவையன் எமகாலன் சகிதம் பாற்கடலை விட்டுப் புறப்பட்டு, கால் நடையாய் ஈரோட்டு ரஸ்தாவின் வழி இரண்டு மைல் தூரம் சென்று தெற்கே சாய்த்துப் புலிக்காட்டை நோக்கி விரைந்து நடந்தான். இரவு சுமார் பனிரண்டு மணிக்கெல்லாம் மூவரும் பாரெஸ்டுக்குள் புகுந்து விட்டார்கள். பவுன்பெட்டியிருக்குமிடத்தைத் தெரிந்தவனாகிய எமகாலன் முன்னும், தண்டபாணி நடுவிலும், பிச்சுவையன் பின்னுமாக ஒரு ஒற்றத்தடத்தின் வழி

வலுவுக்கு

காட் லிவர் ஆயில்-

ஸ்காட்ஸ் எமல்ஷன்

மும்மடங்கு அதிக

பலன் தருவது

நீண்ட காலமாகத் தெரிந்த விஷயத்தையே சமீப கால ஆராய்ச்சி ஊர்ஜிதப்படுத்துகிறது — அதாவது நோய் காரணமாக ஏற்படும் பலவீனத்தைப் போக்குவதற்கான சத்துக்கள்நிறைந்திருப்பதில் காட்லிவர் ஆயிலைவிடச் சிறந்தது வேறெதுவுமில்லை. A & D விட்டமின்கள் நிறைந்த இது இயற்கை முறையில் வலுவூட்டுகிறது. ஆனால் அது சாதாரணமாக இருப்பதான நிதேகம் மிகவும் மெலிந்துள்ளவர்களுக்கு ஜீரணிக்கமுடியாததாக விருக்கிறது. எனவே பலர் அதை உபயோகிக்க முடிவதில்லை. ஆனால் ஸ்காட்ஸ் எமல்ஷனே மேற்படி ஆயிலின் தன்மை துளியும் கெடாமல் எளிதில் ஜீரணிக்கக்கூடியதாகவும், ருசி மிகுந்ததாகவுமிருக்கிறது. தவிர ஸ்காட்ஸ் எமல்ஷனில் சிறந்த ஹைபோபாஸ்டைட்ஸ் ஆப் லைம் & சோடாவுமிருக்கிறது. ஆகவே சாதாரண காட்லிவர் ஆயிலைவிட இது மும்மடங்கு அதிகப் பலன் தருகிறதென நிரூபணமாகியிருக்கிறது.

தொத்து நோயை எதிர்க்க உதவுவது.

ஸ்காட்ஸ் எமல்ஷனின் கடமை வலுவும், ஜீவ சக்தியும் அளிப்பது மட்டுமல்ல; தொத்து நோயை எதிர்க்கக்கூடிய சக்தியையும் இது வளர்க்கிறது. எனவே, உங்கள் மெலிவைப் போக்குவதற்கான சிறந்த டானிக் இதுவே. 60 வருஷப் பிரக்யாதி பெற்றது.

ஸ்காட்ஸ் எமல்ஷன்...

- சாத காட்லிவர் ஆயிலை விட மும்மடங்கு அதிக பலன் தருவது.
- சதைக்கும், எலும்புக்கும் வலுவூட்டுகிறது.
- நரம்புகளுக்கு உரமளிக்கிறது.
- இரத்தத்தைப் பெருக்குகிறது.
- தொத்து நோயை எதிர்க்க உதவுவது.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடேட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்.

S 38

களையும் தாண்டிச்சென்றார்கள். இவ்வாறு சுமார் ஒருமயில் தூரம் போகவும் நான்கு பக்கமும் குளக்கரைபோல் உயர்ந்த பரும்புகளாற் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கிற்குள் இறங்கி நடு மையத்திற் செல்லவும் பறையன் எமகாலன், "ஸ்வாமி மண்தோண்டிக் கிடக்கிறதே! பெட்டியை யாரோ அடித்துக் கொண்டு போய்விட்டார்களோ என்னவோ?" என்று புலம்பிக்கொண்டு ஒரு குழியை நோக்கி ஆவலுடன் விரைந்து சென்றான். பிச்சுவையன் "இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் வெட்கினற்போல் திரும்பவா?" என்று குழியண்டை நெருங்கினான். இடை நடுவிற் போன தண்டபாணியும் புது மண்ணுடிக் கிடக்கும் குழியைக்கண்டு "ஓகோ பெட்டி தவறி விட்டதோ! என்னைப் பஞ்சாமிர்தம் பரிகாசம் செய்வாளே! அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்!" என்று புலம்பிக் கொண்டு, குழியினோரத்தில் உட்கார்ந்தபடியே குனிந்து உற்றுப் பார்த்து "குழி ஆழமாய்......" என்று ஏதோ சொல்வதற்குப் பாதி வாய் திறக்குமுன், பின்னால் நின்ற எமகாலன் குபீரென்று தண்டபாணியைக் குழியில் குப்புறத்தள்ளி வீழ்த்தினான்! பிச்சுவையன் இதற்குள் பக்கத்திற்கிடந்த ஒரு பெரிய கல்லைத் தூக்கி, "ஆழ்ந்த குழிக்குள் வீழ்ந்து "ஐயோ! ஐயோ!" வென்று அலறும் தண்டபாணியின் தலைமேற் போட்டான். போடவும் தண்டபாணி—பண்ணை வீட்டுப்பட்டத்துக்குமாரன்—நச்சு முதலியின் கொடிய விரோதி—பவுன் மாலையணியக் காத்திருக்கும் பஞ்சாமிர்தத்தின் குமார நாயகன்—பாவி பஞ்சணையின் ஏக புத்திரன்—சூதுவாதற்ற சாது நந்தகோபரின் அருமை மருமகன்—நமது கதாநாயகி ராதாவிற்குப் போலித் திருநாண் பூட்டிய பூமான்—தண்டபாணியின் சிரம் சப்பென்று கூழ்க்கூழாய்ச் சிதைந்து, குழிக்குள்ளிருந்து கிளம்பும் ரத்தம் சில்லென மேலே வந்து பாய்ந்தது. இதற்குள் பிச்சுவையனும் பறையனும் தங்களையறியாமற் கிடுகிடு வென்று பதறும் கால் கைகளை மனோ வலியினால், திடப்படுத்திக் கொண்டு மண்குவியலை விரைவாய்க் குழிக்குள் தள்ளி, இடையிடையே முட்செடிகளையும் பெருங் கற்களையும் போட்டுக் குழியை நிரப்பிவிட்டு, உடனே புறப்பட்டு பின்னால் திரும்பி எறிட்டுப் பார்க்காமல் வேகமாய் நடந்து இரவு இரண்டு மணிக்குள் பாற்கடலை யடைந்து, கீழத் தெப்பத்தில் புண்ணிய ஸ்நானம் செய்து, விடியு முன் அவரவர் வீட்டிற்குப் போய்ப் படுத்துக்கொண்டார்கள்.

(தொடரும்.)

பெண்களின் இயற்கைக் குணங்கள்

விபுலர் கதை

பெண்களின் இயற்கைக் குணங்களைப்பற்றிச் சொல்லும்படி யுதிஷ்டிரர் கேட்கவே பீஷ்மரும் இதே விஷயத்தைப் பற்றி நாரதருக்கும் பஞ்சசூடை என்பவளுக்கும் நடந்ததொரு சம்பாஷணை யிருப்பதாயும் அதைச் சொல்வதாயும் சொன்னார்.

பஞ்சசூடை பெண்களின் இயற்கையைப்பற்றி நாரதருக்குச் சொன்னதாவது:—நல்ல குலத்தில் பிறந்தவர்களாயிருந்தும், அழகுள்ளவர்களாயும் குணமுள்ளவர்களாயுமிருந்தும், சிறந்த கணவனுள்ளவர்களாயிருந்தும் ஸ்திரீகள் கட்டுப்பாடுகளில் நிற்பதில்லை. அது ஸ்திரீகளிடத்திலுள்ள குற்றம். பெண்கள் விருப்பம் வந்தபோது ஐஸ்வரியமும் அழகுமுள்ளவர்களும் தங்களுக்குட்பட்டிருப்பவர்களுமாகக் கணவர்களைத் தெரிந்து கொள்ளும்படி பொருந்துப் பரிசோதிக்கத் திறமையற்றவர். மிக்கப் பாவிகளான புருஷர்களையும் அடைகிறார்கள். எவன் தம்மை வேண்டி நெருங்கிப் பழகி சிறிது உபசாரமும் செய்கிறானோ அவனையே பெண்கள் விரும்புகின்றனர். சுற்றியிருக்கும் ஜனங்கள் பயத்தினால் பெண்கள் கணவர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஸ்திரீகள் நிலையற்ற ஸ்வபாவமுடையவர்கள். இவ்வுலகத்தில் மிகத் தெரிந்த புருஷனும் அவர்களது எண்ணத்தைத் தெரிந்து கொள்வது கடினம்.

ஸ்திரீகள் தங்கள் மாயைகளினால் புருஷர்களை ஏமாற்றுகின்றனர். அவர்கள் கைக்குள் அகப்பட்ட ஆண்பிள்ளை ஒருவனும் விடுபடுவதில்லை. பெண்கள் நகைப்பவனோடு நகைப்பர்; அழுபவனோடு அழுவர்; வேண்டாதவனையும் காலம் நேரும்போது சொற்களினால் வசப்படுத்துவர். ஒருவன் ஆயிரம் நாவுள்ளவனாகவும் ஒரு நூற்றாண்டு ஜீவிப்பவனாகவும், வேறு காரியமில்லாதவனாகவுமிருந்தாலும் ஸ்திரீகளின் குற்றங்களை முற்றும் சொல்ல முடியாமலே மரணமடைவான். சுக்ரருக்குத் தெரிந்த நீதி சாஸ்திரமும் பிருஹஸ்பதிக்குத் தெரிந்த நீதி சாஸ்திரமும் பெண்கள் புத்திக்குமேற்பட்டா

விபுலர் கதை

பிறகு பீஷ்மர் பெண்களைக் காப்பது கடினமென்பதற்கு உதாரணமாக விபுலர் கதையைச் சொன்னார். அதாவது:—முற்காலத்தில் தேவசர்மா என்ற பெயர் பெற்ற ஒரு மஹரிஷி இருந்தார். அவருடைய மனைவியான ருசியென்பவள் அழகில் நிகரற்றவளாகவிருந்தாள். அவளுடைய அழகினால் தேவர்களும் மயங்கினார். தேவேந்திரனும் அவள்மேல் அதிக மோகம் கொண்டான். பெண்களின் நடையை அறிந்த மகாபுத்திசாலியான தேவசர்மா முடிந்தவரையில் தமது பார்யையைக் காப்பாற்றினார்.

ஒரு சமயம் யாகம் செய்ய வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். அப்பொழுது ருசியை எப்படிக் காப்பாற்றுவது என்பதைப்பற்றி ஆலோசித்தார். பிறகு தன் சிஷ்யனான விபுலரை அழைத்துத் தாம் யாகம் செய்வதற்காக வெளியே போவதாயும், தேவேந்திரன் ருசியின்மேல் ஆசை வைத்திருப்பதால் அவளைத் தன் வன்மையளவு காப்பாற்றும்படியும், இந்திரன் பல ரூபங்களையும் எடுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தவனென்றும், யாகம் நடக்கும்போது ஹோமத்திற்கு வைத்திருக்கும் ஹவிஸ்ஸை நாய் தொடுவதுபோல ருசியைக் கெட்ட புத்தியுள்ள தேவேந்திரன் தொடாமலிருக்க வேண்டுமென்றும், அதற்கான ஜாக்கிரதையுடனிருக்கும்படியும் தேவசர்மா சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

இவ்வாறு குரு உத்தரவிட்டுச் செல்லவே குரு பத்னியை எப்படிக்காப்பது என்பதைப் பற்றி விபுலர் பலவாறு சிந்தித்தார். "என் யோகசக்தியினால் குருபத்னியின் இந்தச் சரீரத்தில் புகுந்து தாமரையிலையில் தண்ணீர்த் துளி எப்படிப் பற்றாமல் அசைவற்றிருக்கிறதோ அப்படியே இவள் சரீரத்தில் ஸமாதியோடு பற்றாமலிருப்பேன்" என்று முடிவு செய்தார். அம்மாதிரியே அவர் செய்தார்.

பிறகு ஒரு சமயம் தேவேந்திரன் சிறந்த ரூபத்தை எடுத்துக்கொண்டு ஆஸ்ரமத்திற்கு வந்தான். ருசி வந்தவனை யார் என்று வினவவும் இந்திரன் தான் யார் என்பதைக் கூறி மதனபாதையினால் பீடிக்கப்பட்டுத் தான் வந்திருப்பதாயும் தன்னை வந்து அடையும்படியும் வேண்டிக்கொண்டான்.

சிறந்த மகிமையுள்ள விபுலர் தம் குருபத்னியின் எண்ணத்தையறிந்து தம் யோக சக்தியினால் அவளைப் பலவந்தமாக அடக்கினார். அவர் அவளுடைய எல்லா இந்திரியங்களையும் யோக சக்தி யென்னும் கயிற்றினால் கட்டினார். அவருடைய யோகவன்மையினால் அறிவு மயங்கி மன்மத விகாரமுண்டாகாமலிருக்கும் அந்த ருசியைக் கண்டு வெட்கமுற்ற தேவேந்திரன் அவளை மறுபடியும் அழைத்தும் அவள் சிறிதும் மாறுபாடில்லாதிருப்பதைக் கண்டு இந்திரன் தன் திவ்ய ஞானத்தினால் பார்த்தான். வேறான தம் சரீரத்திலிருந்தும் கண்ணாடியில் பிரதிபிம்பம் இருப்பதுபோலக் குருபத்னியின் சரீரத்தினுள் வசிக்கும் அம்முனிவரைக் கண்டான். உக்ரமான தவமுள்ள அவரைக் கண்டு இந்திரன் அஞ்சி வெட்கி நடுங்கினான்.

உடனே விபுலர் குருபத்னியின் சரீரத்தைவிட்டு இந்திரனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்:—இந்திரியங்களை அடக்காதவனே! பாப எண்ணமுள்ளவனே! கௌதமர் கொடுத்த சாபத்தை மறந்துவிட்டாயா? குழந்





பிரிட்டிஷ் வைத்தியச் சங்கத்தின் காரியதரிசியான டாக்டர் ஜி. வி. ஆண்டர்ஸனை சென்னைக்கு விஜயம் செய்தபோது அவருக்குச் சென்னை வைத்திய சங்கத்தினர் ஒரு உபசரிப்பு நடத்தினர்.

ளைதப்புத்தியுள்ளவனும், மனத்தேர்ச்சியில்லாதவனும் இருக்கிறாய். நான் உன்னிடம் தயையுள்ளவனாயிருப்பதால் உன்னை எரிக்கவில்லை. என் குருவாயிருந்தால் உன்னை எரித்துவிடுவார் இனிமேல் நீ இப்படிச் செய்யாதே. 'நான் மரணமில்லாதவன்' என்ற எண்ணங்கொண்டு நீ இம்மாதிரி பிரவிர்த்திக்கிறாய்? அப்படி அவமதியாதே. தவத்தினால் ஸாதிக்கக் கூடாதது ஒன்றுமில்லை. இந்திரன் இதைக்கேட்டு வெட்கப்பட்டுக்கொண்டே அங்கிருந்து சென்றான்.

பிறகு தேவசர்மாவும் யாகத்தை முடித்துக்கொண்டு ஆஸ்ரமத்திற்கு வந்தார். விபுலரும் இந்திரன் வந்ததையும் நடந்தவற்றையும் விபரமாக குருவுக்குச்சொன்னார். தேவசர்மாவும் விபுலருடைய நற்குணத்தினாலும் நடக்கையினாலும் தவத்தினாலும் இந்திரிய ஜயத்தினாலும் சந்தோஷமடைந்தார். தாம் வரம் கொடுப்பதாயும் அவர் சொல்லவே தர்மந்தவறாமல் இருப்பதையே விபுலர் வரமாகப் பெற்றார்.

பிறகு விபுலர் கடுந்தவம் செய்து ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் சஞ்சரிக்கும் கௌரவத்தைப் பெற்று விளங்கினார்.

சில காலம் கடந்தபின் ருசி தேவியை அவளது சகோதரி அழைத்தாள். அப்பொழுது ஒரு சிறந்த தெய்வப்பெண் மிக்க அழகான உருவமெடுத்துக் கொண்டு ஆகாயத்திற் சென்றாள். அவள் தேகத்திலிருந்து சிறந்த மணமுள்ள சில புஷ்பங்கள் தேவ சர்மாவின் ஆஸ்ரமத்தின் அருகில் பூமியில் விழுந்தன. ருசி தேவியும் அந்தப் புஷ்பங்களைச் சூட்டிக்கொண்டு அங்க தேசத்தரசன் சித்ராதனுடைய மனைவியும் தன் மூத்த சகோதரியுமான பிரபாவதியின்வீட்டிற்கு அவள் அனுப்பிய ஆட்களுடன் புறப்பட்டுச் சென்றாள். பிரபாவதி தன் சகோதரி சூட்டிக்கொண்டுள்ள புஷ்பத்தைப் பார்த்து அது தனக்கு வேண்டுமென்று ருசி தேவியைக் கேட்டாள். ருசி தேவியும் இதைத் தம் கணவரிடம் தெரிவிக்க, அவர் விபுலரிடம் சொல்லி அந்தப் புஷ்பங்களைக் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். விபுலரும் அம்மாதிரியே கொண்டு வந்து கொடுத்து விட்டுச் செல்லுகையில் வனத்தில் இருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி விளையாடுவதைக் கண்டார். சிறிது நேரத்தில் ஒருவன் விரைவாகச் சுற்றுவதாயும் மற்றவன் மெதுவாகச் சுற்றுவதாயும்கூறி வாக்குவாதம் செய்தனர். இதனால் இருவரும் சபதம்செய்ய ஆரம்பித்தனர். ஒருவன், "நம்மிருவரில் எவன் பொய் சொல்லுகிறானோ அவனுக்குப் பரலோகத்தில் விபுலனெனும் பிராம்மணன் கதி தான் வரும்" என்று சொன்னான், மற்றவனும் இதேமாதிரி சொன்னான்.

இதைக்கேட்ட விபுலர் மிகுந்த வருத்தமடைந்தார். அப்பொழுது அவர் மற்றொரு காட்சியையும் பார்த்தார். ஆறு புருஷர்கள் பொற்காய்களாலும் வெள்ளிக் காய்களாலும் சூதாடினர். அவர்களும், "நம்மில் எவன் பொருளாசைகொண்டு அக்கிரமம் செய்ய நினைப்பானோ அவன் பரலோகத்தில் விபுலனுடைய கதியைத்தான் அடைவான்" என்றனர். உடனே விபுலரின் மனதிற்கு ருசிதேவியைக் காப்பாற்றினதால்தான் இது நேர்ந்தது என்று தோன்றியது. "ருசியின் தேகத்தில் பிரவேசித்த விஷயத்தைநான்சொல்லவில்லை. இந்தப்பிழையால் தான் பாபம் உண்டாயிற்று" என்று அவர் நினைத்தார்.

உடனே தேவ சர்மாவிடம் சென்று நடந்ததைச் சொல்லவும் அவர் பின்வருமாறு பதில் சொன்னார்:—சுற்றிக் கொண்டிருந்த அவ்விருவரும்சாதாரணமானவர்களல்ல. அவர்களே இரவு பகலென்றறி சூதாடிய ஆறுபேர்களும் ருதுக்கள். இவர்கள் உன் பாபத்தை அறிந்திருப்பவர்கள். ஒரு மனிதன் பாவத்தில் எண்ணம் வைத்துப் பாவமான காரியத்தை மறைவாகச் செய்து 'நம்மை யாரும் தெரிந்து கொள்ளவில்லை' என்று கவலையற்றிருக்கலாகாது. மறைவாகப் பாவகாரியத்தைச் செய்யும் மனிதனை ருதுக்களும்இரவு பகல்களும் எப்பொழுதும் பார்க்கின்றன. செய்த காரியத்தைச் செய்தபடி எனக்குச் சொல்லாமலிருக்கும் உனக்குப் பாவத்தைச் செய்தவனுக்கு வரும் லோகங்களே கிடைக்கும். நீ செய்ததை குருவுக்கு தெரியாமலே களிப்பினால் நகைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு உனக்கு நினைப்பூட்டுவதற்காகவே நீ கேட்ட சொற்களை அவர்கள் சொன்னார்கள், நீ வியபிசாரத்திற்காகப் பயந்து செய்த காரியத்தை எனக்குச் சொல்லாமலிருந்தாய் என்றறிந்து அவர்கள் உனக்கு அவ்வாறு தெரிவித்தனர். நீ பிழையொன்றும் செய்யவில்லை. கெட்ட நடையுள்ள பெண்களை நீ காப்பாற்றினபடி தான் காப்பாற்ற முடியும்.

மனைவி வேறுவிதமான சிநேகத்தினால் தழுவிக்கொள்ளப்படுகிறாள் மகள் மற்றொரு விதமான சினேகத்தினால் தழுவிக்கொள்ளப்படுகிறாள். ஒரு பெண்ணின் உருவத்தில் ஸந்யாஸிக்கும் காமுகனுக்கும் எண்ணங்கள் வெவ்வேறு. மனத்தை அடக்காமையினால்தான் ஜனங்கள் பெரும்பாலும் மோசம்போகின்றனர். உலகத்தில் வாய் உமிழ் நீரை எச்சிலென்று அருவருப்பதும் பெண்வாயிலுள்ள கள்ளுக்கு ஆசைப்படுவதும்இருக்கின்றன.

கட்டுப்படாத கெட்ட மனமுள்ளவர்களுக்கு மந்திரமுமில்லை, ஆத்மாவுமில்லை, தெய்வமுமில்லை. உள்ளே களங்கமில்லாமல் பரிசுத்தனாய் நீ ருசியினுள் பிரவேசித்ததினால் கெடுக்கப்படவில்லை. நீ கெட்ட நடையுள்ளவன் என்று கண்டிருப்பேனாயின் உன்னைக் கோபத்தினால் சபித்திருப்பேன். ஆனால் நீ நடந்துகொண்ட விதத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

தேவசர்மா மஹரிஷி இவ்வாறு சொல்லி மனைவியோடும் சிஷ்யனோடும் ஸ்வர்க்கம் சென்றார்.

(தொடரும்)

ஸ்ரீமத் பகவத்கீதை

விலை ரூபா 3-0-0

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை.
சென்னை.

வருங்கால பலன்

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட் M R K. மூர்த்தி — ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S K. சுவாமி — ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பி டி. மதராஸ்

ரேகை சாஸ்திரம்

ரேகை பார்ப்பதற்கான சில குறிப்புகள்

“ சக்திதாஸன் ”

வளையும் விரல்கள்.

தன்கைரேகையைத் தானே பார்த்துக் கொள்வதாயினும் சரி, பிரவர்த்திக்கானவழியில் மற்றோர் கைகளைப்பார்ப்பதாயினும் சரி இதற்கான சில விதிகளை அனுசரிக்க வேண்டியது அவசியமாகும்.

போதுமான வெளிச்சத்தில் நிதானமாய் இரண்டு கைகளையும் பார்க்கவேண்டும். இரவில் பார்ப்பது நலமன்று. ஏனெனில் பகற்பொழுதிலேயே அபூர்வ நிகழ்காலத்தைக் குறிக்கும் மெல்லிய சிறு ரேகைகள் கண்ணுக்குப் புலப்படா. எதிர் நோக்கிய பிரகாசமாயிருந்தால் நல்லது. இன்னும் ஆறு அங்தல சுற்றளவுள்ள பூதக் கண்ணடியைக் கொண்டு ரேகைகளைப பார்ப்பது மிக்க சௌகரியமாயிருக்கும். பார்வை தீக்ஷண்யமுள்ளவருக்குக் கண்ணடி வேண்டியதில்லை. நுண்ணிய ரேகைகள் எவ்வளவுக்கு முக்கியமோ அவ்வளவுக்கு கிரக மேடுகளும் கவனிக்கப்பட வேண்டும். ரேகை பாஷையை நன்கு தெரிந்துகொள்ள விரும்புவோர் பல பேர்களின் வாழ்க்கையை அறிந்திருந்த போதிலும், கை ரேகை எவ்வளவுக்கு ஒத்திருக்கிறதென்பதை யூகித்தறிய வேண்டும்.

பொதுவாய் சோதிடம், ரேகை சாஸ்திரம் முதலியவற்றில் குரு, சந்திரன், கிரகஆதிக்கம் பெற்றவர்களே ஈடுபடுவார்கள். இவர்கள் இந்த வித்தையைக்கொண்டுபொருள் சம்பாதிக்க இச்சைப்படமாட்டார்கள் குருபல ஆதிக்க மாத்திரமிருந்து, சனி பல மில்லாதிருந்தால் ரேகை சோதிடங் கொண்டு பிழைக்க நேரிடும். புதனும் உச்சமாயிருந்தால் தொழில் பிரபலமாயிருந்து வரும்.

புருஷர்களுக்கு இடது கை ஜன்ம பலன். கிரக அமைப்பு, ரேகை நிலைமை இவைகளை இதில் கவனித்துக்கொண்டு பிறகு வலதுகையில் எந்தெந்த அம்சங்கள் விர்த்தியிலிருந்து வருகின்றனவென்பதை அறிய வேண்டும். இவ்விதம் இரண்டு கைகளையும் பார்க்காமல் வலது கையை மாத்திரம் பார்த்துப் பலன் சொல்லுவதில் அநேகர் தவறிவிடுகிறார்கள் வாழ்க்கையின் அபிவிர்த்திக்கு இடது கை ஒரு அட்டவணை போலாகும். சாமான்யர் பிரபலஸ்தரானதும் செல்வவான்கள் தாழ்ந்து போனதும் தெற்றென விளங்கும். வலது கை வேலைக்கு முன்னிற்கிறது இடது கை மந்தமாயிருக்கிறது இதனால் இருதய சக்தியின் இணைப்பு வலது காத்துக்கென்பது புலனுகும். ஒரு சிலருக்கு இடது காம் வலக்காத்துக்குள்ள ஊக்கத்துடன் வேலை செய்யப் பார்க்கலாம். புன்னுருக்கு மாறுபாடாய் இடது கை ரேகை விர்த்தியமசத்திலிருக்கும். அதாவது வேலை செய்கிற கையில்தான் நிகழ்காலச் செய்தி வெளியாகும்.

சர்மம்

அடுத்தபடியாய் கவனிக்க வேண்டியது கையின் சர்மம். கையின்புன்புறத்தைப்பார்த்து மிருது அல்லது கெட்டித் தன்மையை அறியலாம். மிருதுத் தன்மை குழந்தை கரம்போலிருக்கும் மிருதுத்தன்மை கூர்மையான அறிவைக் காட்டுகிறது. இத்தகையோர் பொதுவில் உழைக்கவோ, முரட்டுத் தனமாய் நடக்கவோ முடியாது. சொலகேட்டுத் தாள மாட்டார். சனி ஆதிக்கமிருப்பின் கலங்காமல் எத்தகைய கஷ்டத்திலும் தன்னடக்கமுள்ளவராயிருப்பர். குரு ஆதிக்கமிருப்பின் மிதபோஜனம் செய்பவராயும், சிக்கலுக்குட்படாதவராயும், தன்னைத் திருத்திக்கொள்வதில் எச்சரிக்கையாயுமிருப்பார். சூரிய ஆதிக்கமிருந்தால் ரமணீயமான பொருள்களைக் கண்டு ஆனந்திப்பவராயும், ஒற்றுமையில் சிரத்தையுள்ளவராயும், தன் குணத்தை மேன்மைப்படுத்திக்கொள்வதில் கவனமாயுமிருப்பார். புதன் ஆதிக்கம் உள்ளவரை தீய்வழியினின்றும் சீர்திருந்தச்செய்யும். செவ்வாய் ஆதிக்க முள்ளவருக்கு சண்டையிடுந்தன்மை குறையும். படபடப்பான வார்த்தையடங்கும். சந்திராதிக்கம் மானசீகத்தில் அதீதமான பெருவழியில் நடத்திச் செல்லும். சுக்கிராதிக்கம் நல்வழிப்படுத்தும். அற்ப புத்தி சற்றும் அணுகாது.

குழந்தை கையின் மிருதுத் தன்மையை மனத்தில் வைத்து, அதற்கு மாறுன அழுத்தமுள்ள சர்மாமனல் எதிரிடையான பலன் என்பது லகுவில் விளங்கும். குரு ஆதிக்கம் கஞ்சத்தனம், அழுக்கு, சந்தேகம் இவைகளைக் குறிக்கும். சூரியாதிக்கம் துர்ப்புத்தியைக் கொடுக்கும். புதன் ஆதிக்கம் அதிக யோசனைதராது. செவ்வாய் ஆதிக்கம் தாங்க முடியாத கஷ்டத்தைக் கொடுக்கும். சந்திராதிக்கம் கீழ்த்தர யோசனைதரும் சுக்கிராதிக்கம் அன்பையும் கருணையையும் விட்டுக் கெட்ட வழியில் புகுத்திடும். மிருதுத் தன்மை எல்லாவகையிலும் சுமுகத்தையும் அழுத்தத் தன்மையும் மிருகத்தன்மான குணத்தையும் கொடுக்கும் இவ்விரண்டுக்கும் மத்திபதாமு முண்டு.

கையின் அமைப்பு

சர்மம் மிருதுவாயில்லாமலும் கெட்டியாயில்லாமலும், நடுத்தரமாயிருப்பின் குண விசாரத்தில் கலப்படமாயிருக்கும். இந்த நடுத்தாம் பொதுவாய் வியாபாரி, வக்கீல், வைத்தியர், முதலானவர்களுக்கு அமைந்திருக்கும்.

இப்பொழுது கையின் தாராதரத்தை சீர்தூக்கிப் பார்க்க வேணடும். கிரகங்களின் மேடுகளைப் பார்ப்பதினுல் எத்துணை சக்தியுடையவர் என்பதையும், அந்த சக்தி பிரவிர்த்தியிலிருக்கிறதா அல்லது சோம்பலிலும் ஆகாசக் கோட்டை கட்டி பகற்கனவாய்ப் போகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். கையின் தாராதரமென்பது மிருதுவா, கடினமா. அல்லது கவலையற்று சுகவாசியின் கையைப் போலிருக்கிறதாவெனப் பார்க்கவேண்டும். விரலை மடக்கி நீட்டுவதாலும் விரலைக்கொண்டு கையைத்தொட்டுப் பார்ப்பதாலும் இதை அறிந்து கொள்ளலாம். டென்னிஸ் விளையாடுவதாலும், சைக்கில் விடுவதாலும் இன்னும் இதரவேலைகளாலும் கையில் ஆங்காங்கு பொட்டுப் பொட்டாய் அல்லது புள்ளி புள்ளியாகவும் காய்ப்பு ஏற்பட்டிருக்கும். இதைக்கொண்டு கையைக் கடினமெனத் தீர்மானித்து விடக்கூடாது.

சதைப்பற்றிய கையில் கிரக ஆதிக்கம் நன்கு புலப்படினும் பிரவிர்த்தியில் இச்சையின்றி எவ்வித சிரமம் எடுத்துக் கொள்ளாமலும், சுகானந்த வாழ்க்கையிலிருந்து கொண்டு மனோராஜ்யம் செய்வதாலும் ரேகையால் எவ்வித விர்த்தியாம்சமும்பிராது. இத்தகையோருக்கு எல்லாவித செல்வாக்கும்செல்வமும் இருந்தும், அனுபவிக்கத் தக்க நல்லறிவு பெற்றும் சக்தியொன்று குறைந்திருக்கக் காணலாம். இந்த சோம்பேறித்தனம் குரு ஆதிக்க முள்ளவருக்கு அபிலாஷையில் சூன்யத்தையும், சனி ஆதிக்கமுள்ளவருக்கு அதிகரிக்கும விசனத்தையும் சூரிய ஆதிக்க முள்ளவருக்கு கிடைக்க வேண்டியதில் மங்கிய ஒளியையும், புதன் ஆதிக்க முள்ளவருக்குத் தளர்ந்த ஊக்கத்தையும், செவ்வாய் ஆதிக்கமுள்ளவருக்கு தணியும வீரத்தையும், சந்திராதிக்க முள்ளவருக்கு குறையும் யோசனையையும் சுக்கிராதிக்க முள்ளவருக்கு கேடுதரும் அசட்டுத்தனத்தையும் கொடுக்கும்.

மிருதுவான கையைத் தொட்டுப் பார்க்குங்கால் எலும்பும் நரம்பும் தட்டுப்படும. பார்வைக்குச் சற்று சதை பற்றியது போல் தோன்றும். ஆனுலும் அது மிருதுவான கையாகும். சதைப்பற்றிய கையில எலும்பு தட்டுபபடாது. இதுதான் இந்த இரண்டுக்குமுள்ள வித்

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்) சேலம்,

தியாசம். மிருதுவான கையையுடையோர் எப்பொழுதும் சுறு சுறுப்பாயும் சதா சிந்தனையோடு மிருப்பர். இத்தகையோருக்குக் கைரேகையைப் பார்த்து புத்தி விசாலத்துக்கும் தொழில் முன்னேற்றத்துக்கும் வழிகாட்டினுல் அவ்விதமே நடந்து கொள்வார். சதைப்பற்றிய கையையுடையவர் எவ்வித யோசனையையும் ஏற்றுக் கொள்ளார். மிருதுவான கையை யுடையவர் நல்லவழியில் தீர்க்காலோசனையும், புத்திக் கூர்மையும் நன்னெறியில் நடப்பவராயுமிருப்பவர்.

இதற்கு அடுத்தது கெட்டியான கை. பொதுவாய் கெட்டியான கையை யுடையவர்களை விசேஷ ஞானமுள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. கை கடினமானுல் மூளையும் கடினமென்றே கருத வேண்டும். இவர்கள் ஒருவர் சொல்லும் விஷயத்தை மனதில் வாங்கி யோசனை செய்து சீக்கிரமாக முடிவான பதிலளிக்கக் கூடியவராவார். இதனுல் போதுமானபடி மூளை வேலை செய்யத் திறமையற்றதென்பது வெளிப்படை. இத்தகையோர் தேகப்பிரயாசையோடு முயற்சிப்பவராகும்.

துவளும் கைகள்

சிலர் கை ரப்பர் மாதிரி பின்புறமும் வளையக்கூடியதாயிருக்கிறது. முதலாவது விரல்கள் பின்பக்கமாய் வளையாமல் செங்குத்தாயிருக்கும் கெட்டித்தன்மையான கையைப்பற்றித்தெரிந்துகொள்வோம். இது மனோ தர்மத்தை விளக்கத்தக்கது. துவளாத கெட்டிக் கையை யுடையோருக்கு முன்னெச்சரிக்கை, செலவில் செட்டு,குறுகிய புத்தி முதலானவைகள் அமைந்திருக்கும். இத்தகையோர் எத்தகைய புதிய தொழிலை ஆரம்பிக்கவோ, அது விஷயமாய் யோசிக்கவோ அச்சப்படுவார். வாழ்க்கையில் பரம்பரையாய் முன்னோரைப் பின்பற்றுவார்கள். சற்றும் காலத்தை அனுசரித்து நடக்க ஒப்பார். யோசனை, கொடுக்கல் வாங்கல், விவகாரம் வியாபாரம் முதலியவைகளில் ஓர் எல்லைக் குட்பட்டேயிருப்பர். இவர்களைப் பெரிதும் அந்தரங்க விஷயங்களில் நம்பலாம். இவர்களிடம் நாவடக்க முண்டு.

துவளும் கையில் விரல்கள் நீட்டும்போது செங்குத்தாய் நிற்கும். பின் நோக்கி விரல்களை வளைத்தால் சிறிது துவண்டு வளையக் கூடியது. இது நடுத்தரமானது. இத்தகையோர் தன்னடக்கமாயும் காலத்தை அனுசரித்து நடந்து கொள்வார். எந்த விஷயத்திலும் தங்கள் சக்தியுள்ளவரை முயற்சிப்பார். ஆனுல் உண்டு இல்லை என்ற முடிவுவரை செல்லார். செல்வத்தை வேண்டுவோருக்கு ஓரளவுடன் கொடுக்குதவுவர். இரக்கப்பட்டாவது, தர்மத்துக்காவது பணத்தைச் செலவிடுவதில் வெகு நிதானமாயிருப்பர். மனித வாழ்க்கைக்குள்ள கஷ்டத்தை உணரக்கூடியவர். அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ள முன்யோசனையு மிருக்கும்.

விரல்கள் பின்னோக்கி இன்னும் அதிகமாய் வில்லைப்போல வளைந்திடுவது மூன்றுவது அமைப்பு. இதைப் படத்தில் காண்க எவ்வித சிரமமாவது கஷ்டமாவது இல்லாமல் வளைக்கப்படக்கூடியது இதனுல் எலும்புகளுங்கூட வளையுந் தன்மையுடையதென்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். இது மூளையின் கூர்மையைக் குறிக்கிறது. நுணுக்கமான விஷயங்களையும் அதி சீக்கிரம் அறிந்துகொள்ளும் அற்புத ஞானம் வாய்ந்தவர். இத்தகையோர் மனம் வெகு வேகமும் பிரகாசமுமுடையது. மனோ பாவம் உன்னத நிலையில் லகுவில் மாறி விடும். பல தொழிலும் செய்வர். ஆழ்ந்தயோசனையிராது என்றாலும் மிகுந்த இரக்கமும் தாராளக் கொள்கையு முண்டு. பணத்தைச் சேமிப்பதில் ஆசைப்படுபவரன்று. சுகபோகத்தை நாடிச் செல்வத்தை வேண்டியவாறு செலவிடுவர். சுய நலம் முன்னிற்கும். மற்றவர் சொல்லும் யோசனை சாதகமாயின் ஏற்றுக் கொள்வர். ரேகைகள் நன்கு அமையப்பெறின் தன்னடக்கம், முன்னெச்சரிக்கை, தீர்க்காலோசனை முதலியவைகளுடன் பிரசித்தமாய் வாழ்வார்.

இனி அடுத்த படத்தைப் பாருங்கள். விரல்கள் கணுவிலிருந்தே வளைந்திருக்கின்றன. இது சங்கீத நாட்டமுள்ளது. புகழும் கீர்த்தியுங் கொடுக்கும். ஆனுல் ஆராதூரித்தன மிருக்கும். ஒரு கை கெட்டியாயும மற்ற கை துவண்டுமிருக்கும். இதனுலுள்ள மனோவிர்த்தியையறியலாம். இடது கை கெட்டியாய் வலது கை துவண்டிருந்தால் மனோவிர்த்தியைக் காட்டுகிறது. பொதுவாய் கை துவண்டும் கெட்டியாயும் இருப்பதைக் கொண்டும் கஞ்சத்தனத்தையும் தாராளத் தனமையையும் லகுவில் அறிந்து கொள்ளலாம்.

புறங்கையில் ரோமம்

கையின் பின் பக்கத்தில் சிலருக்கு ரோமங்கள் அடர்ந்திருக்கும் இத்தகையோர் மிகுந்த பலசாலியாகவும், இருதயபலம், ஈரல் பலமுள்ளவர்களாகவும் இருப்பர். இவர்கள் தேகத்திலுள்ள ரத்தத்தில் ஒருவித இரும்பு சத்து மிகுந்துள்ளதாய் வைத்திய முறைப்படி சொல்லப்படுகிறது. ஆகையால் சிந்தையையடக்கும் யோகபலமுண்டு. எப்பொழுதும் ஆரோக்கியமாயிருப்பதால் சந்தோஷமாயிருக்க விரும்புவர். மனம் போல் சுகபோகத்தை அனுபவிப்பர்.

நீலகிரி

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானுலும் அனுப்பபடும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0

கூட்ஸ வண்டி மூலமாக (Goods Train)

1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0

1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடேட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடேட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

மகரத்வஜம்

ஆரோக்ய சஞ்சீவி

(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

Tele:—"SIMILICURE." Box 643 CAL.

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமன்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணு

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bombay

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

இந்திய மக்களுக்கு

இந்திய

தேயிலை

பானம்

தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. ஜாதி மத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக்கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கீடான பானம் வேறெதுவுமில்லை யென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்று மில்லை உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத் தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.

தேத்தண்ணீர் தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவை. உலர்ந்த பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்தியத் தேயிலையைப் போட்டுக் கொதிக்கும் ஜலத்தைவிடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டிப் பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக்கொள்ளவும்.

உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை

IK 35

Regd. No. 2514

குழந்தைகளின் உடல் மெலிவைப் போக்கி, அவைகளுக்கு வலுவும், புஷ்டியும் ஆரோக்கியமும் அளித்து, அவைகளை நோய் நொடியில்லாமல் பாதுகாக்கக் கூடியது இதுவே

மாலர்ஸ் சூப்பர் - ஸ்ட்ரெங்த் காட் லிவர் ஆயில்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

MOLLER'S

Super Strength COD LIVER OIL

மொத்த ஏஜண்டுகள்:

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—*Editor* C. R. Srinivasan, B.A.